# வைகுண்ட ஏகாதசி
# சொர்க்க வாசல் திறப்பு




# [நாரதன் கொடுக்கும் ஞானக்கனியின் விளக்கம்]

ஒரு மாங்கனி அது இனிப்பாக இருக்கும்பொழுது, அந்தச் சுவையின் மணத்தையே வெளிப்படுத்தும். காயாக இருக்கும் பொழுது புளிப்பின் உணர்ச்சியைத் தூண்டும்.

இதைப் போல மனிதனாக இருக்கும் நாம் காயின் பருவத்தில் இருக்கும் பொழுது கனியாகும் உணர்வின் தன்மையை நாம் கவர்ந்தால் கனியும் தன்மையை அடைகின்றோம்.

ஆனால் கனியாவதற்கு முன் வெப்பத்தின் தணல் அதிகமாக இருந்தால் வெம்பி மரத்திலிருந்து விழுந்து விடும். வெம்பிய நிலைகள் கொண்டு வித்து உருவாகாது… அதனுடைய சத்தும் நமக்குள் நல்லது ஆகாது.

ஆகவே "வெம்பாத நிலைகள் கொண்டு…"

1.கனியின் தன்மையை அடைந்த கனியைப் போல

2.உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு மெய்ஞானியின் உணர்வைத் தனக்குள் வளர்த்து

3.உணர்வுகள் அனைத்தும் கனியாகி உயிருடன் ஒன்றிய கனியின் தத்துவமாக

4.ஏழாவது நிலையாக ஒளிச் சரீரம் பெற வேண்டும்..

இதைத்தான் கந்த புராணத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது.

நாரதன் கனியைக் கொண்டு வந்து, சிவனிடம் கொடுக்கின்றான். சிவன் யார்…? நமது சரீரமே.

நாரதன் கனியைச் சிவன் கையில் கொடுத்து உலகை எவர் ஒருவர் முதலில் வலம் வந்து விடுகின்றாரோ அவருக்கு இந்தக் கனியைக் கொடுத்துவிடு என்று சொல்கின்றான்.

அப்பொழுது… ஆறாவது அறிவின் தன்மை உலகை அறிந்து கொள்ளும் நிலைகள் கொண்டு…

1.எண்ணத்தில் விரிவடைந்து புற உலகத்தை எண்ணுவோமேயானால்

2."உலகைச் சுற்றத்தான்…" அந்த உணர்வு செல்லும்.

இந்த ஆறாவது அறிவு "தெரிந்து கொண்டேன்…" என்ற நிலை வரப்பபடும் பொழுது "எனக்கு வசதி இருக்கிறது…" என்று எண்ணத்தால் எண்ணினாலும் ஒன்றை மறந்து விடுகின்றான்.

எவ்வாறு மறந்து விடுகின்றான்...? ஞானம் இருந்தும், தான் உணர முடியாத நிலைகள் எவ்வாறு ஆகுகின்றது...? என்று காட்டுகிறார்கள்.

1.'நான் ஒரு நொடியில் உலகை வலம் வந்து விடுகின்றேன்' என்று

2.எண்ணத்தால் வேகமாகச் சென்று விடுகின்றான் முருகன் (ஆறாவது அறிவு).

அதே சமயம்... சிவன் அருகில் விநாயகன் இருக்கும் பொழுது

1.பேரண்டமும் பெரு உலகமும் உன் அன்னை தந்தைதான்.

2.பேரண்டம் சுழல்வதற்கும்... அந்தப் பேரண்டத்தின் ஆற்றல் உன் அன்னை தந்தைக்குள் இருக்கின்றது.

3.இது தான் உனக்கு உலகம்.

4.அவர்களைச் சுற்றி... நீ இந்த வினையாகச் சுற்றி... நிலைக்கு வந்து சேர்.

5.அந்தக் கனியின் தன்மையை நீ பருகலாம்...! என்று நமக்குத் தெளிவாக எடுத்து காட்டியுள்ளார்கள்.

கனி - நாரதன் என்று உணர்த்தப்படுவது என்ன...?

ரிஷியின் மகன் நாரதன். மனிதனின் உயர்வின் தன்மை கனியாக்கியவன் அந்த மகரிஷி. அந்தக் கனியின் தன்மை அங்கிருந்து வரப்படும் பொழுதுதான்... "நாரதனைக் கனியாக்கி"

1.கனியினைச் சிவனிடம் கொடுக்கப்படும் பொழுது பேரண்டமும் பேருலகமும் அன்னை தந்தை

2.அந்த உணர்வுடன் ஒன்றிய நிலைகள் கொண்டு நீ அந்தக் கனியைப் பெறு.

3.அதனைக் கொண்டு நீ கனியாகு.

உன் ஆறாவது அறிவு கொண்டு... "எங்கே இருக்கும்...?" என்றும் "எங்கோ இருக்கும்...!" என்றும் கடவுளைத் தேடாதே...!

உனக்குள், உயிரான நிலைகள் அன்னையாகவும் தந்தையாகவும்... அதனின் உணர்வின் சத்து உனக்குள் தாயாகவும் சிவசக்தியாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உடலை மறவாதே...!

சிவனையும் நமக்குள் இருக்கும் சக்தியையும் நமக்கு எவ்வளவு தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள் ஞானிகள்...? எதை வினையாகச் சேர்க்க வேண்டும்...? விநாயகன் யார்...?

1.அந்த ஞானியின் உணர்வை உனக்குள் வினையாக்கி அதை நீ கனியாக்கு

2.கனியானவன் அவன்...! என்று தெளிவாக எடுத்துரைத்தான் அந்த மகாஞானி.

நாம் இங்கே என்ன செய்கின்றோம்...? அந்த உட்பொருளைக் காணாதவாறு, கதையைக் கதையாகத்தான் காணுகின்றோமே தவிர... மெய்ப்பொருளைக் கண்டுணரும் ஆறாவது அறிவைத் தனக்குள் செலுத்தி... உட்பொருளைக் கண்டுணரும் நிலைகள் இல்லை.

மெய்ப்பொருளைக் கண்டுணர வேண்டும் என்று கவிப்புலமை கொண்டு, உணர்வின் வேட்கை கொண்டு நாதங்களின் சுருதியாக அதற்குள் பிரித்தாலும்... கவிப்புலமைகள் பல வந்தாலும்... புலமை பெற்றவருக்கே தெரியும்.

அருணகிரிநாதர்... "நாத விந்துகள் ஆதி நமோ நமோ..." என்று பாடினார்.

1.உடலுக்குள் எந்த உணர்வின் தன்மையை எடுத்தோமோ நமது உயிருக்குள் சேர்க்கப்படும் பொழுது அது ஆவியாகின்றது.

2.அந்த உணர்வின் தன்மை நமது உடலாகும் பொழுது "நாத விந்துகள் ஆதி நமோ நமோ...!"

நாம் எதையெல்லாம் எடுக்கின்றோமோ எந்த குணத்தை எடுக்கின்றோமோ

1.அந்த உணர்வின் சத்து உடலுக்குள் சேர்க்கும் பொழுது, "ஆதி..."

2.உடலாகச் சேர்க்கும் பொழுது "நமோ நமோ..."

பாடலின் உட்பொருள் தெரியாமல் பாடிக் கொண்டு போய் விடுகின்றோம். இவையெல்லாம் நமது ஞானிகள் கண்ட பேருண்மைகள். நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வது மிகவும் நலம்.




## ஓ...ம் ஈஸ்வரா குருதேவா...! என்று வெறும் சொல்லாகச் சொல்லக் கூடாது

நமது உயிரை "ஓ...ம் ஈஸ்வரா குருதேவா..." என்று ஞானிகள் அழைத்தார்கள். "ஓ...ம் ஈஸ்வரா குருதேவா..." என்று நாம் சொல்லும் பொழுதெல்லாம் அது வெறும் சொல்லாக இல்லாமல் "புருவ மத்தியில்" நினைவைச் செலுத்திப் பழகுதல் வேண்டும்.

அவ்வாறு பழகிக் கொண்டால்

1.நமது உயிரை குருவாகவும் நாம் எண்ணியதை ஈசனாக உருவாக்கக் கூடிய நிலையை நாம் உணர முடியும்.

2.நாம் எதை எண்ணுகின்றோமோ அது உடலுக்குள் ஊடுருவது நமக்குத் தெரிய வரும்.

நம் உடலில் ஜீவ அணுக்களை இயக்கும் “உயிர்…” நம் நெற்றியின் புருவ மத்தியில் உட்புறமாக இருந்து கொண்டு உடலை இயக்கும் மூலக்கருவாக… குருவாக இருக்கின்றது.

உடலில் விளைந்த அனைத்து குணங்களின் உணர்வலைகளையும் உயிர் தன் ஈர்ப்பில் அணைத்துக் கொண்டு “மறு உடல் உருப்பெறச் செய்யும்…” கருவினையாகச் சேர்த்துக் கொண்டு இருக்கின்றது.

நமது கண்கள் ஒன்றைப் பார்க்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அதிலிருக்கும் உணர்வுகளைக் கண்கள் கவர்ந்து, நமது ஆன்மாவாக மாற்றுகின்றது. மூக்கு வழியாகச் சுவாசித்த பின் உயிரில் பட்டு அந்த உணர்வுகளை நாம் அறிகின்றோம்.

“ஓ…ம் ஈஸ்வரா குருதேவா…” என்று சொல்லுகின்ற போதெல்லாம் புருவ மத்தியில் உயிரை எண்ணி அதைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்து விட்டோமென்றால் நாம் அதன் வழி (உயிர் வழியாக) உணர்வுகளை உடலுக்குள் செலுத்தலாம்.

வாழ்க்கையில் பயன்படுத்துவது மூக்கு வழி சுவாசித்து, உணர்வுகளை உடலுக்குள் செலுத்துவது. இதை அறிந்து கொண்டாலும்…

1.தீமையான உணர்வுகள் உள்ளுக்குள் செல்லாதபடி
2.அடுத்த நிமிடம் “ஈஸ்வரா” என்று உயிரை எண்ணி அதை இடைமறிக்க வேண்டும்.

ஏனென்றால்… நம்முடன் எவ்வளவு நல்லவர்கள் பேசினாலும் அந்த உணர்வில் அவர்கள் குடும்பக் கஷ்டம் உடல் நோய்கள் போன்ற உணர்வுகள் கலந்து சொல்லாக வரும்.

அவர்களைக் கண்ணால் பார்க்கும் பொழுது, நமது ஆன்மாவில் கலந்துவிடும். அவர்கள் பேசும் பொழுது, இந்த உணர்வுகள் கலந்தே வரும். இருந்தாலும்

1.அந்த நிலையிலும் “ஈஸ்வரா…” என்று சொல்லி உணர்வை இடைமறித்து அதைப் பலவீனப்படுத்த வேண்டும்.
2.அவ்வாறு “ஈஸ்வரா…” என்று சொல்லும் நிலைகள் வலுப் பெறும் பொழுது தீமையை அது மாற்றும்.

அதே சமயத்தில் அவர் பலவீனமான நிலைகளைச் சொல்லும் பொழுது, மகரிஷிகளின் அருள் சக்தி அவர் உடலில் படர வேண்டும், என்று நாம் எண்ண வேண்டும்.

ஒரு பாத்திரத்தில் சமைத்து அதை எடுத்துப் போட்டால் தான் அது ருசியாக இருக்கும்.

கஷ்டம் என்று ஒருவர் சொல்லும் பொழுது "அடடா... உங்களுக்குக் கஷ்டமாகப் போய்விட்டதா...?" என்று நாமும் சொன்னோம் என்றால் அதையே தான் சமைத்து மீண்டும் எடுத்துக் கொடுக்கின்றோம் என்று பொருள்.

அதனால் இதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இன்று பெரும்பாலோனோர் "ஏதோ ஒரு தெய்வம்தான் நமக்கு அனைத்தையும் செய்கின்றது..." என்று கருதுகின்றனர். ஆனால் நம் செயல்கள் நிகழ்வது அனைத்தும் நம் உயிரான கடவுளால் தான் என்பதை அறிய வேண்டும்.

"மகரிஷிகளின் அருள சக்தி நான் பெற அருள்வாய் ஈஸ்வரா..." என்று தியானித்திடும் பொழுதும் சரி... அல்லது "ஐயோ...! என் வாழ்க்கையில் இவ்வளவு சோதனைகளா...? எனது கஷ்டங்கள் தீராதா...?" என்று வேதனைப்பட்டாலும் சரி

1.அங்கே சாதனைகளையும் அல்லது சோதனைகளையும் உண்டாக்கிக் கொடுக்கின்ற குருவாக இருப்பது

2.நமது உயிர் தான்...! என்று அறிய வேண்டும்.




# “உயிரை…” நாம் இறுகப் பிடித்துக் கொள்வோம்

எமன் என்பது என்ன…? எமன் என்பது நமது எண்ணம்தான், அதாவது வேதனையான உணர்வை நாம் தொடர்ந்து சுவாசித்தோமானால் அது நமக்குள் பாசக்கயிறாக மாறுகின்றது.

எருமை எவ்வாறு அறிவில்லாமல் இருக்கின்றதோ அதனின் அறிவில்லாத செயலைப் போன்று

1.நாம் எடுக்கும் வேதனையான உணர்வால் நமது எண்ணங்கள் சிந்தித்துச் செயல்படும் திறனை இழந்து விடுகின்றன.

2.நாம் சிந்திக்கும் திறனை இழந்து அறியாமையால் உழலப்படும் பொழுது நமது எண்ணங்கள் வலுவிழந்து

3.நம் வாழ்வில் துன்பங்களும், துயரங்களும் சூழ்ந்து கொள்கின்றன.

அதாவது… எருமை எனும் அறியாமையை வாகனமாகக் கொண்டு எமன் எனும் எண்ணம் நமக்குத் தண்டனை கொடுக்கின்றது என்பதை நமக்கு உணர்த்தவே… அன்று மகரிஷிகள் எமனுக்கு எருமையை வாகனமாக வைத்து எமன் சித்திரபுத்திரன் கணக்குப் பிரகாரம் மனிதருக்குத் தண்டனை வழங்குகின்றான் என்று காண்பித்தருளினார்கள்.

அருள் ஞானிகளுடைய உணர்வுகளை நாம் எண்ணி மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெற வேண்டும் என்று ஏங்கும் பொழுது அந்த எண்ணம் நமக்குள் சித்திரபுத்திரனாக இயக்கம் பெறுகின்றது.

இந்தச் சித்திரபுத்திரன் கணக்குப் பிரகாரம் நம்முடைய எண்ணம் இருளைப் போக்கும் எமனாக நின்று தீமையை அகற்றிடும் செயலாக அருள் மகரிஷிகளின் அருள் உணர்வுகள் மலர்கின்றது. நாம் உயர்ந்த எண்ணங்களை எண்ணுகின்ற பொழுது அவைகள் நமக்குள் சித்திரபுத்திரனாகின்றன.

1.கண்களால் நாம் எதையெல்லாம் பார்க்கின்றோமோ அவை நமக்குள் புகுந்து புத்திரனாக (அணுக்களாக) விளைகின்றன.

2.நாம் ஈர்க்கும் மகரிஷிகளின் அருள் உணர்வுகள் நம்மிடத்தில் உள்ள

3.இருள் சூழ்ந்த அசுரத்தனமான நிலைகளைக் கொல்கின்றன… தீமையை அகற்றுகின்றன.

4.தீமையில்லாத உலகத்திற்கு உயிர் நம்மை அழைத்துச் செல்கிறது

5.என்றும் ஒளிச்சுடராக நிலைத்திருக்கும் “பெருவீடு பெருநிலை” என்ற நிலையை அடையச் செய்கின்றது.

ஆக… நாம் “பிறவா நிலை” அடைகின்றோம்.

“மார்க்கண்டேயனை…” நோக்கி எமன் பாசக்கயிறை வீசுகின்றபோது மார்க்கண்டேயன் “சிவலிங்கத்தை” அணைத்துக் கொள்கின்றான். இதில் “லிங்கம்” என்பது உயிர்… ஆவுடை என்பது உடல்.

அங்கே மார்க்கண்டேயன் ஆவுடையைப் பிடித்துக் கொள்ளாது லிங்கத்தை இறுகப் பிடித்துக் கொள்கின்றான். அதாவது “உயிரை இறுகப் பிடித்துக் கொள்கின்றான்…”

ஆகவே நமக்கு இந்த வாழ்க்கையில் எத்தகைய துன்பம் வந்தாலும்

1.நாம் எண்ணியது அனைத்தையும் இந்த உயிர்தான் இயக்குகின்றது என்றும்

2.நாம் எண்ண வேண்டியது எது…? என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒளியாக நின்று நாம் எண்ணியது அனைத்தையும் அந்த எண்ணத்திற்குத் தக்கவாறு இயக்கிக் காட்டி, அந்த உணர்வின் தன்மையை நமக்குள் உணரச் செய்வதும்… இயக்குவதும்… அதை நமக்குள் அடையச் செய்வதுமாக இயங்கிக் கொண்டிருக்கும் நமது உயிரில் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்ற எண்ணத்தை எண்ணி நம் கண்ணின் நினைவு கொண்டு பார்த்து அதை ஏங்கி எடுத்தோமென்றால் அது சித்திரபுத்திரனாகச் செயல்படுகின்றது.

அருள் ஞானிகளின் உணர்வுகள் நமக்குள் சக்தி வாய்ந்ததாகச் சேர்கின்ற பொழுது, அருள் ஞானிகள் அவர்களுக்குள் இருந்த தீமையை அகற்றிய அதே உணர்வுகள் நமக்குள்ளும் வளர்கின்றது.

“ஈஸ்வரா…” என்று உயிரை எண்ணித் “துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாம் பெற வேண்டும்…” என்ற நினைவை உங்கள் உடலுடன் இணைக்கப்படும் பொழுது “என்றும் பதினாறு” என்ற நிலைத்த ஒளிச் சரீரத்தை நீங்கள் அடைய முடியும்.

வாழ்வில் சஞ்சலம், சலிப்பு, வெறுப்பு, கோபம், போன்ற உணர்வுகள் உங்களிடத்தில் தோன்றும் பொழுது உங்கள் உயிரை எண்ணி ஆத்ம சுத்தி செய்து தீமைகள் அருகில் வராது உங்களை நீங்கள் காத்துக் கொள்ள வேண்டும்.

1.மார்க்கண்டேயன் ஆவுடையைப் பிடிக்கவில்லை

2.லிங்கத்தை… அதாவது “உயிரை இறுகப் பிடித்துக் கொண்டான்…”

அது போன்றே நீங்கள் அனைவரும் “துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா’ என்று உயிரை எண்ணி ஒளியின் சரீரமான அந்த உணர்வின் தன்மையை நீங்கள் எடுக்கும் பொழுது உங்களுக்குள் தீமையை அகற்றிடும் சக்தியாக ஒளியின் சுடராக விளைகின்றது.

இத்தகைய நிலைகள் நீங்கள் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக எமது அருள் உரைகளை உங்களுக்கு உபதேசிக்கின்றோம்.

1.நீங்கள் எந்த அளவிற்கு இந்த உபதேசங்களைக் கூர்ந்து கவனிக்கின்றீர்களோ

2.அந்த அளவுக்கு ஆழமாக யாம் கொடுக்கும் அருள் உணர்வுகள் உங்களிடத்தில் பதிவாகின்றன.

யாம் கொடுக்கும் உபதேசங்களை அடிக்கடி நினைவு கூர்ந்து, வாழ்வில் கடைப்பிடித்து “துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா...” என்று உயிரை எண்ணி ஏங்கும்போது அங்கே உங்களுக்கு உடனடியாக அந்தச் சக்தி கிடைத்து உங்களிடத்தில் தீமைகள் சேராது காக்கப்படுகின்றீர்கள்.

இந்த உபதேசத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளும் அனபர்கள் அனைவரும்...

1.இருள் சூழ்ந்த இவ்வுலகில் நஞ்சினை நீக்கி நன்மைகளைப் பெறும் விதமாக... துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும்

2.மெய்ஞானிகள் காட்டிய உண்மைகளை அறிந்து

3.மார்க்கண்டேயனைப் போன்று “என்றும் பதினாறு” என்ற நிலைத்த ஒளிச் சரீரத்தைப் பெற வேண்டும் என்று நெஞ்சில் அவா கொண்டு

4.நம் குருநாதர் காட்டிய மெய்வழியைக் கடைப்பிடித்து வரும் அன்பர்கள் அனைவருக்கும்

5.“எமது அருளாற்றலைப் பூரணமாக வழங்குகின்றோம்...!” (ஞானகுரு)




# துருவ நட்சத்திரத்தின் அருளை "உயிரில் அழுத்தம் பட வைத்து…" உயிர் வழி நுகர வேண்டும்

நம் உயிரான ஈசனை வணங்கி… தாய் தந்தையரை வணங்கி… ஞானகுரு சற்குரு சாமியம்மா அருளாசி பெற வேண்டும் என்று எண்ணி ஏங்கி

1.ஞானகுரு நம்மில் ஆழமாகப் பதிவு செய்துள்ள அருள் ஞானிகளின் அருள் உணர்வை எண்ணி ஏங்கி

2.கண்ணின் நினைவை உயிருடன் ஒன்றி

3.நினைவை துருவ நட்சத்திரத்தின்பால் விண்ணை நோக்கிச் செலுத்தி

4.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று “வலுவாக எண்ணி ஏங்க வேண்டும்…”

அவ்வாறு, வலுக்கூட்டிய இந்த எண்ணத்தை, துருவ நட்சத்திரத்திடம் “ஊடுருவிச் செலுத்தி…”

1.நமது கண்களின் காந்தப் புலனறிவால்

2.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகளைக் கவர்ந்து ஈர்த்து

3.”உயிரில் அந்த அழுத்தம் பட வைத்து…” உயிர் வழி நுகர வேண்டும்.

“இப்பதிவின் துணை கொண்டு…” மீண்டும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை எண்ணி ஏக்கமான நிலையில் அது எங்கள் உடல் முழுவதும் படர்ந்து எங்கள் இரத்த நாளங்களில் கலந்து எங்கள் உடலில் உள்ள ஜீவான்மா ஜீவணுக்கள் எங்கள் உடல் உறுப்புகளை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும் பெற அருள்வாய் ஈஸ்வரா என எண்ணி

1.நம் உடலுக்குள் “அலை அலையாகப் படரச் செய்ய வேண்டும்…”

2.இதுவே துருவ நட்சத்திரத்தின் சக்தியை நமக்குள் கொண்டு வரச் செய்யும் தியானம்… மற்றும் ஆத்ம சுத்தி.




# கூட்டுத் தியானத்தின் மூலம் தான் மகரிஷிகள் சக்தியைப் பெற முடியும்

நாம் தனித்து ஒருவர் தியானமிருந்து இந்த சக்திகள் அனைத்தையும் பெறுவோம் என்றால் அது சாதாரண மனிதனுக்கு "அத்தகைய வலு இல்லை..." மகரிஷிகளின் அருள்சக்தி பெறும் தகுதியில்லை.

நாம் தனி மனிதனாக அமைந்தாலும்

1.நாம் கூட்டுத் தியானங்களில் இருந்து அதன் துணை கொண்டு எண்ணத்தின் உணர்வு வலுவான பின்பு தான்

2.நாம் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று எண்ணினால்

3."அந்த நிமிடமே அதைக் கவரும் தன்மை வருகின்றது..."

ஆகவே ஒரு சமயம் கூட்டுத் தியானத்தில் இருந்து அடுத்து நாம் பெறுவோம் என்ற நிலைகள் இல்லாதவாறு "அடுத்தடுத்து வாரத்தில் ஒரு நாள் கூட்டுத் தியானங்கள் செய்து..." ஒவ்வொரு நிமிடமும் நமக்குள் அதைச் செருகேற்றும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

“தனித்து நாம் எல்லாச் சக்தியும் பெறுவோம்...” என்று விலகிச் செல்லாது ஒவ்வொரு வாரத்திலும் ஆங்காங்கு ஒரு பத்துப் பேரானாலும், இருபது பேரானாலும் கூட்டுத் தியானங்கள் செய்து பழகிக் கொள்ளுங்கள்.

அதே சமயத்தில் மாதத்தில் ஒரு நாள் பௌர்ணமி அன்று இங்கே தபோவனம் வருபவர்கள் கூட்டுத் தியானத்தில் கலந்து கொள்ளலாம்.

இங்கே வர இயலாதவர்கள் தன் அருகிலே பத்து நூறு பேர் இருந்தாலும் பௌர்ணமியன்று ஒரு கூட்டமைப்பாக இருந்து இதே போல் கூட்டுத் தியானம் இருக்க வேண்டும்.

கூட்டுத் தியானமிருந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற மூதாதையர்களின் உயிரான்மாக்களை உங்கள் வலுக் கொண்ட எண்ணத்தால் அந்த மகரிஷிகளின் உணர்வின் துணை கொண்டு, விண் செலுத்த முடியும்,

1.அந்த உயிரான்மாக்களை விண் செலுத்தினால் தான் உங்கள் எண்ணம் துரித நிலைகள் கொண்டு விண்ணை அடைந்து
2.விண் சென்ற அந்த மகரிஷிகளின் உணர்வலைகள் பூமியில் படர்ந்திருப்பதை எளிதில் கவர்ந்து
3.உங்களுக்குள் அதை உரமாகச் சேர்த்துக் கொள்ள முடியும்.

இந்த மனித வாழ்க்கையில் ஏற்படும் தீமைகளை அகற்ற “அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்” என்று ஒவ்வொரு நிமிடமும் எடுத்து நமக்குள் செலுத்துவோம் என்றால் அந்தத் தீமைகள் அகலுகின்றது.

அதே சமயம் நம் எண்ணம் கூர்மையாக விண்ணை நோக்கிச் செல்கின்றது. அப்பொழுது நமது உடலுக்குள் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி உரமாக வலுப் பெறுகின்றது.

இவ்வாறு நாம் வாழும் இந்தச் சிறிது காலத்திலேயே
1.அந்த மகரிஷியின் அருள் சக்தியை உடலுக்குள் வலுவாக்கிக் கொண்டால்
2.இந்த உடலை விட்டு இந்த உயிரன்மா எப்பொழுது சென்றாலும்
3.எந்த மகரிஷியின் எண்ணங்களை நாம் அடிக்கடி எடுத்தோமோ
4.அவர் ஒளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் அந்தச் சப்தரிஷி மண்டலங்களுடன் நம் உயிரான்மா இணைந்து

5.இன்னொரு உடல் பெறும் உணர்வலைகள் கரைந்து
6.அந்த ஒளியுடன் ஒளியாக நாம் என்றும் நிலைத்து நின்று
7.பத்தாவது நிலையான கல்கி என்ற நிலையை அடைகின்றோம்.




## [உங்கள் உயிராத்மா ஒளி நிலை பெற குருநாதரைப் பிரார்த்திக்கின்றோம்]

நீங்கள் தர்ம சிந்தனையுடன் அன்பு, பரிவு, பாசம், ஞானம், தைரியம், சாந்தமாக வாழ எண்ணி உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தாலும்,

ஒருவர் மற்றொருவரைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும்போது என்ன நடக்கின்றது…?

நீங்கள் அவரைப் பார்க்கும் பொழுது…

1.உங்கள் புலனறிவால் கோப உணர்வைக் கவர்ந்து உடலில் உள்ள ஈர்ப்பு காந்தத்தில் இணைந்தவுடன்

2.உடல் காற்றில் கலந்துள்ள கோப உணர்வலைகளை ஈர்ப்பதனால் உங்கள் சுவாசத்துடன் கலந்து உயிரில் உராய்வதனால்

3.ஆத்திர உணர்வின் எண்ணம் உங்களை அறியாமலேயே ஆத்திரத்துடன் பேசவோ கேட்கவோ தூண்டுகின்றது.

அச்சமயம் உங்கள் உமிழ் நீரும் மாறுபட்டு நீங்கள் உட்கொண்ட ஆகாரத்துடன் கலப்பதால் குடலில் ஒருவித எரிச்சல் ஏற்படுகின்றது. அப்பொழுது எதைச் சாப்பிட்டாலும், சுவை குன்றியே இருக்கும்.

அதனால் ஆகாரம் குறைத்துச் சாப்பிட்டு உடல் சோர்வடையக் காரணமாகின்றது.

1.கோப ஆத்திர உணர்வலைகளை இரத்தம் வடித்துக் கொள்வதனால்

2.இரவில் உறங்கும் பொழுது “இரத்தம் தசைகளாக மாறும் சமயம்…”

3.உடலில் ஒருவித எரிச்சலும் தூக்கமின்மையும் ஏற்படக் காரணமாகின்றது.

உதாரணமாக… நீங்கள் வயலைப் பக்குவப்படுத்தி நெல்லை விதைத்து அதிலே நெல் முளைத்து வருகிறது என்று வைத்துக் கொள்வோம். காற்றில் மிதந்து வந்த, வேண்டாத வித்துக்கள் வயலில் வீழ்ந்து களைகளாக முளைத்து விட்டால் நெல்லிற்கு இட்ட உரத்தைக் அந்தக் களைகள் எடுத்துக் கொண்டு களைகள் பெருகுகின்றன.

களைகளை நீக்கவில்லையென்றால் நெல் பயிர் வளர்ச்சி குன்றி நெல்லின் தரம் குறைந்து விடும்.

இதைப் போன்று

1.நீங்கள் சுவாசித்த கோப குணங்களின் உணர்வலைகளின் நுண் அணுக்கள் உங்கள் இரத்தத்தில் பெருகி

2.தசைகளாக மாறும் பொழுது தசைகளிலும் உடல் உறுப்புகளிலும் பெருகி மேல் வலி, தலை வலி போன்ற உடல் உபாதைகள் ஏற்படுவதும்

3.அதனால் உடல் சோர்ந்து "எச்செயலையும் சோர்வுடன் செய்யக் காரணமாகின்றன…"

நீங்கள் உலக நிலைகளை அறிந்து கொள்ளும் வண்ணம் பத்திரிக்கையைப் பார்க்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அதிலே "இரவு 8.00 மணியளவில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது திடீர் என்று கொள்ளையர்கள் வீடு புகுந்து வீட்டில் இருப்பவர்கள் அனைவரையும் அடித்துப் படுகாயப்படுத்திப் போட்டுவிட்டு வீட்டில் உள்ள பொருள்களை எல்லாம் வாரிக்கொண்டு போய்விட்டார்கள்" என்று படிப்பீர்கள்.

அப்பொழுது உங்களையறியாது, பயம் கலந்த வேதனை உணர்வுகளைச் சுவாசிப்பதனால் அவை உங்கள் இரத்தத்தில் கலந்து விடுகின்றன.

அன்று இரவு… நீங்கள் அமைதியாகப் படுத்திருந்தாலும், வேறு ஏதாவது புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாலும் எதிர்பாராது சன்னல் கதவின் ஓசை "டப்…" என்று உங்கள் செவிகளில் கேட்டவுடன், உங்களையறியாது பய உணர்வு உந்தப்பட்டு உடல் சிலிர்த்து, பய உணர்வலைகளை சுவாசித்து, மேலும் மேலும், பய உணர்வுகள் பெருகக் காரணமாகின்றன.

இது போன்று அடிக்கடி நேர்ந்தால் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் மனத்தில் ஒருவிதப் பயத்துடன் செயல்படும் நிலை ஏற்படுகின்றது,

நீங்கள் வேலையின் நிமித்தம், தெருவில் நடந்து செல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். தெருவின் முனை அருகில் செல்லும் சமயம் ஒரு கார் திடீரென்று திரும்புகையில் உங்கள் மீது மோதும் நிலையை நீங்கள் பார்க்க நேர்ந்தால்…

1.கண்களின் ஈர்ப்பு காந்தத்தில் பாய்ச்சுவதால் உங்கள் உடல் துரித நிலையில் பய உணர்வுகளை அதீதமாகச் சுவாசித்து

2.துரிதமாக இயங்கி, உடல் நடுக்கமாகி உங்களைக் காக்கும் எண்ணம் உருப்பெற்று

3.விபத்திலிருந்து உங்களைக் காத்துக் கொள்கின்றீர்கள்.

அதே சமயத்தில் அதீதமான பயத் துடிப்புடன் ஓட்டுநரைப் பார்க்கும் பொழுது ஆத்திர உணர்வுகள் உந்தப்பட்டு, ஆத்திர உணர்வுகளையும் சுவாசிக்க நேருவதால் பயத் துடிப்புடன் ஆத்திர உணர்வலைகள் உயிரில் உராய்வதால் புலன்களின் பொறிகள் இயக்கப்பட்டு "ஆத்திரத்துடன் பேசுவதும்... அதற்குரிய செயலையும் செய்விக்கின்றன..."

நீங்கள் விபத்திலிருந்து தப்பியதைப் பார்த்தவர்கள் உங்களைப் பார்த்து "நீங்கள் செய்த தர்மத்தால் உங்களைத் தெய்வம் காப்பாற்றியது..." என்று ஆறுதல் கூறுவார்கள்.

ஆனால் நீங்கள் சுவாசித்த அதீத பய ஆத்திர உணர்வலைகளின் நுண் அணுக்கள் "இரத்தத்தில் கலந்து தசைகளாக மாறுகின்றன..."

வயல்களைப் பக்குவப்படுத்தி நெல்லை விதைத்துப் பயிராக முளைத்து வரும் நிலையில் எங்கோ காற்றில் கலந்து வந்த வித்துகள் வயலில் வந்து வீழ்ந்தால் அதுவும் முளைத்து விடுகின்றது.

நீங்கள் எதிர்பாராது அதீத பய உணர்வுடன் ஆத்திர உணர்வையும் சுவாசித்ததால்

1.அவைகள் இரத்தத்தில் கலந்து தசைகளாக மாறுவதும்

2.தசைகளில், பய உணர்வுகளின் அணு திசுக்களும் ஆத்திர உணர்வுகளின் அணு திசுக்களும் உருப்பெற்று

3.அதன் இயக்கத்தால், தசைகளில் அமிலங்கள் சுரந்து

4.இந்த அமிலங்கள் உடலை இயக்கும் நரம்புகளில் ஈர்க்கப்பட்டு

5.நரம்புகள் இயங்குவதால் நரம்புகளில் உள்ள அமிலங்களின் உணர்வுகளின் சத்தை எலும்பின் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டு

6.எலும்பினுள் "ஊனாக" வடித்துக் கொள்கின்றன

7.இந்த ஊனைத்"தான் ஞானிகள் "ஊழ்வினை" என்று பெயர் வைத்தார்கள்.

எடுத்துக்காட்டாக வேப்ப மரத்தை எடுத்துக் கொள்வோம்.

வேம்பின் வித்து எத்தனை வகையான உணர்வின் சத்தில் வித்தானதோ அது நிலத்தில் முளைத்து வரும் பொழுது அதன் உணர்வுகளின் சத்தில் கலந்துள்ள ஈர்ப்பு காந்த சக்தியால் நிலத்தில் உள்ள நீரையும், காற்றில் இருந்து வரும் தன் இனமான உணர்வுகளின் சத்தையும் ஈர்த்துக் கொண்டு... ஈர்த்துக் கொண்ட வெப்பத்தினால் நீரில் கலந்துள்ள

உணர்வின் சத்துகள் அனைத்தும் உறைந்து விடுவதால் வெப்பத்தின் இயக்கத்தினால் நீரில் வேப்ப மரமாக வளர்கின்றது.

இதைப் போன்று...

1.அதீத பய குணத்தின் சத்தையும் ஆத்திர குணத்தின் சத்தையும் எலும்புக்குள் ஊனாக வடித்து வைத்துவிடுகிறது.

2.அவ்வாறு வடித்து வைப்பதனால் உயிரின் இயக்கத்தால் எலும்பின் காந்த ஈர்ப்பினால்

3.உடல், காற்றில் பரவி இருக்கும் பய உணர்வலைகளையும் ஆத்திர உணர்வலைகளையும் ஈர்க்கின்றது.

வேப்ப மரம் தன் உணர்வான கசப்பான சத்தை ஈர்த்துத் தன்னை வளர்த்துக் கொண்டு தான் வளர்த்துக் கொண்ட கசப்பான உணர்வுகளின் மணத்தை வெளிப்படுத்தும் பொழுது அதை நீங்கள் நுகர்ந்தால் அதன் கசப்பான உணர்வலைகள் உங்கள் முகத்தைச் சுளிக்கச் செய்கின்றன.

அதைப் போன்றே... உங்கள் உடல் ஈர்க்கும், பய குணத்தின் உணர்வுகளையும் ஆத்திர குணத்தின் உணர்வுகளையும் நீங்கள் சுவாசிக்கும் பொழுது "முகம் கடுகடுப்பு அடைகின்றது..."

வேம்பின் இலைகளைச் சாப்பிட்டால் கசப்பின் உணர்வுகள் குடலில் இயங்கி, குமட்டல் ஏற்படும் பொழுது, வாந்தி வந்து விடும் என்ற பயம் கலந்த எண்ணம் தோன்றுகின்றது.

இதைப் போன்று, உங்கள் உடல் ஈர்க்கும் பய குணத்தின் உணர்வுகளையும், ஆத்திர குணத்தின் உணர்வுகளையும், நீங்கள் சுவாசித்துக் கொண்டு இருப்பதனால் இரத்தம் வடித்துக் கொண்டதால்

1.பய ஆத்திர குணங்களின் உணர்வலைகள் இரத்தத்தில் நுண் அணுக்களாக வளர்ச்சி பெற்று

2.இரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகள் வரக் காரணமாகின்றது.

மேலும், அதனால் அதிர்ச்சியான பேச்சைக் காதில் கேட்டால் பயமான எண்ணம் தோன்றுவதும்... அச்சமயத்தில், பயத்தினால் சிந்திக்கும் திறன் இழந்து கோபப்படுவதும்...

1.ஏதாவது ஒரு பொருள், கீழே விழும் ஓசையைக் காதில் கேட்டால்

2.உங்களை அறியாது உடல் சிலிர்ப்பதும் அதனால் பயமான எண்ணங்கள் தோன்றுகின்றது.

இதைப் போன்று, எச்செயலை நீங்கள் செய்ய முற்பட்டாலும், உங்களை அறியாது அவசர ஆத்திர உணர்வுடன் செயல்படத் தூண்டுகின்றது. ஆனால் சிறிது தடைப்பட்டாலோ கோபமான எண்ணம் உருப்பெற்று விடுகின்றது.

இரத்தம் தசைகளாக உடல் உறுப்புகளாக மாறும் பொழுது அதில் பய, ஆத்திர குணங்களின் அணு திசுக்களாக வளர்ச்சி பெற்றுத் தசைகளிலும், உடல் உறுப்புகளிலும் தசைவாதம் குடல்வாதம், பக்கவாதம் போன்ற நோய்கள் வரக் காரணமாகின்றது.

அதே போல் தசைகளில் உருவான அமிலங்களை உடல் உறுப்புகளை இயக்கும் நரம்புகள் ஈர்த்துக் கொள்வதால் அதனால் கீல்வாதம் மூட்டுவாதம் முடக்குவாதம் போன்ற நோய்கள் உருப்பெறக் காரணமாகின்றது.

இப்படி... நாம் நமது வாழ்க்கையில் நல்ல குணங்களின் உணர்வுடன் சுவாசித்து உடல் நலத்துடன் வாழ்ந்து வந்தாலும் எதிர்பாராது பய குணங்களின் உணர்வையோ, கோப குணங்களின் உணர்வையோ, வேதனையின் குணங்களின் உணர்வையோ, ஆத்திர குணங்களின் உணர்வையோ, குரோதமான குணங்களின் உணர்வையோ, சோர்வான குணங்களின் உணர்வையோ, சஞ்சலமான குணங்களின் உணர்வையோ, சந்தர்ப்பவசத்தால் சுவாசிக்க நேர்ந்தால்...

1.நல்ல குணங்கள் பலவீனமாகி தசைகளிலும் உடல் உறுப்புகளிலும் நோய்கள் உருப்பெற்று

2.அதில் விளைந்த நுண் அணுக்கள் உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று

3.உயிரின் அணைப்பில் உயிராத்மாவாக இயங்குவதும்

4.உயிராத்மா வளர்ச்சி குன்றி உடலை விட்டு உயிராத்மா பிரிந்து செல்கின்றது.

5.இவ்வாறு பிரிந்த உயிராத்மா மறு பிறவியில் மனித உருப் பெறும் தகுதியை இழக்கின்றது.

இவ்வாறே, சாதாரண மனிதர்கள் முதல் விஞ்ஞானிகள் வரை சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு ஒப்ப சந்தர்ப்பவசத்தால் கண்களால் காதுகளின் புலனறிவால் ஈர்க்கப்பட்ட, கோபம், குரோதம், ஆத்திரம், அதீத பயம் போன்ற குணங்களின் உணர்வலைகளைச் சுவாசித்து உடல்களில் பதிவாகி நோய்கள் உருப்பெறுகிறது. அதை இன்றைய மருத்துவம் குணப்படுத்துகிறது.

ஆனால் நோய்களினால் உடலில் விளைந்த நுண் அணுக்கள் உயிரின் ஈர்ப்பிற்குச் சென்று

1.உயிரின் அணைப்பில் உயிராத்மாவாக இயங்கிக் கொண்டிருக்கும்

2.அந்த "உணர்வுகளின் அணுசிசுக்களை" மாற்ற விஞ்ஞானிகளால் முடியாது.

விஞ்ஞான முன்னேற்றத்தினால் மனித உடல்களைப் பாதுகாக்க முடியுமே தவிர... அவர்களின் உடலை இயக்கும் "உயிராத்மாவை ஒளி நிலையாக மாற்றும் ஆற்றல்..." விஞ்ஞானிகளுக்கு இல்லை.

ஞானிகள், மகரிஷிகள் தங்கள் தபோவலிமைகளினாலும் தியானங்களினாலும் பேரண்டத்தில் பரவிக் கிடக்கும், பேராற்றல்களின் உண்மை நிலைகளைக் கண்டறிந்து தங்களின் புலனறிவால் அதை உடலில் சேர்த்து வளர்த்துக் கொண்டதால்

1.சந்தர்ப்பவசத்தால் தீய கோப குரோத ஆத்திர குணங்கள் போன்ற உணர்வலைகளைச்

2.தங்களுக்குள் சுவாசிக்க நேர்ந்தால் அவைகளை மாய்த்து விடுகின்றனர்.

அவ்வாறு தங்களின் உடல்களில் பேராற்றல் மிக்க உணர்வலைகளை வளர்த்துக் கொண்டு உயிராத்மாவை ஒளியாக மாற்றித் தங்கள் சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பேராற்றல்கள், ஒளியலைகளாகக் காற்றில் பரவிக் கொண்டிருக்கிறது.

உயிராத்மாவை ஒளியாக மாற்றிக் கொண்டு உடலை விட்டு விண்ணைச் சென்றடைந்து இன்றும் சப்தரிஷி மண்டலங்களாகத் திகழ்ந்து கொண்டும் இயங்கிக் கொண்டும் இருக்கின்றார்கள்.

அதிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஒலி, ஒளியின் ஆற்றல் மிக்க உணர்வலைகள் பரவெளியில் பரவிக் கொண்டே இருக்கின்றன.

மேற்கூறிய நிலைகளை...


1.எம் குருநாதர் காட்சியாகவும் உணர்ச்சிப் பூர்வமாகவும், உணர்த்தி உபதேசித்து அருளியதை யாம் உங்களுக்கு உபதேசிக்கின்றோம்.

2.மெய்ஞானிகள் மகரிஷிகள் உபதேசித்து அருளிய ஒளியான உணர்வுகளையும்

3.சப்தரிஷி மண்டலங்களிலிருந்தும் துருவ நட்சத்திரத்திலிருந்தும் வரும் ஒலி ஒளியான ஆற்றல் மிக்க உணர்வுகளையும்

4.நீங்கள் அனைவரும் பெற்று உங்கள் வாழ்க்கையில் நலமும் வளமும் பெற்று

5.உங்கள் உயிராத்மா ஒளி நிலை பெற குருநாதரைப் பிரார்த்திக்கின்றோம்.




# சர்க்கரை நோய் அதிகளவில் வரக் காரணம் என்ன…?

நாம் ஒரு குழம்பு வைக்கக் காரம், புளிப்பு, துவர்ப்பு, உப்பு என்று பலவிதமான சுவைகளைக் கலந்து தயாரிக்கின்றோம். நாம் குழம்பு வைக்கும் பொழுது எந்தப் பொருளை அதிலே அதிகமாகச் சேர்க்கின்றோமோ அதாவது

1.மிளகாய் அதிகமாக இருந்தால் மிளகாயின் காரத்தைக் காட்டும்.

2.உப்பின் தன்மை அதிகமாகிவிட்டால் உப்பின் குணத்தைக் காட்டும்.

3.அதற்குள் மற்றதையெல்லாம் சுவையற்றதாக்கி இந்தச் சுவையே முன்னிலையில் நிற்கும்.

இதைப் போல பிறர் செய்யும் "தவறான உணர்வுகளை நாம் அடிக்கடி பார்க்க நேர்ந்தால்..." அந்த உணர்வின் தன்மை நம் ஆன்மாவில் கலந்துவிடும்.

ஆன்மாவில் கலந்தவுடன்... அன்றைய தினம் அவரைக் கோபமாகப் பேசுகின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அவரைப் பார்க்கும் பொழுதெல்லாம் கோப உணர்ச்சிகளைத் தூண்டுகின்றது.

1.அப்பொழுது ஆன்மாவிலிருக்கும் மற்ற குணங்களுடன் கலந்து "நம் உயிருடன் இணைக்கப்படும் பொழுது..."
2.நம் உடலில் உள்ள கணங்களுக்கு (குணங்களுக்கு) அதிபதியாகிச் செயல்படுகின்றது.
3.மற்ற உணர்வின் மணங்களை இது ஒடுக்கி விடுகின்றது.

பின்னர் அதனின் உணர்வு செயல்பட்டாலும், அந்த உணர்வுகள் அனைத்தும் நம் உடலுக்குள் இருக்கும் கார குணம், கசப்பான குணம், சங்கடமான குணம், "அதிலே கார குணம் அதிகமாகவே எடுத்துக் கொள்ளும்..."

குழம்பில் காரம் அதிகமானால் அனைத்துச் சுவையையும் அது கெடுத்துக் கார உணர்ச்சியையே தூண்டுகின்றது. பிறர் செய்யும் தவறின் நிலைகளைப் பார்க்கும் பொழுது நம் நல்ல உணர்வுக்குள் கோபம் ஏற்பட்டால் நமக்குள் கார உணர்ச்சிகளைத் தூண்டி நம்மிடம் நல்ல குணங்களை இயங்கவிடாது செய்து விடுகின்றது.

அவ்வாறு, செயல்படுத்தும் கார நிலை நம் உடலுக்குள் சிறுகச் சிறுகச் சேர்ந்து, மற்ற குணங்களைச் செயலற்றதாக்கி இந்த உணர்வின் தன்மையை அதிகமாகச் சுவாசிக்கின்றோம்.

1.சாப்பிடும் போது நம் ஆகாரத்தில் அந்தக் காரமான சுவையே கேட்கும்.
2.காரம் அதிகமானால்தான் ருசியே இருக்கும்.
3.கோபமாகப் பேசும் குணம் கொண்டவர்களுக்கு "அடிக்கடி கோபமாகப் பேசினால்தான்..." ரசிப்பே இருக்கும்.

அந்தக் காரமான உணர்ச்சிகள் நமக்குள் இணைந்து யாராவது “சுருக்...” என்று சொன்னால் போதும், கார உணர்ச்சிகள் அங்கே விளைந்து, உடனே சண்டை வரும்.

1.அந்த உணர்வின் தன்மை கொண்டு சண்டை போடுவதே ரசனையாகும்.

2.ஏன் சண்டை போடுகிறோம்...? என்பதே அவர்களுக்குத் தெரியாது.

உணர்வின் இயக்கமாக அது இயக்குகின்றது... தவறு செய்யவில்லை.

சண்டை போடுபவர்களை வேடிக்கைப் பார்த்துப் பார்த்து... கார உணர்ச்சிகள் நமக்குள் ஏற்பட்டு ஆன்மாவில் அது பெருகி அதனின் உணர்வை அது வளர்க்கத் தொடங்கிவிடும்.

இவ்வாறு அது செய்தாலும் அந்த உணர்ச்சிகள் உடல் முழுவதும் படர்ந்து, கார உணர்வுகள் அதிகமாகப் பெருக்கமாகும் பொழுது இரத்த அழுத்த நோய் வருகின்றது.

காரத்தைச் சாப்பிட்டால்... நாம் எப்படி “ஆ...” என்று அலறுகிறோமோ இதைப் போல இந்த உணர்வின் அழுத்த நிலைகள் நமது உடலில் வேகமாக ஓடும் கவன நரம்புகளில் தாக்கப்படும் பொழுது “கும்...” என்று சிரசில் நரம்பு புடைத்துவிடும்.

அவர் எண்ணிய நிலைகள் சிறிது மாறினால் போதும். உடனே கோபம் தன்னை அறியாமல் வரும். உடல் முழுவதற்கும் நடுக்கமாகும். கார உணர்ச்சிகள் வரும் பொழுது இரத்தத்தை இருதய வால்வுகள் இழுக்கப்படும் பொழுது அதனால் நெஞ்சு எரிச்சலாகும்.

1.எதையெடுத்தாலும் நெஞ்சு எரிச்சலாகும்.

2.அதே சமயத்தில் ஈரல் எரிச்சலும் வந்துவிடும்.

3.எரிச்சல்கள் அங்கே சென்றவுடனே எதையெடுத்தாலும் எரிச்சல்... பார்வையிலும் எரிச்சலான நிலைகளாகும்.

நாம் தவறு செய்யவில்லை. நாம் தவறு செய்பவரைப் பார்க்கும் பொழுது அந்த உணர்வின் தன்மை நம்மை அது போல ஆக்கிவிடுகின்றது. கடைசியில் இரத்தக் கொதிப்பாக மாறுகின்றது.

கோப உணர்வுகள் வரப்படும் பொழுது மற்றவர் மகிழ்ச்சியாக இருக்கின்றார்… மகிழ்ச்சியான செயல்களைச் செய்கின்றார் என்றால் அதைக் கண்டால் “இந்தக் கோபக்காரருக்குப் பிடிக்காது…”

மகிழ்ச்சியின் உணர்வு தூண்டினால் இனிமை கலந்த சொல்லின் நாதம் பிறக்கும். உதாரணமாக, நாம் இனிப்பைச் சாப்பிட்டவுடன், அந்த உணர்வின் தன்மையால் ரசித்துத் தலையை அசைக்கின்றோம்.

ஆனால்… காரத்திற்குள் இனிப்பைப் போட்டால் அதனின் சுவையே தனித்து இருக்கும்.

1.நமது உடலின் இனிப்பின் சொல்லை அறியச் செய்யும் உணர்வுகள் “இதற்கும்… அதற்கும்…” ஒத்து வராத நிலைகளில் பிரிக்கும்.

2.இது இரண்டும் நெகடிவ் பாசிடிவ் என்ற நிலைகள் கொண்டு இயக்கப்படும் பொழுது

3.நமது இருதய வால்வுகள் நமது உடலில் காரத்தை ஜீரணிக்க முடியாத நிலையில் “கொதிப்பும்…”

4.சுவையான நிலைகளில் பேச முடியாமல், சர்க்கரைச் சத்தும் வந்துவிடும்.

5.உடல் உறுப்பின் தன்மை செயல்கள் ஒடுங்கும் பொழுது இந்தக் காரத்துடன் கலக்காததனால் சர்க்கரைச் சத்து அதிகமாகின்றது.

6.அதனால், இருதயத்தின் துடிப்பு குறைகின்றது.

ஏனென்றால் இது இரண்டும் போர் செய்யப்படும்போது, துடிப்பின் இயக்கங்கள் உறுப்புக்கள் சரியாக இயங்காத நிலையும் இரத்த வால்வுகள் சரியாக இயங்காத நிலையில் “தளர்ச்சியடைகின்றது…”

இவ்வாறு சர்க்கரையின் சத்து அதிகமானபின் இதே இனிப்பின் தன்மை கொண்டு உடலுக்குள் என்ன ஆகிறது…?

செடிகளில் எப்படிச் சில பொருள்கள் சேர்ந்து, உயிரணுக்கள் உண்டாகின்றதோ இதைப் போல “நாம் எடுத்துக் கொண்ட நெகடிவ், பாசிடிவ் என்ற எதிர் நிலையான உணர்வுகள்…” போர் செய்யப்படும் பொழுது நம் ஆன்மாவில் இதே நிலையாகி உயிரின் துடிப்பு அதிகமாகின்றது. இதனால் காற்றிலிருந்து வரும் தீய உணர்வுகள், உடலில் ஒட்டிக் கொள்கின்றன.

1.இரண்டு நிலைகளை எடுத்தவுடனே அந்த அணுவின் தன்மையாக உருவாகி நமது தோலில் அரிப்பு ஏற்படும்.

2.அரிப்பின் தன்மையானவுடன் இரத்தத்துடன் கலந்து இரத்தத்தைச் சுவைத்துச் சாப்பிடும்.

3.பிறகு இரத்தத்திற்குள் சீழாக மாற்றும் நிலை வந்துவிடும்.

4.சீழாக மாறி அதன் மலம் பட்டவுடன் துரித நிலைகள் கொண்டு, இரத்த ஓட்டத்தின் இயக்கம் குறைந்து

5.உடலில் உள்ள உறுப்புக்களையே எடுத்துவிடும் நிலை வருகின்றது.

டாக்டரிடம் சென்றாலோ தடுப்பு ஊசி போட்டு, அங்கங்களைக் குறைத்து விடுகின்றனர். சர்க்கரைச் சத்தை எதிர்ப்பதற்காக, வேறு மருந்தின் நிலைகளை அதிகமாக்குகின்றனர். இவ்வாறு செலுத்தினாலும், சிறிது காலமே, நாம் வாழும் நிலை வருகின்றது.

எதிர்நிலையான மருந்துகள் கொடுக்கப்படும் பொழுது

1.அடுத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் சிறுநீரகம் விஷத்தன்மை அடைந்து

2.இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை இழந்து விடுகின்றது.

பின் நாம் சிறிது காலம் வாழ்வதற்கு எத்தனையோ முறை ஊசிகளைப் போட்டு நம்மை வேதனைப்படுத்தினாலும்

2.அந்த வேதனையே நமக்குள் விளைந்து, ஊழ்வினை என்ற அடிப்படையிலே நமது ஆன்மாவாக மாற்றி விடுகின்றது.

நமக்குள் விளைந்த இந்த உணர்வுகள் இந்த உடலில் எப்படி அங்கங்களைக் குறைக்கச் செய்ததோ அதே போல் உணர்வுகள் அனைத்தும் உயிருடன் ஜீவான்மாவாக விளைந்து, இந்த ஜீவான்மாக்கள் எதனின் நிலை கொண்டு இந்த உடலில் வளருகின்றதோ அதற்குத் தக்கவாறு இதில் விளைந்த உணர்வுகள் "உடலைக் குறைக்கும் நிலை கொண்டு உயிரான்மாவில் சேர்ந்துவிடுகின்றது…"

இந்த உடலில் பற்று உள்ள நாம் குழந்தைகளிடமோ, சகோதரர்களிடமோ, மற்றவர்களிடமோ, பாசத்தை அதிகமாக வளர்த்துக் கொண்ட நிலையில்

1."இவர்களுக்கு இவ்வளவு செல்வத்தைச் சேர்த்தேன்… என் செல்வத்தை அவர்கள் காத்துக் கொள்ள வேண்டுமே…!

2.ஏனென்றால் எனக்கு இப்படித் துன்பம் நேர்ந்துவிட்டது... இனி இந்தப் பணத்தை “நீங்களாவாது ஒழுங்காக வைத்திருங்கள்...!” என்று

3.இந்தச் சொல்லைச் சொல்லும்போது யார் மேல் பற்றுதல் வருகின்றதோ

4.அவருடைய உணர்வு இவருடைய உடலில் எடுத்துச் சேர்த்துக் கொள்ளும்.

ஆக... நாம் தவறு செய்யாமலே இத்தகைய உணர்வு வந்து விட்டால் அந்த உணர்வின் தன்மை உடலிலே விளைந்து “நெகடிவ், பாசிடிவ்...” என்ற போர் முறை வரும் பொழுது கலக்க உணர்வுகள் அதிகமாகத் தோன்றி இங்கே உயிரின் இயக்க நிலைகள் அதிகமாக... ஈர்ப்பின் நிலைக்கு அந்தச் சக்தி வரவில்லை என்றால் “அந்த உயிரான்மா உடலை விட்டு வெளியில் சென்றுவிடும்...”

நமது உடலுக்குள் எடுத்துக் கொண்ட உணர்வுகள் ஏக்கம் கொண்டு உயிரான்மாவாக விளைந்தபின் இந்த உடலை விட்டு வெளியில் வரும் பொழுது அந்த உடலில் எதை விளைய வைத்ததோ அதைத் தன்னுடன் கவர்ந்து வெளியில் வந்துவிடும்.

1.யார் மேல் பற்று வைத்து அந்த மணத்தை இதனுடன் இணைத்துக் கொண்டதோ

2.அவர்களின் ஏக்க உணர்வுடன் ஆன்மா வெளியில் வரும்.

யார் மேல் பற்று கொண்டிருந்தார்களோ... அவர்கள் இவர் உடலை விட்டு இந்த ஆன்மா பிரிந்தபின்... அந்த உடலின் மேல் அவர் பற்றாக இருப்பார்.

அந்த உடலின் மணம் கொண்டு... இவர் பதிவு செய்த இந்த நிலைகள் கொண்டு “இறந்தவரின் உயிரான்மா அவர் உடலுக்குள் சென்றுவிடும்...” பின் மனிதனல்லாத கீழான உடலாகத்தான் நம் உயிர் உருவாக்கிவிடும்.

இதைப் போன்ற நிலைகளை நாம் அறிந்து...

1.ஒவ்வொரு நொடிப் பொழுதும் நமது வாழ்க்கையையே தியானமாக்கி

2.”அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா” என்று ஆத்ம சுத்தி செய்து

3.இந்த உடலில் நோய் நீக்கி வேதனை நீக்கி அறியாது வரும் தீமைகளை நீக்கி

4.இப்பிறவியில் "பிறவியில்லா நிலை என்னும் அழியா ஒளிச் சரீரம் பெறுவதே நமது வாழ்க்கையின் அடிப்படை….! என்று

5.கடைப்பிடித்து வாழ்ந்து வரும் அன்பர்கள் அனைவருக்கும் எமது அருளாசிகள்.




# [குறைகளை வளர்த்தால் நமக்கு நாமே எதிரி ஆகின்றோம்]

1.பிறரிடம் குறை காணும் உணர்வுகளானது அதே குறைகளை நம்மிடத்திலும் உருவாக்கிவிடும்.

2.இந்த வகையில் நமக்கு எதிரி வேறு எங்கும் இல்லை… நாமேதான் நமக்கு எதிரி.

எல்லோரும் நல் நிலை பெற வேண்டும் என்ற உணர்வுகளை நம்மிடத்தில் வளர்க்கும் பொழுது நம்மிடத்திலும், நம்மைச் சார்ந்தவர்களிடத்திலும் நல் உணர்வுகள் விளைந்து நம்மையும் நம்மைச் சார்ந்தவரையும் உயர்ந்த நிலை பெறச் செய்யும்.

நாம் யாரிடமெல்லாம் பழகினோமோ அவர்கள் நம்மிடம் பகைமையாகப் பேசியிருந்தாலும் சரி அல்லது நல்ல நிலைகளில் பழகியிருந்தாலும் சரி அவர்களை எல்லாம் காலை துருவ தியானத்தின் பொழுது நாம் நமது நினைவிற்குக் கொண்டு வர வேண்டும்.

கொண்டு வந்து

1.அவர்களது குடும்பங்கள் நலம் பெற வேண்டும்

2.அவர்களை அறியாது சேர்ந்த இருள் நீங்க வேண்டும் என்று நம் உயிரான ஈசனிடம் வேண்டி ஏங்கித் தியானிக்க வேண்டும்.

பின் அவர்களது குடும்பங்களில் கணவனும், மனைவியும் ஒன்று சேர்ந்து வாழ்ந்திடும் நிலை பெற வேண்டும். வசிஷ்டரும் அருந்ததியும் போன்று அவர்கள் வாழ்ந்திட வேண்டும் நளாயினி போன்று ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்திட வேண்டும் சாவித்திரி போன்று, இரு உணர்வுகளும் ஒன்றிடல் வேண்டும் என்று இது போன்ற உணர்வுகளைக் கலந்தே நமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்.

அதிகாலையில் இவ்வாறு அனைவரும் ஏகோபித்த நிலையில் செயல்படுத்தும் பொழுது

1.அனைவரது உடல்களிலும், பகைமை உணர்வுகளுக்கு இடம் இல்லாது அவை தடைப்பட்டுவிடும்.

2.இந்தப் பரமாத்மாவில் (காற்று மண்டலத்தில்) மகிழ்ந்து வாழும் அருள் உணர்வுகள் பெருகும்.

ஒரு புழு ஒரு விஷச் செடியைத் தனது உணவாக உட்கொண்டால் அதனின் உணர்வின் எண்ணங்கள் புழுவினுள் உருவாகிக் கொண்டிருக்கும்.

அந்தப் புழுவை ஒரு குருவி உணவாக உட்கொண்டிருந்தால் அதை உணவாக உட்கொள்ளும் அந்தக் குணத்தின் தன்மை கொண்டு அதை ஜீரணிக்கும் சக்தி அதனிடத்தில் இருக்கும்.

ஆனால் அதே புழுவின் உயிர் இந்த குருவியின் தன்மைக்கு வந்திருக்கும். இதைப் போன்று பல கலவைகள் கலந்தே நாம் வந்துள்ளோம்.

ஒன்றைக் கொல்கிறது… ஒன்றை வளர்க்கின்றது. ஒன்றுக்கு அது விஷத்தன்மையாக இருந்தாலும் விஷத்தை விஷத்தாலே தனக்குள் உணவாக எடுத்து, உட்கொள்கின்றது.

விஷச் செடியில் புழுக்கள் உருவாகின்றது, அதைக் குருவிகள் கொத்திச் சாப்பிடுகின்றன. புழுவின் உயிரான்மா குருவியின் உடலுக்குள் சென்று குருவியின் ரூபத்தை அடைகின்றது.

ஆனால் அந்த உணர்வின் தன்மை விஷத்தின் தன்மையை ஒடுக்கும் அணுவாக வருகின்றது பரிணாம வளர்ச்சியில்.

இன்று பிறிதொருவரிடம் எனக்குத் தொடர்பு இல்லை என்று ஒருவரும் இருக்க முடியாது.

1.யாரும் பிரிந்து தனியாக இல்லை.

2.ஒருவன் உங்களைச் சபித்து அதை உங்களிடம் பதிவாக்கி விட்டான் என்றால் அவனிடமிருந்து நீங்கள் விலக முடியாது.

3.நீங்கள் பிறிதொருவரைச் சபித்தால், நீங்களும் அவரிடம் இருந்து விலக முடியாது.

இதைப் போன்று நாம் ஒருவரோடு ஒருவர் பேசினாலும் அவர்களின் உணர்வுகளும் நமக்குள் உண்டு. இந்த உணர்வுகள் உங்களிடத்தில் பதிவாகி உங்களை இணைத்துக் கொண்டிருக்கும். “பாவிப்பயல்… இப்படிச் செய்து விட்டான்…!” என்று உங்களை அவரிடத்தில் இணைத்துக் கொண்டே இருக்கும்.

நண்பர்களாக இருந்து ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பொழுதும் இதனின் உணர்வுகள் பதிவாகி இருக்கும். இரண்டு பேரும் இணைந்துதான் இருக்கிறீர்கள்.

ஆக நன்மையின் நிலை வரும் பொழுது இரண்டு பேருக்குமே நன்மையாகி விடுகின்றது. இரண்டு பேரும் தீமை என்ற உணர்வை பதிவாக்கப்படும் பொழுதும் கூட இரண்டு பேர்களுடைய நிலையும் பிரிந்திருப்பதில்லை.

உங்கள் நண்பரின் நிலைகளில் எதை அதிகமாக உங்களில் பதிவாக்கி இருக்கின்றீர்களோ அதன் உணர்வுகள் உங்களிடத்தில் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

ஆக நாம் யாரையெல்லாம் பார்த்தோமோ பேசினோமோ அவர்களை எல்லாம் காலை துருவ தியானத்தில் எண்ணி

1."அவர்கள் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும்

2.அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் நலமாக இருக்க வேண்டும்,

3.அவர்களை அறியாது சேர்ந்த இருள் நீங்க வேண்டும்

4.மெய்ப் பொருள் காணும் சக்தி அவர்கள் பெற வேண்டும்" என்று எண்ணி இந்த உணர்வுகளை நமக்குள் வளர்க்க வேண்டும்.

மேலும் அவர்கள் குடும்பத்தில் கணவனும் மனைவியும் வசிஷ்டர் அருந்ததியும் போன்று இரு மனமும் ஒரு மனமாக ஒன்றுபட்டு வாழ்ந்திட வேண்டும். நளாயினி போன்று ஒருவரை ஒருவர் உயர்வாக மதித்து வாழ்ந்திட வேண்டும். சாவித்திரி போன்று இரு உணர்வுகளும் ஒன்றி வாழ்ந்திடல் வேண்டும்... என்று நாம் எண்ணுதல் வேண்டும்.

அவர்களுடைய குழந்தைகள் உலக ஞானம் பெற வேண்டும் அவர்களுடைய தொழில்களும் நன்றாக இருக்க வேண்டும்..." என்று நம் உயிரான ஈசனிடம் வேண்டி தியானித்து இந்த உணர்வுகளை நமக்குள் வளர்க்க வேண்டும்.

1."அவர்கள் வளர்ச்சி பெற வேண்டும்" என்ற உணர்வுகள் நமக்குள் விளையும் பொழுது

2.நமக்குள் அந்த நிலைகள் தானாகவே வளரும் தன்மை பெற்று வளர்ச்சி அடைகின்றது.

நாம் சந்தித்தவர்களின் உணர்வுகளும் நண்பர்களின் உணர்வுகளும் நமக்குள் பதிவாகிய நிலையில் "அவர்கள் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும்..." என்ற உணர்வுகளை நமக்குள் வளர்க்கப்படும் பொழுது

1.நம்மிடத்தில் உள்ள தீமை என்ற உணர்வுகள் மறைந்து விடுகின்றன.

2.அதே சமயத்தில் அவர்களும் அவ்வண்ணமே உயர்ந்த நிலைகளைப் பெறுகின்றார்கள்.

யாம் உபதேசித்து, உங்களிடம் பதிவாக்கிய, அருள் வாக்கினை நீங்கள் நினைவுபடுத்தும் பொழுது இந்த உணர்வுகள் உங்களுக்கு நல்வழி

காட்டும். அது உங்களில் அஞ்ஞான இருளை அகற்றி மெய்ப்பொருளை அறிந்திடும் நிலையைப் பெறச் செய்யும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகள் உங்களில் பெருகித் தீய உணர்வுகளுக்கு உங்களிடத்தில் இடமில்லாது "உங்களில் எப்பொழுதும் மகிழ்ச்சியான உணர்வுகளும் நல்மனமும் பெருகி வளர்வதற்கு எமது அருளாசிகள்..."




# "நீ செத்தால் தான் விடிவு காலம் வரும்..." என்று எண்ணிக் கொண்டிருந்தால் வரும் கடும் தீய விளைவுகள்

குருநாதர் இட்ட கட்டளைப்படி யாம் திருத்தணியில் மலைக்குச் செல்லும் பொழுது... ஒருவர் எம்மைச் சந்தித்து... நான் ஒரு விவசாயி... இங்கிருந்து பத்தாவது மைலில் எங்கள் கிராமம் இருக்கிறது. என்

மனைவிக்கு ஒன்றரை வருட காலமாக எழுந்து உட்காரவோ நடக்கவோ முடியவில்லை. என்ன நோய் என்று தெரியவில்லை...? எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படவில்லை...! என்ன செய்வது...? என்றும் தெரியவில்லை என்று கூறினார்.

சாமி... நீங்கள் எங்கள் ஊருக்கு வந்து "என் மனைவியின் நோயைப் போக்கி நடக்க வைக்க வேண்டும்..." என்று கண்களில் நீர் ததும்ப எம்மை ஊருக்குக் கூப்பிட்டார்.

யாம் இங்கு தியானத்திலிருந்து விட்டு அதன் பிறகுதான் எங்கும் வரமுடியும் என்றோம்.

தாங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அதுவரைக்கும் இங்கேயே இருந்து தங்களை அழைத்துக் கொண்டு போகிறோம் என்றார் அவர்.

விவசாயியைக் கூட்டிக் கொண்டு திருத்தணி மலைமீது ஏறிச் சென்றேன். குருதேவர் கூறிய இடத்தை அடைந்தவுடன் அவரை நான்கு நாள் கழித்து வரும்படிச் சொல்லிவிட்டுk குருதேவர் குறிப்பிட்ட இடத்தில் தியானத்தில் அமர்ந்து கொண்டேன். யாம் இங்கிருக்கிறோம் என்று ஊரில் யாரிடமும் தெரியப்படுத்தக் கூடாது என்று சொல்லி அனுப்பிவிட்டோம்.

யாம் தியானத்தில் இருந்த நான்கு நாள்களிலும், பல நிலைகள் காட்சிகளாகத் தெரிந்து கொண்டிருந்தன. யாம் காட்சிகளாகப் பார்த்த பல நிலைகளுக்கும் குருதேவர் விளக்கி உபதேசித்து அருளிவிட்டு, நாளை வரும் விவசாயியின் ஊருக்குச் செல்லும்படிக் கூறிவிட்டு மறைந்து விட்டார்.

நான்காம் நாள் யாம் இருக்கும் இடத்திற்கு விவசாயி வந்து, என்னை அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். விவசாயின் மனைவி வாத நோயால் கை, கால் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தார்.

அன்று இரவு தியானத்தில் அமர்ந்தேன். அந்த சமயம் காட்சியாக... விவசாயியின் தாயார் வாத நோயுடன் கை கால் வராமல் படுக்கையிலிருந்து கொண்டு வேதனையுடன் பல முறை மருமகளைக் (விவசாயின் மனைவியை) கூப்பிட்டார்கள்.

அப்பொழுது மருமகள்... “சனியன் தொலைய மாட்டேனென்கிறதே...” என்று முனங்கிக் கொண்டே மாமியாரைப் பார்க்க அருகில் வந்தார்.

“ஒரு பக்கமாக எனக்குக் கை கால்கள் வலிக்கின்றது... என்னை அந்தப் பக்கம் கொஞ்சம் புரட்டிவிடு...!” என்றார்கள்.

மருமகளோ... “நீ செத்தால்தான்... எனக்கு விடிவு காலம் வரும்” என்று சொல்லிக் கொண்டே வேண்டா வெறுப்புடன் மாமியாரை ஒரு பக்கமாகப் புரட்டிவிட்டார்.

இதைக் கண்டு மாமியார் வேதனையுடன்... “இப்படியெல்லாம் ஏசுகிறாயே முருகா...!” என்று சொல்லி வேதனையுடன் பெருமூச்சு விட்டார்கள்.

மருமகளுக்குக் கோபம் வந்து... என்ன...? இப்படியெல்லாம் பேசுகிறாய்...!” என்று ஏச மாமியாரும் வேதனையுடன் பேசினார்கள்.

1.மருமகள் கோபத்துடன் ஏசிய உணர்வலைகள் மாமியாரின் இரத்தத்தில் கலப்பது, காட்சியாகத் தெரிந்தது.

2.மாமியார் சாபமிட்டு ஏசிய உணர்வலைகள் மருமகள் உணர்வுகளில் உந்தப்பட்டு அவர் இரத்தத்தில் கலப்பதும் காட்சியாகத் தெரிந்தது.

மேற்கூறியவாறு... ஒருவருக்கொருவர் பல மாதங்களாக “நினைத்தும் ஏசியும் பேசிக் கொண்ட உணர்வலைகள்...” அதாவது,

1.மருமகள் மாமியாரை நினைத்து ஏசிய உணர்வலைகள் மாமியாரின் உடலில் வினைகளாக விளைகின்றன.

2.மாமியார் மருமகளை நினைத்துச் சாபமிட்டுப் பேசிய உணர்வலைகள் மருமகளின் உடலில் வினைகளாக விளைகின்றன.

கடைசியில்... வேதனை உணர்வுடன் “மருமகளை எண்ணியவாறே...” மாமியாரின் உயிராத்மா உடலைவிட்டுப் பிரிந்து சென்றது.

மாமியார் எப்பொழுது இறக்குமோ...? என்ற வேதனையுடன் ஏங்கி இருக்கும் நிலையில் “மாமியார் இறந்ததைப் பார்த்தவுடன்...” மாமியாரின் உயிராத்மா மருமகளின் சுவாசத்தின் ஈர்ப்புக்குச் சென்று இரத்தத்தில் கலந்து விடுகின்றது...!

சில நாட்களில்

1.மருமகளின் உடலில், மாமியாரின் உயிராத்மா இயங்கத் தொடங்கி
2.மாமியார் எந்த நோயால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்களோ,
3.அதே வேதனையை, மருமகளும் அனுபவிக்கத் தொடங்குகிறார்.

இவை எனக்குக் காட்சியாகத் தெரிந்து கொண்டிருக்கும் சமயம். குருதேவர் காட்சி கொடுத்து... இதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்...? என்று கேட்டுவிட்டு அதற்குச் சில வழிமுறைகளை உணர்த்தி, உபதேசித்தார்கள். பிறகு தியானத்தைக் கலைத்துவிட்டேன்.

விவசாயின் மனைவியிடம் நீங்களும் உங்கள் மாமியாரும் அடிக்கடிக் கோபித்துக் கொள்வீர்களா...? என்று கேட்டேன்.

ஆம்...! என்று ஒப்புக் கொண்டார்கள்.

யாம் சொல்கிறபடிச் செய்தால் நோய் தீரும் என்றதும் தாங்கள் எப்படிச் செய்யச் சொல்கின்றீர்களோ அதன்படி நாங்கள் செய்கிறோம் என்றார்கள்.

விவசாயின் குடும்பத்தில் உள்ள, அனைவரையும் தியானத்தில் அமரச் செய்தேன்., தியானமிருந்து, கண்களைத் திறந்தவுடன்...

1.விவசாயின் தாயாரின் பெயரைச் சொல்லி...
2.அந்த உயிராத்மா மகரிஷிகளின் அருள் ஒளியால் புனிதம் பெற வேண்டும் என்று
3.குடும்பத்தில் உள்ள அனைவரையும் குருதேவர் உணர்த்திய வழியில் சொல்ல வைத்தோம்.

இவ்வாறு, பத்து நாள்கள் தியானமிருந்து சொல்ல வைத்ததனால், விவசாயின் மனைவி 10 நாள்களில் மெள்ள மெள்ள எழுந்து நடக்கலானார்.

1.விவசாயின் குடும்பத்தில் அனைவரும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள்.
2.விவசாயின் மனைவி “இனி நான் யாரையும் மனம் நோகும்படிப் பேச மாட்டேன்...!” என்று வேண்டிக் கொண்டார்.

தொடர்ந்து நீங்கள் தியானம் செய்தால் உங்களை அறியாது வரும், கோபம், குரோதம், பயம், நீங்கி... உங்கள் குடும்பத்தில் நலமும் வளமும் பெற்று வாழ்வீர்கள் என்று யாம் ஆசீர்வதித்தோம்.




## இறந்தபின் மனிதனின் நிலை - குருநாதர் நேரடியாகக் காட்டியது

"மனிதன் இறந்தபின் மனிதனுடைய உயிராத்மா எந்நிலை பெறுகின்றது...?" என்று குருநாதர் எமக்கு உபதேசித்தருளினார்.

பழனியிலுள்ள ஒரு குளத்திற்கு எம்மை அழைத்துச் சென்றார். அங்கே ஒரு கிணற்றைக் காண்பித்தார். அக்கிணற்றைப் பற்றி ஏற்கனவே யாம் அறிவோம். ஏனெனில் அக்கிணற்றில், ஒரு பெண்மணி தனது ஏழு குழந்தைகளுடன் விழுந்து இறந்து விட்டது.

ஊரினுள் அக்கிணற்றை “நல்ல தங்காள் கிணறு…” என்று அழைப்பர். மற்றும் அக்கிணற்றருகில் செல்ல வேண்டும் என்றாலே பெரும்பாலானோர் அஞ்சுவார்கள்.

அத்தகைய கிணற்றைச் சுட்டிக் காட்டி, அந்த இடத்தில் எமக்கு உபதேசிக்கின்றார்.

குழந்தைகள் அலறித் துடித்து, இறந்த அந்த இடத்தில்… அந்த நினைவலைகள் வருகின்ற பொழுது

1.குழந்தைகளின் சரீரத்திலிருந்து வெளிப்பட்ட உணர்வலைகளை சூரியனின் காந்த சக்தி கவர்ந்து

2.அந்த இடத்திற்குச் செல்கின்றவர்களிடம் அங்கே துடித்து இறந்தவர்களைப் பற்றிய நினைவுகள் உதிக்கின்ற பொழுது

3.சூரியனின் காந்தச் சக்தியால் கவரப்பட்ட உணர்வலைகள் ஒலி அலைகளாக மாறி

4.”குழந்தைகள் துடிப்பது போன்று… தாய் அவர்களை அடக்குவது போன்ற…” குரல்களைக் கேட்க நேர்கின்றது.

இவ்வாறு, ஒரு மனித சரீரத்தில் விளைய வைத்த உணர்வலைகளைச் சூரியனின் கந்தச்சக்தி கவருமேயானால் அவ்வாறு கவரப்பட்ட உணர்வுகள் எவ்வாறு அலைகளாகப் படர்கின்றன…?

ஒரு ஒலி நாடாவில் நமது உரையாடலைப் பதிவு செய்ததை டேப்பில் போட்டு எப்படிக் கேட்கின்றோமோ அது போன்று ஒருவர் இறக்கின்ற பொழுது, வெளிப்படுத்தும் உணர்வுகளைச் சூரியனின் காந்தசக்தி கவர்ந்து, அலைகளைப் படரச் செய்வதும்

1.பிறகு நாம் அந்தச் சம்பவத்தை நினைவுக்கு கொண்டு வருகின்ற பொழுது அந்த அலைகளை நாம் நுகர நேர்வதும்

2.இன்னும் அதிகமாக நினைவலைகளைக் கூட்டக் கூட்ட

3.அங்கே இறந்தவர்களுடைய உருவங்களைப் பார்க்க நேருகின்றது, என்று குருதேவர் எமக்கு உபதேசித்தருளினார்.

இப்பொழுதும்… இரவிலும் என்னால் தூங்க முடியவில்லை, பகலிலும் என்னால் தூங்க முடியவில்லை யாரோ என்னை அழைப்பது போன்றிருக்கின்றது என்றும் என் ஊரிலிருந்து தபோவனம் வருகின்ற வரையிலும் யாரோ என்னை அழைத்துக் கொண்டு பின்தொடர்வது போன்று இருக்கின்றது என்றும் “தபோவனம் நுழைந்தபின் அது போன்று

இல்லை என்றும்…” கூறிக் கொண்டு… இந்நிலைகளால் துன்பப்படுபவர்கள் தபோவனம் வந்து தங்கள் குறையைப் போக்கிக் கொண்டவர்களும் உள்ளனர்.

1.“மனிதனாக வளர்ந்தபின் இந்த சரீரத்தினுள் விளைந்த உணர்வலைகள் எவ்வாறு இருக்கின்றது…?” என்ற நிலையையும்
2.அதே சமயம் இந்த சரீரத்தை விட்டுச் செல்கின்ற நிலையில் அந்த உயிராத்மா எத்தகைய வேதனையைக் கொண்டிருந்ததோ
3.அதே வேதனைத் துடிப்புடன் அந்த உயிராத்மா துடித்துக் கொண்டேயிருக்கின்றது என்பதை
4.நமது குருவின் அருளால் அறிந்துணர முடிந்தது.

தொடர்ந்து குருதேவர் எம்மை அந்த இரவு முழுவதும் பல இடங்களைச் சுற்றிக் காண்பித்தார். அப்பொழுது, சில வீடுகளைச் சுட்டிக் காட்டி, அங்கு நிலவும் சூழல்களை எடுத்துரைக்க ஆரம்பித்தார்.

அக்குடும்பங்களில் வாழ்கின்ற அங்கத்தினர்களில் ஓரிருவர் பிறிதொருவரை ஏமாற்றுகின்ற பொழுது ஏமாற்றப்பட்டவர் மரணமடைகின்ற பொழுது வெளியிடும் சாப உணர்வுகளை “வீட்டிலுள்ள காந்தப்புலன்கள் கவர்ந்து அவர்களுடைய ஒலி அலைகளைத் தன்னிடத்தில் பதிவு செய்கின்றன…”

மனிதச் சரீரத்தில் ஒருவன் “பிறிதொருவன் எனக்குத் தீமையை விளைய வைத்தான் பாவி…” என்ற உணர்வை ஓங்கி வளர்த்து அதனின் பேரில் எண்ணிய எண்ணங்கள் வெளிப்படுத்திய உணர்வுகள் ஆகியவைகள் ஏமாற்றியவரின் சரீரத்தில் பதிவாகி விட்டால் அவ்வாறு பதிவான உணர்வுகள் அவரிடத்தில் பெருகி அதன் வழிகளில் அவர் குடும்பங்களில் படர்கின்றது.

மற்றும், அக்குடும்பத்திலுள்ள இளம் தம்பதிகளிடம் பிறிதொருவரை ஏமாற்றிய சம்பவங்களைப் பற்றிய பேச்சுக்கள் எழுகின்ற பொழுது
1.அவர்களுடைய கருவிலே இருக்கக் கூடிய குழந்தையிடமும் இவ்வுணர்வுகள் பதிவாகின்றது.
2.இவ்வாறு அவர் இட்ட சாப அலைகள் “இரண்டு மூன்று தலைமுறைக்குத் தொடர்கின்றது…”

இவைகளை யாம் இங்கு எடுத்துரைப்பதற்குக் காரணம்... சமூகத்தில் பெரும்பாலானோர் "யார் போனால் என்ன...? யார் திட்டினால் என்ன...!" என்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் நல்லதே செய்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் அது பிறருக்குத் தீமையை விளைவிக்கின்ற பட்சத்தில் அவர் நம்மைக் கடுமையாக ஏசுகின்ற பொழுது

1."இவன் இப்படித் திட்டுகிறானே பாவி..." என்று நாம் எண்ணுகிற பொழுது

2.அவ்வுணர்வுகள் நமக்குள் பதிவாகி விடுகின்றன.

ஒருவர் சாபமிடும் நிலைகளில் பேசிக் கொண்டிருந்தாலும் வேடிக்கையாகப் பார்த்து... "இப்படிப் பேசுகிறானே பாவி..." என்றால் நமக்குள் அந்த சாப உணர்வுகள் விளைந்து நாமும் சாபமிடும் நிலைகளுக்கே, சென்று விடுகின்றோம்.

இந்நிலைகள் சிறுகச் சிறுக நம்மிடம் விளைந்து நம் குடும்பத்தில் பிறக்கின்ற சந்ததிகளுக்கு... காக்கா வலிப்பு சம்பந்தப்பட்ட நோய்களும் கை, கால் முடக்கங்களும் உண்டாகின்றன.

பெண் குழந்தைகள் என்றால் மாறுகண் நோய்கள் உண்டாகின்றன. ஆஸ்துமா போன்றவைகளும் இவ்வழியாக வருவதே ஆகும்.

இவ்வாறு, குருநாதர் ஒவ்வொரு உணர்வின் இயக்கத் தன்மையையும் சாப அலைகளின் தொடர் பாதிப்புகளையும் எமக்கு மேலும் அறிவுறுத்தும் பொருட்டு, மறு நாள் பகலில்... மீண்டும் அதே இல்லங்களுக்கு முன் எம்மை அழைத்துச் சென்று

1.அந்த இல்லத்தில் உள்ள அங்கத்தினர்களின் சரீரத்தில் அவர்கள் எடுத்துக் கொண்ட உணர்வுகளின் இயக்கத்தையும்

2.அவர்களிடத்தில் செயலாகின்ற சாப உணர்வுகளின் இயக்கத்தையும்

3.எக்ஸ்ரே படம் போன்று "அவர்களின் சரீரத்தை ஊடுருவிப் பார்க்கும் தன்மையை எமக்களித்தார்..."

இவ்வாறு ஒவ்வொரு இல்லத்திலும் நோய் வருவதும் சாபங்கள் இடுவதும் அந்தச் சாப நிலைகளால் குடும்பம் நசிந்து கொண்டிருப்பதும், நம் முன்னோர் காலத்தின் சாப நிலைகளால் பின் வரும் சந்ததியினர்

அனுபவிக்க நேருவதும் போன்ற நிலைகளை எமக்கு நேரடியாக உணர்த்தியருளினார்.

மேலும் இந்தச் சாப அலைகளால் தாக்கப்படுபவர்களிடம் அவ்வுணர்வுகள் விளைந்து உடலில் நோயாகி, அச்சாப உணர்வின் தன்மை உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு அந்த ஆன்மா எவ்வாறு துடிக்கின்றது...? என்கிற நிலையைக் குருநாதர் எமக்குக் காண்பித்தருளினார்.

மனிதனாக இருந்து பிறிதொருவர் அழிய வேண்டும் என்று கோபம் கொண்டு சாபமிடும் நிலைகளில் அவர் இறந்தபின்...

1.அவருடைய உயிராத்மா எந்த உடலுக்குள் சென்றாலும் அவர் இட்ட சாபம் போலவே

2.அங்கே மனிதனைக் கருவாக்க விடாதபடித் தடுத்து அந்த உடலில் தீய விளைவுகளை விளையச் செய்து

3.அந்த உணர்வின் தன்மையை இதனுடைய உணர்வுகளுக்கு உணவாகச் சேர்க்கின்றது.

இவ்வாறு உணவாகச் சேர்த்தபின் அந்த உடலை விட்டு வெளியேறும் அந்த உயிரான்மா மீண்டும் மனிதனாகப் பிறப்பதில்லை.

இது போன்று பிறிதொருவர் அழிய வேண்டும் நாசமாக வேண்டும், என்று எவரொருவர் எண்ணுகின்றாரோ அவருடைய உயிராத்மா "சரீரத்தை விட்டு வெளியே வந்த பின்னும் வேதனையடைகின்றது..."

இந்த உயிராத்மா பிறிதொரு மனிதனின் சரீரத்திற்குள் புகுந்தாலும், அவரிடத்திலும் மனிதப் பிறவியை மீண்டும் பெற முடியாத நிலையை உண்டாக்கி விடுகின்றது.

ஆகவே உடலை விட்டுப் பிரியும் பொழுது

1.உயிராத்மவில் சேர்த்துக் கொண்ட உணர்வுகளுக்கு ஒப்பத்தான் அந்த இடத்திற்கு உயிர் நம்மை அழைத்துச் செல்கிறது என்றும்

2.அங்கே எவ்வாறு அது வேதனைப்படுகிறது...? வேதனையடையச் செய்கிறது...? என்றும்

3.குரு காட்டிய வழிகளில் நாம் தெரிந்து கொண்டோம்.

அறிந்து கொண்ட நிலையில்... இனி ஒவ்வொரு நொடிப் பொழுதும் அருள் மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் பெறுவோம். உயிரோடு

ஒன்றும் உணர்வுகளை ஒளியாக மாற்றிடுவோம், பிறவியில்லா நிலை அடைந்த சப்தரிஷிகளுடன் ஒன்றி வாழ்வோம்.

1.எந்த நேரம் இந்த உடலை விட்டு நம் உயிராத்மா பிரிந்தாலும்
2.சப்தரிஷி மண்டலங்களுடன் இணைந்து, அழியா ஒளிச் சரீரம் அனைவரும் பெறுவோம் என்று "நாம் உறுதி கொள்வோம்..."




# சொந்தமில்லாத உடலுக்காக "உன் மனதை ஏன் வாட்டுகின்றாய்...?" என்றார் குருநாதர்

ஒரு சமயம் நான் காட்டுக்குள் செல்லும் பொழுது எத்தனையோ விபரீத நிலைகள் ஏற்படுகின்றது. அப்பொழுது எனக்குள் பயம் உருவாகின்றது.

என் பெண்டு பிள்ளைகளெல்லாம் ஊரில் இருக்கின்றதே... அவர்களை நான் எப்படி பாதுகாப்பது...? அவர்கள் என்ன ஆனார்களோ...? என்ற இந்த எண்ணம் வருகிறது.

அப்பொழுது இமயமலையிலே நான் இருக்கிறேன். பனி உறையும் இடத்திலே குருநாதர் என்னை இருக்கச் செய்திருக்கின்றார். வீட்டு ஞாபகம் வந்ததும்... குருநாதர் சொன்ன நிலையை மறந்தபின் எனக்குள் குளிர் தாங்க முடியவில்லை.

காரணம் அவர் சொன்ன உணர்வை நான் எடுத்தேன் என்றால் குளிர் தாக்காது என்னைப் பாதுகாக்கும் சக்தி வருகின்றது. ஆனால்...

1.குடும்பப் பற்றை நான் எண்ணி எடுக்கும் பொழுது குளிரின் தன்மை அதிகமாகி உடலே இறையத் தொடங்கியது

2.இன்னும் ஒரு நொடியானால் என் இரத்தமே உறைந்துவிடும்... பின் மடிந்துவிடும் நிலையே வரும்.

ஆகவே என் ஆசை எதிலே நிற்கின்றது...? என் குழந்தை நன்றாக இருக்க வேண்டும்... அப்படி இருக்க வேண்டும்... இப்படி இருக்க வேண்டும்...! என்று எண்ணுகின்றேன்.

ஆனால் அவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில் குருநாதர் என்னிடம்... "நீ இதையெல்லாம் எண்ணுகின்றாய்...! இந்த உடலை விட்டுப் போய்விட்டால் நீ எதைச் செய்யப் போகின்றாய்...?

1.இதற்கு முன்னாடி இருந்தவர்கள் (வாழ்ந்தவர்கள்) ஆசைப்பட்டவர்கள் எல்லாம் இருக்கின்றனரா...?

2.இந்த வாழ்க்கையில் உனக்கு பொன்னடி பொருளு எது சொந்தமாகின்றது...?

3/எதுவுமே சொந்தமில்லை... ஆக... "சொந்தமில்லாததற்கு, ஏன் இந்த மனதை நீ வாட்டுகின்றாய்...?"

மேலும் குருநாதர் என்னிடம்... அவர்கள் நலம் பெற வேண்டும் அருள் ஒளி பெற வேண்டும் அவர்கள் வாழ்க்கையில் உயர வேண்டும்

என்ற உணர்வை உனக்குள் உயர்த்து…! இந்த உணர்வின் நினைவாற்றல் அவர்களை இயக்க உதவும், அது வலுவான நிலைகளை அங்கே உருவாக்கும்.

நீ இப்பொழுது இங்கிருக்கும் நிலைகள் வேதனையும், வெறுப்புமேயானால் உன் உடலைச் சார்ந்தவர் உணர்வுகளிலும் இது பாயும்.

நண்பனுக்குள் "நன்மை செய்தான்…!" என்று எண்ணும்போது விக்கலாகின்றது… நன்மை நடக்கின்றது.

நண்பனுக்குள் பகைமை என்ற உணர்வுகள் தோன்றும் பொழுது "எனக்குத் துரோகம் செய்தான் பாவி… உருப்படுவானா…?" என்று எண்ணினால் உணவு உட்கொண்டாலும் புரை ஓடுகின்றது. ஒரு தொழில் செய்தாலும் அங்கே சீராகச் செய்யாதபடி தவறுகள் நடக்கின்றது.

ஆகவே உன் குழந்தைகள் உயர்ந்த உணர்வின் தன்மை பெற வேண்டும் என்றும் அருள் ஒளி பெற வேண்டும் என்று அருளை நினை. உனக்குள் அதைப் பெருக்கு இந்த உணர்வைப் பாய்ச்சு.

1.இந்த உடல் உனக்குச் சொந்தமில்லை…
2.அவர்களுக்கும் சொந்தமில்லை.

இன்று எந்தச் செல்வம் தேடி வைத்தாலும் இப்பொழுது உன் உயிர் இறைந்தது. நீ இந்த உடலை விட்டுப் போய்விட்டால் இந்தப் பொன்னடி பொருளைப் பற்றி நீ நினைக்கப் போகின்றாயா…? அல்லது அவர்களைக் காக்கப் போகின்றாயா…?

இந்த உணர்வை நீ எண்ணப்படும் பொழுது எதை நிலை கொள்ள வேண்டும்…? எவ்வாறு நீ இயக்க வேண்டும்…? என்பதைக் குருநாதர் அங்கே தெளிவாகக் காட்டுகின்றார்.

இந்த உடல் வாழ்க்கையில்…
1.சொந்தமில்லாத உடலுக்காக நாம் சொந்தம் கொண்டாட வேண்டியதில்லை.
2.சொந்தம் கொண்டாட வேண்டியதெல்லாம் அருள் ஒளி என்ற உணர்வை இணைத்து

3.இந்த உடலே “உணர்வுடன் ஒளியின் உணர்வாகப் பெறும்” அதைச் சொந்தமாக்க வேண்டும்.

அகண்ட அண்டத்தில் வரும் நஞ்சினை வென்றிடும் அருள் உணர்வைக் கூட்டிப் பேரொளி என்ற உணர்வினை நமக்குள் சொந்தமாக்கிடல் வேண்டும்.

ஆறாவது அறிவான கார்த்திகேயா என்ற தெரிந்திட்ட உணர்வு கொண்டு நஞ்சினை நீக்கி அருள் ஒளியை உருவாக்கிநால் என்றும் பேரின்ப நிலைகளாக நாம் நுகரும் உணர்வை உயிரான ஈசன் உருவாக்குகின்றான்.

1.ஈசனுடன் சேர்ந்து என்றும் ஒளி என்ற உணர்வை

2.நாம் ஏகாந்த நிலைகள் கொண்டு பிறவியில்லாத நிலை அடைவதே நமது கடைசி எல்லை.

ஆகவே அனைவரும் நலம் பெற வேண்டும் என்ற உணர்வைச் செலுத்து…! அவர்களை இயக்க இது உதவும்.

ஆனால் அவர்கள் இப்படி இருக்கிறார்கள் என்று நீ வேதனைப்பட்டால் உன்னையும் அழிக்கும். அதே உணர்வுகள் அவர்களையும் அழிக்கும். ஆக நீ எண்ணியது எதுவோ அது தான் நடக்கின்றது.

அவர்கள் வேதனைப்படுகிறார் துன்பப்படுகிறார் என்று எண்ணும் பொழுது அவர்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர். அதே துன்பம் உனக்குள்ளும் விளைகின்றது. நீ எதை எண்ணுகிறாயோ அதுவாகின்றாய்.

1.அவர்கள் அருள் ஒளி பெற வேண்டும் நலம் பெற வேண்டும் என்ற இருளை நீக்கிடும் உணர்வை எடுத்தால்

2.உன் உயிரான ஈசன் அதையே உனக்குள் உருவாக்குகின்றான்.

3.அதன் வழி நீ அதுவாகின்றாய்… அவர்களும் அதன் நிலை பெற்று அவர்களும் நலமாவார்கள்.

ஆகவே இதை மறந்திடாது இந்த உடலின் சொந்தத்தை நீ கொண்டாடாதே…! அருள் ஒளி என்ற சொந்தத்தை வளர்த்திடும் உணர்வை நீ உனக்குள் ஒளியின் சரீரமாக உருவாக்கு. பிறவியில்லா நிலை என்ற நிலை அடை.

உடல் என்ற நிலைகளில் வளர்த்த செல்வம் எதுவும் நம்முடன் வருவதில்லை. அதே சமயம் நல் உணர்வு கொண்டு என் குழந்தை சீராக வளர வேண்டும் அருள் ஞானம் பெற வேண்டும் என்று ஏங்கினால் அதன் உணர்வுகள் அவன் அந்த அருளைப் பெறும் சக்தியும் நீ கொடுத்த செல்வத்தையும் அவன் காப்பான்.

ஆனால் நீ அந்த வேதனை என்ற உணர்வெடுக்கும் போது… தந்தை என்ற நிலையில் நீ எண்ணினால், உன் குழந்தையும் இந்த வேதனையைத்தான் சுவாசிக்கும். அதில் வந்த செல்வத்தைக் காக்கும் திறன் இழந்துவிடும்… அவனும் அனுபவிப்பதில்லை.

1.ஆகவே நீ எதனைச் சொந்தமாக்கப் போகின்றாய்…? என்று

2.இவ்வாறு அந்த இமயமலையில் பல உணர்வுகளை அறியும்படிச் செய்தார்.

ஆகவே நாம் என்றும் பேரின்பப் பெரு வாழ்வு என்ற நிலையைச் சொந்தமாக்குவோம். நம் உயிரான ஈசனுடன் ஒன்றி வாழ்வோம்.

நாம் எதையெல்லாம் எண்ணுகின்றோமோ அதன் உணர்வின்படியே நம்மை உயிர் இயக்குகின்றான் என்று இப்பொழுது உணர்ந்தோம்.

இனி அருள் ஒளி பெற வேண்டும் என்ற உணர்வை நமக்குள் வளர்ப்போம் என்றும் ஏகாந்த நிலையாகப் பிறவியில்லா நிலையை அடைவோம்.

நம் பார்வையில் பகைமை உணர்வு ஓடவேண்டும் நஞ்சு கொண்டோர் உணர்வுகள் நீங்க வேண்டும் என்று

1.அருள் ஒளியை நமக்குள் பெற்றோம் என்றால் நம் பார்வை, பிறருடைய நஞ்சைப் போக்கும்.

2.அவருடைய நஞ்சான உணர்வு நமக்குள் வராது.

அருள் ஒளி பெறுவோம் இருளை அகற்றும் அருள் ஞானத்தைப் பெறுவோம். இந்த வாழ்க்கையில் பேரின்பப் பெரு வாழ்வாக என்றும் எகாந்த நிலையில் வாழும் அந்த அருள் சக்தியைப் பெறுவோம்.

1.உயிருடன் ஒன்றியே நாம் நிலைத்து வாழ்வோம்.

2.என்றும் எதனையும் அறிந்திடும் உணர்வுடன் வாழ்வோம்.

3.எல்லாம் ஏகாந்தம் என்ற நிலையில் வாழ்வோம்.

4.பகைமையற்ற உணர்வுடன் வாழ்வோம்.

5.பகைமையான உணர்வுகள் சேராது அருள் ஒளி என்ற உணர்வை நமக்குள் உருவாக்குவோம்.




## குரு உணர்த்திய அருள் வழி - குரு பலம்

குருதேவர் ஒருமுறை எம்மை ஆனைமலைக் காட்டுப் பகுதிக்குள் அழைத்துச் சென்று இத்தனாவது மைலில் இன்ன மரத்தில் இது போன்று இருக்கும் மச்சத்தை, (ஒரு அடையாளம்) எடுத்து வா என்று சொல்கிறார்.

அவர் சொன்ன நேரம், மாலை ஆறு மணி இருக்கும். அந்த நேரங்களில் காட்டு மிருகங்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். ஆகவே, குருதேவர் சொன்னை இடத்திற்கு எவ்வாறு செல்வது...? என்று பயந்தோம்.

நான் எது சொன்னாலும் செய்வேன்...! என்று சொன்னாயே இபொழுது "முடியாது" என்று சொல்கிறாயே "மறுக்காதே... சென்று வா" என்று கூறினார்.

யாமும் பயந்தபடி சிறிது தூரம் நடந்தோம். பிறகு "இங்கே வா..." என்று எம்மை அழைத்தார்.

அழைத்தவர் எம்மை அருகில் நிறுத்தி "சில ஆற்றல்களை..." யாம் பெறும் வண்ணம் உபதேசங்களைக் கொடுத்து இப்பொழுது நான் சொல்லிக் கொடுத்தவைகளை உபயோகப்படுத்து. எதிரே தெரியும் மரம் கீழே சாயும்...! என்றார்.

அவ்வாறே, அவர் சொல்லிக் கொடுத்தவைகளை எதிரே தெரியும் மரத்தின் முன் செய்ய அந்த மரம் கீழே சாய்ந்தது. பிறகு குருதேவர் "இப்பொழுது காட்டினுள் செல்... நான் சொன்னதை எடுத்து வா...!" என்றார்.

எமக்கு, இப்பொழுது தைரியம் பிறந்தது. துணிவுடன் காட்டினுள் நடந்தோம்.

ஏற்கனவே வேட்டைக்காக காடுகளுக்குள் சென்ற அனுபவம் எமக்கு உண்டு. யானைகள் அருகே நடமாடும் பொழுது கீழே காற்று வராது, மரக்கிளைகள் அசையும் ஒலி கேட்கும்.

அந்த அறிகுறிகளை வைத்து, யானைகளின் நடமாட்டத்தின் தூரத்தைக் கணிப்போம். இதனை அடிப்படையாகக் கொண்டு யாம் நாலாபுறமும் கவனித்தவாறே சென்று கொண்டிருந்தோம்.

உற்றுக் கவனிக்கும் பொழுது தூரத்தில்... யானைகள் காதை ஆட்டாமல் அசைவில்லாமல் நின்று கொண்டிருந்ததைக் கவனிக்க நேர்ந்தது.

இருந்தாலும் எமக்கு நிறைய தைரியம் இருந்தது. ஏனென்றால் யாம் விரலை அசைத்தால் போதும் எதனையும் கீழே சாய்க்கும் வலிமை உள்ளதே என்ற நம்பிக்கை.

இந்த நம்பிக்கையுடன் யாம் முன்னேறிச் சென்று கொண்டிருந்தபோது, குருதேவர்... “ஏய் தெலுங்கு ராஜ்ஜியம்...!” என்று ennaik கூவி அழைத்தார்.

குருதேவர் எம்மைத் திட்ட வேண்டும் என்று கருதினால் “தெலுங்கு ராஜ்ஜியம்...” என்றுதான் திட்டுவார். இப்பொழுதும் “தெலுங்கு ராஜ்ஜியம்” எங்கே போகிறாய்...? என்று கேட்டார்.

“நீங்கள் சொன்ன மச்சத்தை எடுக்கச் செல்கிறோம் என்றோம்...” யாம்.

இப்பொழுது நீ என்ன நினைத்தாய்...? என்று கேட்டார்.

அதற்கு யாம் “நீங்கள் கொடுத்த ஆற்றலைக் கொண்டு... யானைகளைச் சாய்க்கப் போகிறேன்...” என்று பதில் கூறினோம்.

அதற்கு குருதேவர்... “நீ இப்பொழுது யார் வீட்டிற்குள் செல்கின்றாய் என்று தெரிகின்றதா...? நீ வாழும் வீட்டில் அந்நியன் ஒருவன் நுழைந்து விட்டால் உனக்குக் கோபம் வருமல்லவா...! அதைப் போன்றுதான் யானைகளுக்கும்...! அது வாழும் காடுதான் அதற்கு வீடு.. அவ்வாறு இருக்கையில் அதனுடைய வீட்டிற்குள் சென்றால், அதற்குக் கோபம் வருமல்லவா...?

நீ உன்னுடைய காரியமாகச் செல்கின்றாய்.

1.உனக்குள் வலிமை இருக்கின்றது என்ற காரணத்தினால் பிறிதொன்றை வீழ்த்திவிடும்... அழித்துவிடும் எண்ணம் கொள்வாயானால்...

2.அந்த எண்ணம் உனது உயிரான ஈசனால் இயக்கப்பட்டு

3.அந்த உணர்வின் சக்தி, உன் உடல் முழுவதும் படருகின்றது.

4.இதனால் உனக்குள் உள்ள நல்ல சக்தியை இழக்கின்றாய்.

நீ யானையிடம் இருந்து தப்பித்தாலும்... அதைக் கொன்று விடவேண்டும் என்று அதன் மீது ஆற்றலை உபயோகப்படுத்திய உணர்வின் சத்து உனக்குள் சென்று “உன்னுள் உள்ள நல்ல உணர்வுகளை மாய்க்கும் விதத்தை அறிந்து கொள்...! என்று அங்கே உணர்த்துகிறார்.

எமக்கு ஒன்றும் புரியவில்லை...! வலிமை இருக்கிறது என்று மற்றொன்றைக் கொல்ல முற்படக்கூடாது. ஆனால் வருகின்ற ஆபத்திலிருந்து எப்படித் தப்பிப்பது...? என்று குழம்பினோம்.

அதற்கு குருதேவர்... "இவ்வளவு பெரிய ஆற்றல் உனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அதனை நீ மற்றொன்றை மாய்த்திடும் நிலைக்கு பயன்படுத்துவேயானால் உன் உணர்வுகள் எங்கே போகும்...?

எவ்வாறு நீ உனக்கு உணர்த்திய உணர்வின் ஆற்றல்களை பெறப் போகின்றாய்...? என்று அவர் கேட்கிறபொழுதுதான்... என்ன செய்வது...? என்று தெரியாமல் "குருவை மறந்துவிட்டது..." நினைவுக்கு வருகின்றது.

1.குரு அருளின் துணை கொண்டு செயல்பட வேண்டிய நாம்

2.குரு நமக்குப் பெரும் ஆற்றல் கொடுத்திருக்கிறார் என்று அதைப் பெரிதாக எண்ணி குருவை மறந்து

3.பிறிதொன்றை வீழ்த்திடும் அசுர உணர்வைத்தான் எண்ண முடிந்ததே தவிர...

4.என்னால் நல்ல உணர்வை அங்கே எண்ண முடியவில்லை...! என்பதை நிதர்சனமாகவே காட்டுகின்றார்.

யானையிடமிருந்து எப்படித் தப்பிக்க வேண்டும்...? என்று எண்ணி கண்ணை மூடித் தியானிக்கும் பொழுது அதனின் உணர்வலைகளை அறிய நேரிடுகின்றது.

அதாவது...

1.யானையின் மணத்தை நுகர்...! அதனின் உணர்வின் சக்தி உனக்குள் சேரும்.

2.யானைக்கும் உணர்வின் ஆற்றலை உணரும் சக்தி உண்டு.

3.அப்பொழுது அதனின் மணத்தை நீ நுகரும் பொழுது அதனின் சம எடையாக வருகின்றாய்.

4.அதனால், யானை உன்னை ஒன்றும் செய்யாது...! என்று கூறுகிறார்.

பிறகு யானையின் மணத்தை என்மீது பரவச் செய்கின்றார்.

யானைகள் காதை விடைத்துத் தூக்கி விட்டால் அது கோபத்தில் இருக்கிறது... ஆளைப் பிடித்து கொன்றுவிடும் என்பது பொருள். யாம்

அதே சிந்தனையில் இருந்து கொண்டிருக்கின்ற பொழுது எம்மை உரசியவாறே சுமார் 13 யானைகள் கடந்து செல்கின்றன.

அப்பொழுது குருதேவர் சொல்கின்றார்,

1.நீ எதை எதனுடைய நிலைகளில் வலுப் பெறச் செய்ய வேண்டும்...? குரு காட்டிய வழி எது...?

2.குருவினுடைய சக்தியை உணர்ந்து கொண்டாய் என்றால் அந்தக் குருவின் துணை கொண்டு எப்படி இயங்க வேண்டும்...? என்பதை உணர்த்தி

3.குருவின் துணையுடன் நீ செயல்படும் பொழுது... "அனைத்தையும் பெறும் தகுதி பெறுகின்றாய்...!" என்றார்.

ஆகவே நீ இவைகளைப் பெற விரும்புகின்றாயா...? அல்லது மற்றொன்றை வீழ்த்திவிட்டு அதனால் உனக்கு புகழ் தேடும் நிலையும் ஆணவம் பெறும் நிலையும் பெற விரும்புகின்றாயா...? என்று கேட்டு எதைப் பெற வேண்டும்...? என்று உணர்த்தி அருளினார்.

பிறகு குருதேவரிடம் அனுமதி வாங்கிக் கொண்டு மச்சத்தை எடுத்து வர நடந்தோம். அவர் சொன்ன விதமே, இருந்த மச்சத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வருகின்ற பொழுது... எமக்கு எதிரே "மலைப்பாம்பு..." ஒன்று ஊர்ந்து வரக் கண்டோம்.

அது சீறி வரும் நிலையைக் கண்டு எமக்குள் இருந்த தைரியம் குறைவதை அறிகின்றோம். யானைக்கு ஒரு விதமாகத் தப்பித்தோம் இந்தப் பாம்பிடம் இருந்து எவ்வாறு தப்பிப்பது...? என்று சிந்தித்தோம்.

இதையும் குருவின் பலம் கொண்டுதான் சமாளிக்க வேண்டும் என்று எண்ணுகையில்

1.குரு எமக்குள் அந்தப் பாம்பைக் கண் கொண்டு பார்த்து

2.நீ எந்த உணர்வை அதன் மேல் செலுத்துகின்றாயோ அந்த உணர்வின் அலைகள் அதன் பாதையைத் திசை மாறச் செய்யும்..

3.அப்பொழுது அதன் மீது "பரிவின் எண்ணம் கொண்டு... அது நகர்ந்து செல்ல வேண்டும்..." என்ற எண்ணத்தைப் பாய்ச்சு...! என்று உணர்த்துகிறார்.

அவ்வாறே அதைக் கண் கொண்டு பார்த்து, உணர்வின் தன்மையை குரு வழி கொண்டு அதன் மீது செலுத்துகின்ற பொழுது அப்பாம்பானது விலகிச் செல்கின்றது. மச்சத்தை இறுகப் பிடித்தவாறே வருகின்றோம்.

இவைகளெல்லாம் நம் குருதேவர் நம் அனுபவத்திற்குக் கொடுத்து

1.மனிதருடைய எண்ணத்திற்கு உள்ள வலிமையையும்

2.மனிதர் தாம் எடுத்துக் கொண்ட உணர்வை உயிர் இயக்கும் விதங்களையும்

3.உணர்வின் தன்மை நமக்குள் உணர்வின் வித்தாக விளைந்து அதை எண்ணத்தால் எண்ணப்படும் பொழுது

4.அது நம்முடைய செயலாக ஆக்கம் பெறுகின்றது என்பதைக் காட்டுக்குள் அழைத்துச் சென்று உணர்த்தினார்.




## வராகன்

வராகன்... தான் எவ்வாறு கெட்டதை நீக்கி நீக்கி... நாற்றத்தை நீக்கி, நல்ல உணர்வினைத் தனக்குள் எடுத்தது...? என்று ஞானியர்கள் சொன்னார்களோ அதைப் போல

1.இப்பொழுது உங்கள் எண்ணங்கள் மகரிஷிகள் காட்டிய மெய் உணர்வுகளைக் கூர்மையாகக் கவர

2.உங்களின் நினைவின் ஆற்றலை விண்ணை நோக்கிச் செலுத்துவதற்கே இந்த உபதேசம்.

வராக அவதாரம் என்றால் என்ன...?

நாற்றத்தைப் பிளந்துவிட்டுச் சாக்கடைக்குள் இருக்கும் நல்ல பொருளைப் பன்றி நுகர்ந்து எடுக்கின்றது. மண்ணைப் பிளந்துவிட்டுத் தன் உணவின் தன்மையைத் தன் நுகரும் ஆற்றலால் அது எடுத்து உணவாக உட்கொள்கின்றது.

தீமையை (நாற்றத்தை) நீக்கி நல்லதை உட்கொண்ட உணர்வின் சத்து அதே ஞானமாக அதை எண்ணிய நிலைகள் கொண்டு எதை எண்ணியதோ காந்தம் லட்சுமி இதைக் கவருகின்றது.

அதாவது... தன் உடலிலிருந்து கெட்டதை நீக்கிவிட்டு நல்லதைப் பெற வேண்டுமென்ற ஞானத்தின் எண்ணங்களை அங்கே அது கவருகின்றது.

எடுத்துக் கொண்ட இவையனைத்தையும் வெப்ப காந்தங்கள் படைக்கின்றது என்ற இந்த உண்மையின் நிலைகளைத் தெரிந்து கொள்வதற்குத்தான்

1.மூன்று உணர்வின் நிலைகள் ஆயுதங்களாக ஒவ்வொரு உடலிலும் இயங்கியதை (வெப்பம் காந்தம் விஷம்)

2.அதை உணர்த்த ஆயுத பூஜை என்று வைத்தது.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எம்மைச் சாக்கடையில் உட்கார வைத்துத் தான் உபதேசித்தார். இப்பொழுது, நீங்கள் சாக்கடையில் உட்காரவில்லை. நல்ல இடத்தில் மகிழ்ச்சியான இடத்தில் உட்கார்ந்து இருக்கின்றீர்கள்.

அன்று... பைத்தியத்துடன் சேர்ந்து நான் சாக்கடையில் உட்கார்ந்து இருக்கின்றேன் என்று எம்மைக் கிண்டல் கேலி செய்தார்கள்

ஏனென்றால் அங்கே உட்கார்ந்திருந்த நிலையில்... எம்மை டீ காபி வாங்கி வரச் சொல்லி, சாக்கடையில் இருந்த கழிவைப் போட்டு "நீ குடி....!" என்கிறார் குருநாதர்.

“அய்யய்ய...” என்று யாம் மறுக்கின்றோம்.

கூர்மை அவதாரம் வராக அவதாரம் எவ்வாறு இருக்கும்...?

கூர்மையாக அந்த நாற்றத்தை எண்ணுகின்றாய். அந்த உணர்வின் சத்து, உனக்குள் நாற்றமாகின்றது. இதைப் பார்க்கும் அடுத்தவர்கள் என்ன செய்வார்கள்...? என்று எண்ணுகின்றாய், அந்த உணர்வின் சத்து உனக்குள் வருகின்றது.

ஆனால் இந்தப் பன்றி என்ன செய்கின்றது...? நாற்றத்தைப் பிளந்து நல்ல உணர்வை எடுத்தது.

1.அது நாற்றத்தை எண்ணவில்லை... நீ நாற்றத்தை எண்ணுகின்றாய்.
2.அடுத்தவன் என்ன சொல்கின்றான்...? என்று எண்ணுகின்றாய்.

இப்போது இதைச் சேர்த்துக் கொள்கிறாயா...? அல்லது அதைச் சேர்த்துக் கொள்கிறாயா...?

1.நீ உயர்ந்த நிலையைச் சேர்த்துக் கொள்கின்றாயா...? அல்லது
2.நாற்றத்தை நீக்க வேண்டும் என்று எண்ணுகின்றாயா...?

நாற்றத்தை எண்ணியவுடனே... நீ எதை எண்ணுகின்றாயோ அதை உன் உயிர் படைக்கின்றது... அதுவாகின்றாய். கீதையிலே... “நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்...” என்று உணர்த்தப்பட்டுள்ளது.

“அய்யய்ய...” என்று கண்ணில் பார்க்கின்றேன். நாற்றம் என்று எண்ணுகின்றேன். அப்பொழுது இந்த எண்ணம் வரப்படும் பொழுது, கண்ணன் (கண்கள்) என்ன சொல்கிறான்...?

நாற்றம் என்கிற பொழுது நாற்றத்தை ஈர்த்துப் பார்க்கச் செய்கின்றது. அதை (என் கண்கள்) இழுத்தவுடனே... நாற்றம் என்றவுடனே அதிகமாகி விடுகின்றது. அந்த நாற்றம் உடலினுள்ளே சென்றவுடன் விளைந்து விடுகின்றது.

“நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்...!” நாற்றத்தை நீக்கி நல்ல பொருளை எடுக்க வேண்டும் என்று எண்ணினால் நீ அதுவாகிறாய். இதைத்தான் கண்ணன் கீதையிலே சொன்னது.

அதைப் போல, என்னைக் கேவலமாகப் பேசுவார்களோ...? என்று மற்றவர்களைப் பார்க்கின்றேன், நாற்றத்தில் எவ்வாறு இருக்கும்...? என்று

எம்மைச் சாக்கடையில் வைத்துத்தான் நமது குருநாதர் உபதேசம் கொடுக்கின்றார்.

சாக்கடை அருகில் உட்கார்ந்தால் நீங்கள் என்ன சொல்வீர்கள்…? “பாரு… எல்லாம் காசு ஆசை பிடித்துப் போய், சாமியாரிடம் வித்தையைக் கற்றுக் கொள்வதற்காக வேண்டி உட்கார்ந்துள்ளார் என்பீர்கள்.

ஏனென்றால் அந்தச் சித்து இந்தச் சித்து தங்கம் செய்வது… வெள்ளி செய்வது, என்று தான் சாமியார் பின்னால் போகின்றார்கள்.

இப்பொழுது என் கூர்மை என்ன செய்கின்றது…? அவர்கள் என்ன நினைப்பார்கள்…? இவர்கள் என்ன நினைப்பார்கள்…? என்று அதை வலுவாக எடுக்கும் பொழுது… இந்த நாற்றத்தை எனக்குள் சேர்த்து விடுகின்றது.

வராகன் என்ன செய்கின்றது…? என்று காட்ட இவ்வாறு, பல நிலைகளில் என்னைச் சாக்கடைக்கு அருகில் அல்லல்பட வைத்தார் குருநாதர்.

1.எண்ணங்கள் உருவாகி உன் உடலுக்குள் உணர்வுகள் எதைக் காட்டுகின்றது…?
2.அந்த உணர்வை எடுத்தவுடன் உனது ஆன்மாவாக எவ்வாறு மாறுகின்றது…?
3.ஆன்மாவிலிருந்து சுவாசித்தவுடன் உயிரில் (புருவ மத்தியில்) எவ்வாறு படுகின்றது…?
4.அப்பொழுது உயிர் நீ சுவாசித்ததை இயக்கி “அய்யய்ய நாற்றம்” என்று இந்த உடலை அழைத்துச் செல்கின்றது.

இது கூர்ம அவதாரம்.

கூர்மையாக நாற்றத்தைப் பார்க்கின்றாய்.. அதனின் உணர்வு வலுவாகச் சுவாசித்தால் வராக அவதாரம். அதனுடைய வலிமை கொண்டு “நாற்றம்… நாற்றம்…” என்று நீ போகின்றாய்.

அவ்வாறு சென்று கூர்மை அவதாரத்திற்கும் வராக அவதாரத்திற்கும் இரண்டுக்கும் இணை சேர்த்து அதிலே நீ எதைக் கூர்மையாக எண்ணுகின்றாயோ அதனின் உணர்வு உனக்குள் சென்றவுடன்
1.உன் ஈசனான உயிர் அதை வலுவாக்கி அதனின் நிலைகள் கொண்டு

2.அதே எண்ணத்தை எண்ணும் பொழுது இந்தக் கண் என்ன செய்கின்றது...?

3.இதையே எடுத்து நுகர்ந்து "அய்யய்ய" என்று சொல்லி உன்னை விலகச் செல்லும்.

நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகின்றாய். இந்தச் சாக்கடையை விட்டு விலகிச் செல்ல வேண்டும் என்று எண்ணுகின்றாய். ஆனால் எடுத்துக் கொண்ட உணர்வே சாக்கடையாக சுவாசத்தின் வழி உள்ளே வருகின்றது.

இந்த நிலையை உணர்த்தி என்னை அங்கே பக்குவப்படுத்துவதற்காக... சாக்கடைப் பக்கம் இவ்வளவு உபதேசம் கொடுக்கின்றார் குருதேவர்.

எனக்குக் காபி அவருக்கு டீ இரண்டையும் சாக்கடைக்குப் பக்கத்தில் வைத்து அதிலே சாக்கடையிலிருந்து அள்ளிப் போட்ட குப்பை இரண்டைப் போட்டு என்னைக் "குடி" என்கின்றார் குருதேவர்.

அப்பொழுது என்னுடைய பார்வை என்ன செய்கின்றது...? இந்தச் சாக்கடையையும் பார்க்கின்றேன்... ஆள்களையும் நினைக்கின்றேன். இவரிடம் வசமாகச் சிக்கிக் கொண்டேன் என்று நினைக்கின்றேன். இந்தக் காபியை எவ்வாறு குடிப்பது...?? என்றும் எண்ணுகின்றேன்.

கீதையிலே, நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய் என்று சொல்லப்பட்டது. அவர் சாக்கடையைக் குடி என்கிறார். அதை எண்ணியவுடனே எவ்வாறு குடிப்பது...? என்று விலக்கிச் செல்கின்றது.

இந்த எண்ணத்தால் அவ்வாறே திகைத்துக் கொண்டு இருக்கின்றேன். காபியில் இதை அள்ளிப் போட்டார். குடிக்க முடியவில்லை. எல்லோரும் நைனாவிற்குப் (சாமிகளுக்கு) பைத்தியம் பிடித்து விட்டது என்று சொல்கின்றார்கள். ரோட்டில் போகின்றவர்கள் பேசிக் கொண்டு இருக்கின்றார்கள். இதையும் கேட்கின்றேன்.

அப்பொழுது நான் நகர்ந்து செல்கின்றேன். போகப் போக, இந்தப் பக்கம் போகலாமா...? அந்தப் பக்கம் போகலாமா...? என்று இந்த மனம் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

நாம் எதை எண்ணுகின்றோமோ அதை உயிர் இயக்கி உடல் முழுவதும் பரவச் செய்து... அதே இயக்கமாக எவ்வாறு இயங்குகின்றது...? என்ற நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார் குருதேவர்.

"சரி... நீ போய் டபாரா செட்டைக் கொடுத்துவிட்டு வா..." என்றார் குருதேவர்.

கடையில் கொண்டு போய்க் கொடுத்தால்... வாங்கவா செய்வார்கள்...? நீ உன் வீட்டிலேயே வைத்துக் கொள் என்றார்கள். டபரா செட்டிற்குக் காசு கொடுத்தேன். வாங்க மாட்டேன் என்றார்கள். இவ்வாறாகி விட்டது.

நீ வரும் பொழுது, கொஞ்சம் முறுக்கு, கடலைப் பருப்பு, பொட்டுக் கடலை வாங்கிவா என்றார் குருநாதர். மூன்றையும் வாங்கிக் கொண்டு வந்தேன்.

சாக்கடை அருகில் ஏழெட்டுக் கோடு போடச் சொன்னார். முதலில் பொட்டுக் கடலையைச் சாக்கடையில் போடச் சொன்னார். இரண்டாவதாக முறுக்கைச் சாக்கடையில் போடச் சொன்னார். மூன்றாவதாக, நிலக்கடலையைச் சாக்கடையில் போடச் சொன்னார்.

அங்கிருந்து பன்றி வருகின்றது வந்தவுடனே ஒவ்வொன்றாக மோந்து பார்க்கின்றது. பொட்டுக் கடலை முன்னால் இருக்கின்றது. அதை விட்டுவிடுகின்றது.

அடுத்து... முருக்கு வேகமாக எணணெய் வாசனை வருகின்றது. நாற்றத்திற்குள் இதைக் கண்டுபிடித்து அந்த முறுக்கை எடுக்கின்றது.

அடுத்து, எண்ணெய் வாசனை உள்ள கடலைப் பருப்பைச் சாப்பிடுகின்றது. அடுத்துப் பொட்டுக்கடலை இருக்கின்றது. அதை விட்டுவிட்டது. மாற்றி அந்த வாசனையைத்தான் நுகர்ந்து எடுக்கின்றது.

சாக்கடைக்குள் பார்த்தாயா...? என்றார் குருநாதர். அது நாற்றத்தை எடுக்கவில்லை... நீ எதை எடுக்கின்றாய்...! என்றார்.

காபி இருக்கின்றது... நீ பிரித்துப் பார்க்க முடியவில்லை. நீ ஆகாரம் சாப்பிட்டவுடனே சாப்பிடும் ஆகாரத்தில் உள்ள நாற்றத்தை உன் உடல் பிரித்து மலமாக மாற்றி விடுகின்றது.

உன் உடலிலிருந்து, வரக்கூடிய ஆறாவது அறிவு, இதைப் பிரிக்கக் கூடிய சக்தியாக இருக்கின்றது நீ ஏன் இதைப் பிரிக்க முடியவில்லை…? என்று கேட்கின்றார் குருநாதர்.

நான் என்ன பதில் சொல்வது…?

சாக்கடைக்குள் இருக்கும் நல்ல பொருள்களைப் பன்றி எப்படி நுகர்ந்து எடுத்து நல்ல உணர்வைத் தனக்குள் எடுத்து

1.நாற்றமான உடலில் கலந்து, நாற்றத்தை நீக்கிடும் உணர்வுகளை வளர்த்ததோ

2.அதே போல பல சரீரங்களைத் தனக்குள் எடுத்து இதே உயிர்தான், நம்மை மனிதனாக ஆக்கியிருக்கின்றது.

மனிதனாக ஆனபின்… சந்தர்ப்பத்தால் ஏற்படும் நஞ்சு கொண்ட நிலைகளும்… உணர்வின் எண்ணத்தால் ஈர்க்கும் தீமைகளையும் நீ எவ்வாறு மாற்றுவது…? என்றும் அதை எப்படி மாற்றிக் கொள்ள முடியும்…? என்ற நிலைகளையும் அங்கே தெளிவாக எடுத்துக் கூறினார், குருநாதர்.

பன்றி சாக்கடையில் உள்ள நாற்றத்தைப் பிளந்து நல்ல உணர்வை நுகர்ந்த மாதிரி…

1.நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சாக்கடையான காற்று மண்டலத்திலிருந்து,

2.நல்லவற்றை எடுக்கக் கற்றுக் கொடுத்தார் நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர்.

இன்று கழிவுப் பொருள்களை எடுப்பவர்கள் (தூய்மைப் பணியாளர்கள்) அந்தக் கழிவுப் பொருளை எண்ணத்தால் நுகர்வது இல்லை.

1.அதை நீக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும் பொழுது

2.கழிவுப் பொருளின் மணம் அவர்களுக்கு வருவதில்லை.

ஆனால் நாம் என்ன எண்ணுகிறோம்…? கழிவுப் பொருள் எடுப்பதைப் பார்த்தவுடன், “ஐய்யய்யோ நாற்றமாகின்றது…” என்று சொல்லி நாற்றத்தை உடலுக்குள் கலக்கவிட்டு கழிவுப் பொருளின் சத்தையெல்லாம் நமக்குள் சேர்த்துக் கொள்கிறோம்.

1.இப்படி… எதனின் உணர்வை நாம் சேர்க்கின்றோமோ அந்த உணர்வின் தன்மை நமக்குள் சென்று நமக்குள் நாற்றமாகும் நிலையும்,

2.நாற்றத்தைக் கண்டு வெறுப்பின் நிலையில் எண்ணங்கள் உருவாகும் பொழுது யாரைப் பார்த்தாலும், அசிங்கமாகத் தெரியும்.

“இது சுத்தம் இல்லை… அது சுத்தம் இல்லை…” என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் உடலில் பாருங்கள். நாற்றம் வந்து கொண்டே இருக்கும். சட்டைத் துணியினை நுகர்ந்து பாருங்கள், நாற்றம் இருக்கும்.

1.நாற்றத்தைப் பிடிக்கவில்லை என்று நாற்றத்தைத்தான் நுகருகின்றார்கள்.

2.இதுவெல்லாம் நாம் எடுத்துக்கொண்ட உணர்வின் இயக்கங்கள்,

ஆகவே… எதைக் கூர்மையாக எண்ணுகின்றோமோ அதனின் வலுக் கொண்டு அதனின் வலிமையாக அடுத்த உருவை நம் உயிர் உருவாக்குகின்றது என்ற நிலையை அங்கே காட்டுகின்றார் குருதேவர்.




வாலி சுக்ரீவன்

ஒரு நோயாளியையோ தீமை செய்பவரையோ பார்க்க நேர்ந்தாலும் அது வாலியாக வலிமை மிக்க சக்தியாக நமக்குள் வந்து நல்ல குணங்களை அடக்குகிறது.

அருள் ஞானிகளின் உணர்வை நமக்குள் பதிவு செய்து வைத்திருந்தால் அதைத் தடுக்க முடியும்.

1.அருள் மகரிஷிகளின் உணர்வுகளை நாம் கவர்ந்தோம் என்றால்

2.அந்த உணர்வுகள் நமக்குள் தீயதை அடக்கும் நிலையாக வரும்.

இதைத் தான் இராமாயணத்தில் இராமன் வாலியை, சுக்ரீவன் துணை கொண்டு அடக்கினான் என்று நமது காவியத் தொகுப்புகளில் காண்பித்திருப்பார்கள்.

அதாவது… மனிதனில் தீமைகளை வென்ற அந்த வலிமையான சக்தியை நாம் எடுப்பதற்காக… சப்தரிஷி மண்டலங்களிலிருந்தும் துருவ நட்சத்திரத்திலிருந்தும் வரக்கூடிய உணர்வை நாம் நுகர்ந்து இந்த வலிமைமிக்க விஷத்தை வாலியை அடக்குதல் வேண்டும்.

சப்தரிஷி மண்டலங்களிலிருந்தும் துருவ நட்சத்திரத்திலிருந்தும் வரக்கூடிய உணர்வை சூரியனின் காந்த சக்தி கவர்ந்து வருவதை நாம் எண்ணத்தால் நுகர்ந்தால் "சுக்ரீவன்…"

1.அந்த உணர்ச்சிகள் நமக்குள் ஊடுருவி நஞ்சு கொண்ட உணர்வை நமக்குள் அடக்குகின்றது.

2.இதைத்தான் சுக்ரீவன் துணை கொண்டு வாலியை இராமன் அடக்கினான் என்பார்கள்.

இதில் வாலி அண்ணன்… சுக்ரீவன் தம்பி.

1.ஆதியில் விஷத்தின் இயக்கத்தால் தொடர்ந்து வந்தவன் தான் அண்ணன் வாலி.

2.மனிதனாக ஆனபின் உணர்வின் தன்மையை ஒளியாக்கும் நிலை பெற்றது சுக்ரீவன்.

ஆக… பின்னால் பிறந்ததுதான் ஒளி இவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றார்கள். இதனால் வாலி சுக்ரீவன் என்று காரணப் பெயர்களை வைத்துச் சகோதரர்கள் என்று காட்டினார்கள்.

சுக்ரீவனின் துணை கொண்டு, வாலியை அடக்கப்படும் பொழுது இது இணைந்து, நமக்குள் நன்மை செய்யும் சக்தியாக மாற்றுகின்றது என்பதையே நமது காவியத் தொகுப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.


மெய் ஞானிகள் தம்முள் கண்டுணர்ந்த இயற்கையின் செயலாக்கங்கள் அனைத்திற்கும் "காரணப் பெயர்களைச் சூட்டினார்கள்..."

1.தம் இன மக்கள் அனைவரும் விண்ணின் ஆற்றலைத் தம்முள் பெற்று

2.ஒளி பெறும் உணர்வாக வளர்க்கும் நிலைக்காகத் தாம் கண்டறிந்த பேருண்மையின் தன்மைகளை அவ்வாறு வெளிப்படுத்தினர்.

மெய் ஞானிகள் வெளிப்படுத்திய உணர்வின் ஆற்றலைக் கவர்ந்து நம்முள் நஞ்சான உணர்வுகளை ஒடுக்கி மெய்ப் பொருளைப் பெறும் நிலையாக நமது உணர்வினை வளர்ப்போம்.

ஆகவே... மெய் ஞானிகள் காண்பித்த வழியினைக் கடைப்பிடிப்போர் அனைவரும் என்றும் பேரானந்த பெரு நிலையைப் பெறுவதற்கு எமது அருள் ஆசிகள்.




## சிந்தித்துச் செயல்படும் “அருள் ஞானம்…”

அழுக்குத் தண்ணீரிலே நன்னீரை ஊற்றும் பொழுது முதலில் கலங்கலாக இருக்கும். நன்னீர் அதிகமான பின் கலக்கத்தின் தன்மை சிறிது தெளியும்.

இதைப் போன்று எத்தனையோ உணர்வுகள் உங்கள் வாழ்க்கையில், அழுக்கு உணர்வாக இருப்பினும் அதிலே அருள் ஞான உணர்வை இணைக்கும் போது உங்களுக்குள் மனம் தெளியும் நிலை வருகின்றது.

அதனால்தான் யாம் உபதேசம் செய்யும் நேரத்தைக் கொஞ்சம் அதிகமாக எடுத்துக் கொள்கின்றோம்.

யாம் சொல்வதெல்லாம்...

1.துருவ நட்சத்திரத்தின் சக்தியை ஒவ்வொரு அணுக்களிலும் இணையச் செய்து

2.உங்கள் நினைவாற்றலை ஒவ்வொரு உணர்வுகளும் நமக்குள் எப்படி இயங்குகின்றது...? என்று அறியச் செய்ய

3.அந்த நினைவுடன் அருள் ஞானியின் உணர்வைக் கலக்கச் செய்து அந்த ஆற்றலைப் பெறச் செய்கின்றேன்.

உங்களுடைய நல்ல சிந்தனையை அடக்கச் செய்யும் நிலைகளிலிருந்து அதனை அடக்கும் அருள் ஞானியின் உணர்வை உங்களுக்குள் பெருக்கும் சூழ்நிலையை உருவாக்கும் நேரம் இது (துருவ தியான உபதேசம்).

உங்களுடைய அழுத்தத்தின் நிலைகளை (எண்ண உணர்வுகளை) அளவுகோலாக வைத்து ஒவ்வொரு உணர்வுகளிலும்... வாழ்க்கையில் எதிர்நிலை (தீமைகள்) வருகின்றதென்றால் அந்தக் காலத்தை அளக்கும்.

1.அதற்கு என்ன செய்ய வேண்டும்...? என்ற சிந்தனை வரும்

2.பருவம் வரும் பொழுது, சொல்வோம் என்று விலகிச் செல்லும்... காலத்தை விரயமாக்காது.

நாம் உயர்ந்த தத்துவத்தை வைத்திருக்கிறோமென்று அவசரமாகப் போகிறவரிடம் சொன்னால் சரி...சரி...! என்பார்கள். ஆனால் ஏற்றுக் கொள்ளும் தன்மை இல்லாது போய்விடும்.

இதுவெல்லாம் உங்களுக்குள் அனுபவரீதியில் கொடுப்பதற்காகத் தான் யாம் (ஞானகுரு) எதை எடுத்தோம்...? எப்படிச் செய்தோம்...? எதனுடைய உணர்வுகள்...? என்று காட்டியது.

நீங்கள் பிறருக்கு எவ்வழியில் சொல்ல வேண்டும்...?

எமது உபதேசங்களைக் கேட்ட நீங்கள் ஒவ்வொரு கால நேரத்தையும் யாம் உபதேசித்த வழியில் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு கம்ப்யூட்டரில் எலெக்ட்ரானிக் என்ற அழுத்தத்தின் தன்மை கொண்டு வரப்படும் பொழுது... கால நேரம் வரும் பொழுது அந்த அழுத்தத்தின் உணர்வுகள் தீமையை தள்ளி விட்டுச் செயல்படுகின்றது.

இதைப் போன்றுதான்

1.உங்கள் அழுத்தத்தின் உணர்வுகள் ஏற்புடையதாக வரும் பொழுது இதனுடைய அழுத்தம் தீமையை நீக்குகின்றது.

2.அதாவது நல்லவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தீமையை நீக்குகின்றது.

யாம் உபதேசித்துக் கொண்டிருக்கும் பொழுது... சீக்கிரம் போக வேண்டும் என்ற உணர்வு வரப்படும் பொழுது அந்தக் காலம் வரும்போது யாம் உபதேசிப்பதைத் தள்ளி விடுகின்றது. அதன் வழி உங்களை இயக்குகின்றது.

ஆகவே தியானம் மற்றும் உபதேசத்தை நீங்கள் கேட்கக்கூடிய நேரங்களில்

1.கால மணியை, அந்த அழுத்தத்தைப் பதிவு செய்து கொண்டு

2.அதனை நமக்குள் ஏற்புடையதாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற உணர்வைப் பதிவாக்கிக் கொண்டு உட்கார்ந்தால்,

3.நினைவு வேறு எங்கும் போகாது,.. இந்த உணர்வின் (அருள் ஞான உணர்வின்) அழுத்தமாகும்.

சீர்புடையதும் சீர்பற்றதும் போன்ற உணர்வுகளைத் தனக்குள் மாற்றி ஒவ்வொன்றையும் யாம் சொல்லும் பொழுது தனக்குள் பக்குவப்படும் நிலைகள் வரும்.

அந்தப் பக்குவ நிலை ஏற்படுத்துவதே குருவின் தன்மை. எமது அருளாசிகள்.




# கார்த்திகை மாதத்தின் சிறப்பு

ஞானிகள் காண்பித்த கார்த்திகைத் தீபத் திருநாளில் நாம் நமது வீட்டு வாசல்படியில் தீபங்களை வைக்கின்றோம். வீட்டிற்குள் இருந்தாலும் புற நிலைகளில் தீபங்களை வைக்கும் பொழுது அங்கே இருள் விலகிப் "பொருள் தெரிகின்றது..."

1.வாழ்க்கையில் நாம் எப்பொழுதுமே பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும் என்ற உண்மையை உணர்த்துவதற்குத்தான்

2.“கார்த்திகை தீபங்களை” வீட்டு வாசல்படியில் ஏற்றச் செய்தனர், ஞானிகள்.

கார்த்திகைத் தீபம் என்கிறோம். ஏனென்றால் நமது பிரபஞ்சத்தில் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து வெளிப்படக்கூடிய உணர்வுகள் அது எந்தப் பொருளில் எல்லாம் கலக்கின்றதோ அந்தப் பொருளின் தன்மையைப் “பிரகாசிக்கச் செய்யும்” தன்மை கொண்டது.

உதாரணமாக கசப்பான பொருள் ஒன்று இருக்கிறதென்றால் கசப்பின் தன்மையை “உணர்ச்சியின் மூலம் வெளிப்படுத்தும் அறிவாக” அங்கு இருக்கும்.

ஆகவே கார்த்திகை நட்சத்திரம், நமது பிரபஞ்சத்திற்கு ஒரு முக்கியமான நட்சத்திரம்.

நாம் வெளிச்சத்தை வைத்துப் பொருளைக் காண்பதைப் போன்று

1.கார்த்திகை நட்சத்திரத்தின் உணர்வுகள் அதிகமாக எந்தெந்தக் குணங்களில் கலந்துள்ளதோ

2.அந்தக் குணத்தின் சிறப்பு மிக்க நிலையை வெளிப்படுத்தும்,

3.அறியச் செய்யும் ஆற்றல் மிக்கவராக அந்த எண்ணங்களைப் பிரதிபலிக்கச் செய்யும்.

கார்த்திகை மாதத்தில் நமது வீட்டு வாசல்படிகளில் விளக்குகளை ஏற்றி வைக்கிறோமென்றால்... அறிவின் ஒளியின் சுடராக நாம் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும் என்பதை நமக்கு நினைவுபடுத்துவதற்காக ஞானிகளால் உருவாக்கப்பட்ட நிலைதான் அது.

அவசரப்பட்டு ஒரு தொழில் செய்ய வேண்டும் பொருள் சேர்க்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அந்த ஆசை நமக்குள் வளர்ந்து விட்டால் “அதையே முழுமூச்சாகச் செயல்படுத்தத் தொடங்குகின்றோம்...”

ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில்...

1.நாம் அறிவின் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் ஆற்றலை இழந்து விடுகின்றோம்.

2.ஏனெனில், அவசரம் எனும் உணர்வால் நாம் சீராகச் சிந்திக்காது எடுத்த முடிவால் விளைந்த நிலையிது.

உதாரணமாக நாம் ஒருவரைச் சந்தித்து வியாபாரத்தைப் பற்றிப் பேசப் போகிறோம் அல்லது அவர் மூலம் வியாபாரம் சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்று செல்லும் பொழுது "அவருடைய சூழ்நிலை எவ்வாறு...?" என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவரிடம் பேசும் பொழுது அவருடைய முகத்தை உற்றுப் பார்த்தால், அவருடைய நிலை தெரியும். அப்பொழுது நமக்குள் இருக்கும் அறிவு என்பது அவரின் உணர்வின் தன்மைகளை நமக்குள் தெளிவாக்கும்.

தீபத்தைப் பொருத்தியபின் அதனின் வெளிச்சத்தில் நாம் எப்படிப் பொருள்களைக் காண்கின்றோமோ அதைப் போன்று

1.நாம் சிந்திக்கும் அறிவினைப் பயன்படுத்தி சிறிது நேரம் சிந்தித்து அவருடைய செயலாக்கங்களை அறிந்து கொண்டபின்

2.நாம் சொற்களைச் சொல்ல வேண்டும்... அப்பொழுது, அது நமக்கு துணையாக இருக்கும்.

ஆனால் நாம் நம்முடைய காரியத்திற்காக அவரைப் பார்க்கப் போய் அவருடைய சூழ்நிலை தெரியாது அவசரத்தில் அவரிடம் போய்ப் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தால்... அவர் தன் சலிப்பால் சஞ்சலத்தால் நமக்குச் சீரான பதிலைக் கொடுக்க மாட்டார்.

நாம் விரும்பிப் போய் சந்திக்கும் பொழுது அவர் சரியான பதிலைக் கொடுக்கவில்லை என்றால் அவரைக் குற்றவாளியாகக் கருதுவோம்.

1.அவர் கர்வம் உள்ளவராக இருக்கிறார்

2.நாம் கேட்டால் பதில் சொல்லமாட்டேன் என்கிறார் என்ற உணர்வுகள் வந்து

3.நம்முடைய அவசரத்திற்கு அவரைக் குற்றவாளியாக்கும் நினைவினை ஊட்டுகின்றது.

இதற்கு மாறாக அவர் சந்தோஷமாக இருக்கும் பொழுது அவரைச் சந்தித்தோம் என்றால் அவர் நம்மை வரவேற்று அதற்குண்டான சொல்களைச் சொல்லுவார்.

எப்படி நாம் தீபத்தை ஏற்றி அதனின் வெளிச்சத்தைக் கொண்டு மற்ற பொருள்களைத் தெரிந்து கொள்கின்றோமோ அதைப் போன்றுதான்

1.கார்த்திகை நட்சத்திரத்தின் ஒளியலைகள் ஒன்றோடொன்று மோதும் பொழுது

2.அதன் அறிவின் தன்மை அறிவிக்கும் சக்தி பெற்றது.

ஆகவே நாம் ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்று எண்ணினால் சூழ்நிலைகளுக்கொப்பச் சொற்களைச் சொல்ல வேண்டும். அது நமக்கு நல்ல பலனைக் கொடுக்கும்.

நாம் எப்படியும் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடித்து விடவேண்டும் என்ற அவசர உணர்வுடன் ஒருவரிடம் தொடர்பு கொள்ளப்படும் பொழுது அவருடைய சூழ்நிலைக்கொப்பதான் நமக்கு பதில் வரும். நமது காரியமும் சித்தியாகாது.

அதே சமயம் நாம் அவரைச் சந்தித்ததால் அவர் மேல் வெறுப்படையும் தன்மையும், அதற்குண்டான சூழ்நிலையும் உருவாகும். அவரைக் குறை கூறும் உணர்வுக்கே நமது உணர்வு வலு பெறும்.

1.குறையான உணர்வுகளை நாம் நம்முள் பதிவாக்கி விட்டால்
2.அதன்பின் அவரைச் சந்திக்கும் பொழுது சூழ்நிலை சமமாக இருந்தாலும்
3.அவரை உற்றுப் பார்த்தாலே பழைய நினைவுகள் தோன்றி வெறுப்பின் உணர்வைத் தோற்றுவிக்கும்.
4.அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய சொல் அவரிடம் சீராகப் பேசும் தன்மையை இழந்து விடுகின்றது.

ஒருவர் மேல் உங்களுக்கு வெறுப்போ அல்லது பயமோ ஏற்பட்டு விட்டால் நீங்கள் அவரிடம் ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் கூட உங்களிடத்தில் ஒருவிதமான பதட்ட நிலைகள் ஏற்படும்.

இதைப் போன்று நமது வாழ்க்கையில் நம்மையறியாமலே சில சந்தர்ப்பங்கள் நமது நல்ல குணங்களைப் பாழ்படுத்தும்.

ஆகவே தீபத்தின் வெளிச்சத்தில் நாம் எப்படிப் பொருள்களைக் காண்கின்றோமோ இதைப் போன்று
1.நாம் எந்த ஒரு காரியத்திற்குச் சென்றாலும் முதலில் நமக்குள் "அறிவின் ஒளியைப்" பொருத்திக் கொள்ள வேண்டும்.
2.அந்தச் சுடரின் உணர்வின் அலைகளைப் பரப்ப வேண்டும்.

அவ்வாறு நாம் பரப்பினோம் என்றால் நாம் செல்லக்கூடிய காரியமும் பயன் பெறும். நம்முடைய சொற்களும் கேட்போரின் உணர்வுகளில் தெளிவை ஏற்படுத்தும்.

இவைகளெல்லாம் நாம் அறிந்து கொள்வதற்கு தான் “கார்த்திகை தீபத்தை” ஏற்றி வைப்பது.

நமது உணர்வுகள் எப்படி மாறுபடுகிறதென்றால்… நாம் ஒருவரைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வரப்படும் பொழுது நம்முடைய உணர்வுக்குத் தக்க அவருடைய செயலாக்கங்கள் இல்லையென்றால் “அவரைக் குறை கூறும் தன்மைக்கு…” வந்துவிடுகின்றோம்.

நாம் ஒருவருடன் பிரியமாக பேசிக் கொண்டிருப்போம். இருந்தாலும், நமக்குள் நம் உணர்வின் துணை கொண்டே அவரிடம் பேசப்படும் பொழுது அவருக்குள் பதில் இருக்கலாம். ஆனால் நாம் நம் மனதிற்குள் “ஒரு குற்றவாளி…” என்ற உணர்வைக் கலந்தே நாம் சுவாசிப்போம்.

1.ஆனால் இந்த எண்ணத்தை அவரிடம் வெளிப்படையாக தெரிவிக்காத நிலைகள் இருப்பினும்

2.இந்த உணர்வுகளை நமது முகமும் கண்களும் காட்டிக் கொடுத்துவிடும்.

ஒருவரை நாம் சந்திக்கும் பொழுது இத்தகைய உணர்வுகள் இரண்டையும் சுவாசிக்கும் பொழுது அந்த உணர்வுகள் கண்களின் ஒளி அலைகளாக… “பார்க்கும் பார்வையும் அந்தப் பார்வைக்கொப்ப உணர்வும் இணைந்து சொற்களாக வெளிவரும்…”

ஆகவே நம்மையறியாமலேயே நம்முடைய நினைவாற்றலை வெளிப்படுத்தும். அவர் அன்புடன் பேசினாலும் அதை நாம் நமக்குள் நம்முடைய எண்ணங்களுக்கொப்ப மாற்றி நாம் அவரைக் குறை கூற வேண்டிவரும்.

1.இதைப் போன்று குறை கூறும் உணர்வுகளை வெளிப்படுத்தும் முகத்தையும் சொல்லையும் பார்த்தபின்

2.அவரிடத்திலும் குறையான உணர்வுகள் ஏற்பட்டு அவர் சொல்லும் சீராக இல்லாமல் தடுமாற்றமான நிலைகளில் பதில் வரும்.

இது தான், கீதையில் “நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்…!” என்ற நிலைகளில் உணர்த்தப்படுகின்றது.

நாம் என்னும் உணர்வுகள் நமது கண் வழி பாய்வதும் உடலிலிருந்து வெளிப்படும் மணமும் இவை இரண்டும் கலந்து, நாம் சொல்லும் உணர்வின் தொனிகளும் ஒலிகளும் "வித்தியாசமான நிலைகளில் வெளி வரும்..."

இதுவெல்லாம் நம் அன்றாட வாழ்க்கையில் நடக்கக்கூடிய சம்பவங்கள்.

எனவே நமக்குள் வரும் தீமைகளில் இருந்து விடுபடும் நிலையாக வெளிச்சத்தில் பொருள் எப்படித் தெரிகின்றதோ அதைப் போன்று, நமது வாழ்க்கையில் தெரிந்து தெளிந்து தெளிவான வாழ்க்கை வாழ்ந்திடுவோம்.

நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் ஆறாவது அறிவைச் சீராக்கும் நிலையாக...

1.ஒளியின் சுடராக இருக்கும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் அனைவரும் நமக்குள் பெருக்கி

2.நம் உணர்வுகள் அனைத்தையும் ஒளியாக மாற்றுவோம்.

மகரிஷிகள் உபதேசித்து உணர்த்திய அருள் நெறிகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். மகரிஷிகளின் அருள் சக்தியை, நாம் நமக்குள் ஒளியின் சுடராக ஏற்றி, மகிழ்ந்து வாழ்வோம்.

1.பொருளறிந்து செயல்படுவோம்

2.சிந்தித்துச் செயல்படுவோம்

3.பேரருளைப் பெறுவோம் பேரொளியாக மாற்றுவோம்.

4.நாம் அனைவரும், மகரிஷிகள் சென்ற பாதையில் செல்வோம்.

5.இந்த உலகை "மகரிஷிகளின் உலகமாக" மாற்றுவோம்.




## கண்ணன் காட்டும் "திருட்டு வழி…"

இன்று மனிதனாக இருக்கும் நாம் நல்ல செழுமையாக இருந்தாலும்… நாம் பிறருடைய துயரைத் துடைக்கக் கேட்டுணர்ந்த துயரமான உணர்வுகள் நமக்குள் வந்தபின் அந்த உணர்வுகள் நல்ல குணங்களுக்குள் இரண்டறக் கலந்து ஓங்கி வளர்ந்து விடுகிறது.

அடுத்து… மகிழ்ச்சியாக வைத்திருந்த இந்த உடலின் சாரத்தை அது செயல்படாது தடுத்து உடல் நலிந்து உணர்வுகள் குறைந்து எண்ணங்கள் நலிந்து நம் வாழ்க்கையில் எதனையுமே வலுவான நிலையில் செய்ய முடியாத நிலைகளுக்குக் கொண்டு செல்கின்றது.

இதிலிருந்து நம்மைக் காத்திட… இத்தகைய நஞ்சிலிருந்து நாம் மீள்வதற்கு நமது குரு காட்டிய அருள் வழியில் ஆத்ம சுத்தி செய்ய வேண்டும்.

1.அந்த ஆற்றலைப் பெறச் செய்வதற்குத்தான்

2.அருள் ஞானிகள் கண்டுணர்ந்த உணர்வின் சாரத்தை உங்களைக், காத்திடும் எண்ண உணர்வுகளுக்குள் இணைத்து

3.அதை வலுப்பெறச் செய்யும் நிலையாக இதை உபதேசிக்கின்றேன்.

வியாசர் காட்டிய அருள் வழியில் கண்கள் கொண்டு அதை நாம் நினைவு கூர்ந்து எண்ணும்போது

1.அந்த வலுவின் தன்மை நீங்கள் பெற முடியும்

2.அருள் ஞானிகளின் உணர்வுகளைப் பெற முடியும்

3.உங்களை அறியாது வந்த தீமையை ஒடுக்க முடியும்

4.அருள் ஞானிகளின் உணர்வுகளை உங்களுக்குள் வளர்க்க முடியும்.

மற்றவர்களுடைய துயரைக் கேட்டறிந்த நிலைகள் உங்கள் நல்ல குணங்களை நலியச் செய்தது போன்று… மகரிஷிகளின் அருள் சக்தி உங்களுக்குள் புகுந்து அந்த நலிந்ததை மீட்டு நல்லுணர்வாக வளர்த்து,க் கொள்ள முடியும்.

உயிருடன் ஒன்றிடும் உணர்வனைத்தையும் ஒளியாக மாற்றிய, அருள் ஞானிகளின் உணர்வுகள் உங்களுக்குள் கலந்து “நீங்களும் உணர்வை ஒளியாக மாற்றும் திறன் பெற வேண்டும்…” என்ற ஆசையில் அந்த மாமகரிஷி காட்டிய, உணர்வின் சாரத்தை உங்களுக்குள்ளும் தெளிவு பெறச் செய்யும் நிலைக்கே இதை உணர்த்துகின்றேன்.

கண்ணன் (நமது கண்கள்) காட்டிய நிலைகள் கொண்டு “அதோ வருகின்றான் நாரதன்…” என்று நாம் எண்ணும்போது புற நிலைகள் கொண்டு நமது ஆன்மாவைச் சுத்தப்படுத்துகின்றோம்.

அதாவது… கண்ணின் நினைவலைகளை விண்ணை நோக்கிச் செலுத்தி

1.உங்களுக்கு உபதேசித்த உணர்வுகளின் வலுவின் துணை கொண்டு

2.அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று கண்ணின் நினைவை உயிரோடு ஒன்றப்படும்போது,

3."உயிரான கண் "அகக்கண்..." நம்முடைய கண் "புறக்கண்..."

4.புறக்கண்ணால் அகக் கண்ணின் (உயிரின்) நினைவு கொண்டு

5.அந்த ஆற்றல் மிக்க சக்தியை நாங்கள் பெற வேண்டும் என்று நாம் ஏங்கும் பொழுது

6."சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்தால்... சுட்டுப் பொசுக்கி விடுவான்...!" என்பதாகும்.

நம் உடலான சிவத்திற்குள் உயிர் அகக்கண்ணாக இயக்கும் நிலையில் புறக்கண்ணின் நினைவு கொண்டு நினைவினை உயிருடன் ஒன்றி "அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்..." என்று ஏங்கி அது எங்கள் உடல் முழுவதும் படர்ந்து எங்கள் உடலிலுள்ள ஜீவ அணுக்கள் ஜீவாத்மாக்கள் பெற வேண்டும் என்று...

1.உள் நினைவில் கண்களை மூடி

2."நம் உடலுக்குள் இருக்கும் அனைத்து அணுக்களிலும் படரச் செய்வதே "கண்ணன் காட்டிய திருட்டு வழி...!"

கண்ணன் காட்டிய நிலைகள் கொண்டு மகரிஷிகளின் உணர்வுகளை உள் செலுத்தும்போது அந்த ஞானிகளின் உணர்வுகள் "பிராணாயாமம்..." அதாவது அந்த ஞானிகளின் உணர்வுகளை நமக்குள் ஜீவன் பெறச் செய்து வளர்க்கச் செய்கிறோம்.

நாம் ஒரு பொருளைப் பாத்திரத்தில் போட்டு வேக வைக்கும் பொழுது அதனின் சத்து கொதித்து அதனின் மணம் வெளி வருவதைப் போன்று

1.அந்த மணத்தின் வீரியத் தன்மை (ஞானிகளின் அருள் சக்தி) உள் நின்று வெளி வருவது

2.நாம் வேதனைப்பட்ட உணர்வின் தன்மையை அது பிளக்கின்றது.

நாம் பிறருடைய துயரமான உணர்வுகளை எண்ணி நம் உடலுக்குள் சேர்க்கும் முன் அது நம் ஆன்மாவாக (உடலைச் சுற்றி) மணமாக மாறுகின்றது.

அது மடி மேல் ஆன்மாவாக இருந்தாலும்... கண்ணின் நினைவை உயிருடன் ஒன்றி அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் அது எங்கள் உடல் முழுவதும் படர்ந்து, எங்கள் உடலில் உள்ள

ஜீவ அணுக்கள் ஜீவாத்மாக்கள் பெற வேண்டும் என்று... கண்ணான கண்ணின் நினைவுகளை உள் செலுத்தப்படும் போது "நாம் எண்ணிய உணர்வுகள் "பிராணாயாமம்..."

1.அது ஜீவன் பெற்று அந்த மணத்தின் வீரியத் தன்மை உள் நின்று வெளி வருவது...

2.மடி மீது (நெஞ்சுக்கு முன் இருக்கும்) சுழன்று கொண்டுள்ள துயரப்பட்ட உணர்வினை இது பிளக்கின்றது.

நாராயணன் என்பது சூரியன். நரநாராயணன் என்பது உயிர். நமக்குள் பேரண்டத்தின் பெரு நிலைகள் இருந்தாலும் உணர்வின் எண்ணங்களாக இயக்கி நம்மை ஆண்டு கொண்டிருப்பது நரநாராயணன்.

நமக்குள் இருக்கும் சர்வத்தையும் விண்ணில் பிறந்த நிலையும் ஜீவ அணுக்களாக உருவாக்கி நம்மை உருப்பெறச் செய்து அதனின் உணர்வின் நிலையாக நம்மை இயக்கிக் கொண்டிருப்பதும் நரநாராயணான உயிர்,

ஆகையினால் தான் உயிரான அவன் வாசல்படி மீது அமர்ந்து மடி மீது அமர்த்தி இரண்யனைப் பிளந்தான் என்று எடுத்துரைக்கப்பட்டது.

கண்ணன் காட்டிய நிலைகள் கொண்டு அந்த அருள் மகரிஷிகளின் நிலைகளை நாம் எண்ணும் போது,

1.உயிரான நிலைகள் "ஓ..." என்று பிரணவமாகி

2.அந்த உணர்வின் சக்தி பிரம்மாவாக உடலுக்குள் அனைத்தையும் இணைத்துச் சிருஷ்டித்து அதனின் ஜீவனாக ஓங்கி வளர்ந்து

3.விண்ணின் வீரிய சத்தாக உள் நின்று வெளிப்படுவது நம் ஆன்மாவிலிருக்கும் தீமையைப் பிளக்கின்றது.

அந்த மகா ஞானிகளின் உணர்வை நாம் "நேர்முகமாகச் சுவாசித்து..." உடலுக்குள் செலுத்தி... நமக்குள் அதை ஓங்கி வளர்த்து வரும் தீமைகளைப் பிளப்பது தான் "நரசிம்ம அவதாரம்..." என்பது.




# “நம் இரத்த நாளங்களில்…” அருள் உணர்வைப் பெருக்க வேண்டியதன் அவசியம்

உதாரணமாக நாம் ஒரு முறை “திடுக்…” என்று பயந்து விட்டால் அதனின் உணர்வின் கரு நம்முள் உருவாகிவிடும். மீண்டும் நினைவு

கொண்டால் அது உணர்வின் அணுவாக நமது இரத்த நாளங்களில் விளைந்து நமது உடல் முழுவதும் சுழலத் தொடங்கும்.

அப்படிச் சுழலப்படும் பொழுது
1.உடலில் அந்த அணுக்கள் இணைந்து குஞ்சாகப் பெருகி விட்டால்
2.நம்மையறியாமலேயே "திடுக்...திடுக்..." என அஞ்சும் உணர்வு வரும்.

இதை நீங்கள் அறிய முடியும்.

இவைகளெல்லாம் யாம் உங்களுக்கு நினைவு படுத்துவதற்குக் காரணம் உடலுக்குள் நடக்கும் நிகழ்ச்சிகளை நீங்கள் அறிந்து கொள்வதற்குத் தான்.

நமது வாழ்க்கையில் இத்தகைய அஞ்சும் உணர்வோ வெறுக்கும் உணர்வோ தொழில் நஷ்டமோ இவைகளை எண்ணி நுகரும் பொழுது நாம் நுகர்ந்தது அனைத்தும் நம் உடலில் இரத்த நாளங்களில் "கருவாக..." உருவாகிவிடுகின்றது.

உதாரணமாக... தொழிலில் "நஷ்டமாகி விட்டது... நஷ்டமாகி விட்டது..." என்று திரும்பத் திரும்ப எண்ணினால் அது அடைகாத்தது போன்று ஆகிவிடுகின்றது.

அது உடலில் குஞ்சாக விளைந்து விட்டபின் அவர்களிடம் போய்
1.நீங்கள் நல்லதை எதைச் சொன்னாலும், "எனக்கு நஷ்டம் நஷ்டம்..." என்று தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.
2."நஷ்டத்திலிருந்து மீள வேண்டும்..." என்ற எண்ணங்களே இவர்களுக்கு வராது
3.ஏனென்றால் எடுத்துக் கொண்ட உணர்வுகள் தான் அப்படிப் பேச வைக்கின்றது.

கடல் வாழ் மீன்கள் எங்காவது ஒரு துளி இரத்தத்தினுடைய மணத்தை நுகர்ந்து விட்டால் போதும், விரைந்து அந்த இடத்திற்கு வந்துவிடும்.

தொலைவில் இருக்கக்கூடிய மீன்களை அருகே வரச் செய்து அவைகளைப் பிடிக்க விரும்பினால் தூண்டிலில் இரையை வைத்துச் சிறிது ஒலி எழுப்பினால் அந்த மீன்கள் தூண்டில் இருக்கும் பக்கம் வந்துவிடும்.

இதைப் போன்று நமது உடலிலுள்ள உணர்வின் அணுக்கள் உணர்ச்சிகளை எதன் வழி தூண்டுகிறதென்றால் நமது இரத்த நாளங்களின் வழி தான்.

இராமயாணக் காவியத்தில் "இராமன் குகனை நண்பனாக ஆக்கிக் கொண்டான்..." என்று உரைத்திருப்பார்கள். அதில் குகன் ஆற்றில் படகை ஓட்டி, வாழ்க்கை நடத்தி வருபவன் என்றும் உரைத்திருப்பபார்கள்.

1.நமது உடலில் உள்ள இரத்த நாளங்களை ஆறாகவும்
2.நம் எண்ணங்களால் உருவாக்கிய, உணர்வுகள் எதுவோ அவைகள்
3.நமது இரத்த நாளங்களில் சுழன்று வருவதை உணர்த்துவதற்குக் குகனைக் காட்டுகின்றார்கள்.

நமது இரத்த நாளங்களில் நட்புள்ள உணர்வுகளாகச் சேர்த்து விட்டால் "நமக்குள் வெறுப்பை உண்டாக்கும்.. நோய்களை உண்டாக்கும் உணர்வுகளை நாம் ஒவ்வொன்றாகச் சமப்படுத்திவிடலாம்..." என்பதை உணர்த்துவதற்கு இவ்வாறு காவியங்களைப் படைத்தார்கள்.

இப்பொழுது நாம் எண்ணும் எண்ணங்களில் பகைமை உணர்வைக் கலந்து விட்டால்... அது நமது உடலில் நல்ல அணுக்களை உருவாக்கியவைகளுக்குப் பகையாகி... அவைகளுக்கு நல்ல உணர்வுகள் கிடைக்காவிடாமல் தடைப்படுத்துகின்றது.

1.தீய உணர்வின் அணுக்கள் நல்லுணர்வின் அணுக்களை விழுங்க எண்ணும்.
2.ஏனென்றால் அவைகளுக்கு வரும் நல்லுணர்வுகளைத் தடைப்படுத்தும் பொழுது நல்ல அணுக்கள் மடியும்.

இதனை உணர்த்துவதற்குத்தான் முதலில் குகன் என்ற நிலையை உருவாக்கி அதில் இராமன் குகனை நட்பாக்கினான் என்று காட்டுகிறார்கள்.

அதாவது நமக்குள் இருக்கும் இரத்த நாளங்களில்
1.அருள் மகரிஷிகளின் உணர்வைக் கருவாக்கி அணுக்களாக விளையச் செய்தால்
2.அது உடலில் பதிந்திருக்கும் பகைமை உணர்வுகளை நீக்கி
3.மகரிஷிகளின் அருள் வட்டத்திற்கு நம்மை அழைத்து செல்லும்.

3.என்றும் அழியா ஒளிச் சரீரமாக வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் சப்தரிஷி மண்டலத்துடன் நாம் இணைய முடியும்.




# வீட்டைச் சொர்க்கமாக்கும் வழி

மிருகங்களில் ஆண் பெண் என்ற நிலை இருக்கப்படும் பொழுது ஆணுக்கு ஆணே போர் செய்கின்றன… பெண் மிருகங்களைப் போரில் இணைப்பதில்லை.

மிருகங்களில் ஆணுக்கு ஆண் தான் மோதுகின்றதே தவிர பெண்பாலை அரவணைத்தே செல்கின்றது. ஆனால் மனிதர்களாக இருக்கும் நாம் பெண்களைத் துன்புறுத்தும் நிலையே இருக்கின்றது.

1.பெண்களைத் துன்புறுத்தும் நிலையில் வேதனை என்ற உணர்வுகள் கலந்தால்

2.ஆண் பெண் என்று இருவருடைய உணர்வுகளிலும் “வேதனை என்ற விஷத்தின் தன்மை கலக்கின்றது…” என்பதை உணர்வதில்லை.

காரணம் பெண்பாலில் உருவாகும் வேதனை என்ற விஷத்தின் தன்மையினை ஆண்பால் நுகர நேர்ந்தால் வெறுப்பாகவோ வேதனையாகவோ இருந்து அதனின் விஷத்தன்மை அதிகரித்து அங்கே படர்கின்றது.

பெண்பால் வேதனை என்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் பொழுது கேட்போர் மற்றும் வேடிக்கை பார்ப்போரின் உணர்வுகளிலும் கூட அது பதிவாகின்றது.

ஆகவே பெண்களைத் துன்புறுத்தும் நிலையினை விடுத்துப் பழக வேண்டும்.

ஏனென்றால் பெண்பால் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கின்றதோ

1.அந்த உணர்வினை வெளிப்படுத்தும் பொழுது வேதனையின் உணர்வுகள் புவியின் காற்றில் பரவுகின்றது.

2.பெண்களைத் துன்புறுத்தும் உணர்வுகள் அதிகரித்தால் ஆண்களும் நரக வேதனை என்ற நிலைகளை அனுபவிக்க நேரும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் திருமணமானபின் எத்தனையோ துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவர்கள் விடும் மூச்சலைகளெல்லாம் காற்று மண்டலத்தில் படர்கின்றன.

சோகமும், வேதனையும் கொண்ட இத்தகைய உணர்வுகள் காற்றில் படரும் பொழுது நம் பூமியின் நிலைகளில் “மாற்றங்களே ஏற்படும்…” இங்கு மட்டுமல்ல… உலகெங்கிலுமே பெண் இனத்தைத் துன்புறுத்தும் நிலை இருக்கின்றது.

மற்ற உயிரினங்களில் பெண்பாலை அரவணைத்துச் செல்லும் தன்மை இருக்கின்றது. அதனில் அன்பு கலந்த சந்தோஷமும் பெறுகின்றன.

மனிதனானபின் பெண்களைத் துன்புறுத்தும் நிலை அதிகரிக்கும் பொழுது இதனின் உணர்வுகள் நமது உடலில் மட்டுமல்ல வேடிக்கை பார்ப்போரின் உடல்களிலும் கூட வேதனையும் சோகமும் உருவாக்கப்படுகின்றது.

ஆகையால் இணைத்துக் கொண்ட உணர்வின் தன்மைக்கேற்ப இப்படி மாற்றங்கள் ஏற்படுவது மட்டுமல்லாதபடி புவியின் காற்று மண்டலத்திலும் கலந்திருக்கும் நிலையில் "இதனைச் சாப அலைகள் என்று சொல்வார்கள்..."

துன்புறுத்தும் உணர்வுகளும் சரி வேடிக்கை பார்க்கும் உணர்வுகளும் சரி இன்று மனிதருக்குள் தீய உணர்வின் தன்மை அதிகரிக்கும் நிலைகளில் மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் கொன்று குவிக்கும் நிலையே வருகின்றது.

இவைகள் அனைத்தையும் நாம் சிந்தித்து

1.பெண்பால் என்ற உணர்வினை அரவணைத்து அன்பு கலந்த உணர்வினைச் சேர்த்து

2.துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நமக்குள் பெருக்கி இருளை அகற்றி

3.நம்மையும் நம் நாட்டு மக்களையும் இனிப் பிறவியில்லா நிலை என்ற நிலையை அடையச் செய்வோம்.

ஆண் பெண் என்ற நிலைகளில் பெண்களும் ஆண்களை மதித்து அவர் உயர்ந்த நிலை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கங்களைக் கொண்டால் ஆண்கள் உயரந்த நிலைகள் பெறுகின்றனர், தொழில் வளம் பெறுகின்றனர்... குடும்பத்தில் மகிழ்ச்சி என்ற நிலை உருவாகின்றது.

மகரிஷிகள் என்பவர்கள் தாங்கள் காட்டிற்குள் வசித்தாலும் கணவனும் மனைவியுமாக ஒன்று சேர்ந்து வாழ்ந்து உணர்வின் சக்தியினை வளர்த்தனர். அதன் தொடர் கொண்டே நமக்கு காவியத் தொகுப்புகள் கிடைத்தன.

ஆனால் பிற்காலத்தவர்களோ இந்தக் காவியத் தொகுப்புகளை அவரவர் நலன்களுக்கேற்ப மாற்றியமைத்து உண்மைகளை மறைத்து விட்டனர்.

இதன் நிலையாக இன்று மனித இனமே அழிந்து போகும் நிலைக்குப் பிரபஞ்சம் முழுவதும் விஷத் தன்மை கொண்டதாக மாறிவிட்டது.

தான் சுகமாக வாழ வேண்டும் என்ற உணர்வின் அறிவுகள் வளர்ந்து விட்ட்து. தீமைகளை அடக்கி உணர்வுகளை ஒளியாக மாற்றும் திறன் பெற்ற இந்த மனிதச் சரீரத்தில் நாட்டாசையும் உடலாசையும் பொன்னாசையும் பெண்ணாசையும் கொண்ட உணர்வின் தன்மையை வளர்த்து மனித குலத்தைச் சீர்குலைத்து அழிக்கச் செய்யும் நிலைகளையே வளர்த்துள்ளனர்.

மனித குலத்தையே கூண்டோடு அழிக்கச் செய்யும் மிருக உணர்வுகள் புவியில் துரித நிலைகளில் இயங்கிக் கொண்டுள்ளது.

இந்தச் சந்ததிக்குப்பின் பெரும் புயல்களைப் போன்று… சூறாவளிகளைப் போன்று… பெரும் நில நடுக்கங்களைப் போன்று உருவாகி பெரும் பெரும் கட்டிடங்களே நொறுங்குவது போன்று… மனித உணர்வின் தன்மை சீர்குலைந்து… மனிதனுக்கு மனிதன் நொறுங்கி மடியும் தன்மையும் மனித இனமே கூண்டோடு அழியும் தன்மையும் வந்து கொண்டே இருக்கின்றது.

இது போன்ற தீமைகளிலிருந்து நாம் அனைவரும் மீள வேண்டும். நமது குருநாதர் காட்டிய அருள் வழியில்

1.ஒவ்வொரு குடும்பத்திலும் கணவனும் மனைவியும் துருவ நட்சத்திரத்தின் அருள் உணர்வுகளைக் கவர்ந்து

2.உயர்ந்த நிலைகளைத் தங்களுக்குள் உருவாக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

3.ஒவ்வொரு நிமிடமும் பெண்கள் உயர்ந்த நிலை பெற வேண்டும் என்று எண்ணி

4.நாமும் உயர்ந்த நிலை பெற வேண்டும் என்று எண்ணினால் நமக்குள் உயர்வு தரும்.

ஏனென்றால் குறுகிய காலமே நமக்கு இருக்கின்றது. இராமாயணத்தில் இராமன் நேரமாகிவிட்டது என்று இராமேஸ்வரத்தில், இதுவே கடைசி நிலை என்று மணலைக் குவித்துச் சிவலிங்கம் அமைத்து பூஜித்தார் என்று காண்பிக்கப்பட்டது.

ஏனென்றால் இராமன் என்ற எண்ணங்கள் இந்த மனித உடலில் கடைசி நிலையில் இருக்கின்றது.

ஆகவே “நாம் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும்” என்ற உணர்வை நமக்குள் கலந்து விட்டால் கடைசி என்ற நிலைகள் வரும்… “தனுசுகோடி…”

நம்முடைய கடைசி எண்ணத்தின் நிலைகளாக…

1.துருவ நட்சத்திரத்தின் உணர்வைத் தனுசாக நமக்குள் உட்செலுத்தித் தீமைகளை அகற்றி

2.உணர்வை ஒளி என்ற நிலைகளில் மாற்றி… இனி பிறவி இல்லை என்ற நிலைக்கு நாம் அனைவரும் செல்ல வேண்டும்.

ஆனாலும்

1.திருமணம் முடிந்து வந்தவுடன் இல்லற வாழ்க்கை தொடங்கும் காலத்தில் இல்லத்தில் பல இன்னல்கள் வந்து சேர்கின்றன.

2.இதனால் கணவன் மனைவிக்குள் வேறுபட்ட உணர்வுகள் தோன்றுகின்றன.

இப்படி வேறுபட்ட உணர்வுகள் வரும் பொழுது பெரும்பாலான பெண்கள் அனுபவிக்கும் அவஸ்தைகளாலும் வேதனைகளாலும் வெளிப்படும் உணர்வுகள் எல்லோரையும்தான் சாரும்.

ஏனென்றால் பெண்கள் வெளிப்படுத்தும் வேதனையின் உணர்வுகளைச் சூரியனின் காந்தப் புலனறிவுகள் கவர்ந்து வைத்துக் கொள்கின்றன.

நாம் இவ்வேதனையின் உணர்வுகளைக் கேட்டறிய நேரும் பொழுது அது நமக்குள் பதிவாகின்றது. பதிவின் நிலை கொண்டு நாம் நுகர்கின்றோம்.

நம்மை அறியாமலே அவர்களுடைய வேதனைகளை நுகர்ந்து "நமக்குள்ளும் வேதனையான உணர்வுகளாகவே மாற்றி விடுகின்றோம்..." அதனின் உணர்ச்சியும் நம்முள் அதிகரித்து விடுகின்றது.

கணவனும் மனைவியும் வெறுப்பு என்ற நிலைகளோ வேதனை என்ற உணர்வுகளோ இல்லாதபடி

1.அதிகாலையில் துருவ தியானத்தில் அமர்ந்து "துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும்

2.என் கணவர் / மனைவி பெற வேண்டும்... எங்கள் இரு மனமும் ஒன்றிட வேண்டும்

3.எங்கள் வாழ்க்கையில் இருளை அகற்றிடும் அருள் சக்தி பெற வேண்டும் என்ற உணர்வினை இருவரும் பெருக்குதல் வேண்டும்.

இது போன்று துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியின் உணர்வுகளை தங்களுக்குள் பெருக்கி இல்லற வாழ்க்கையில் இருளை அகற்றிடும் அருள் சக்தி பெறுங்கள்.

நமது வாழ்க்கையில் இயற்கையின் உண்மைகளை அறிந்து கொள்தல் வேண்டும். வெப்பம் காந்தம் விஷம் என்று இந்த மூன்று நிலைகளும் இணைந்து ஒரு அணுத் தன்மை அடைகின்றது.

1.காந்தம் “ஆதிலஷ்மி…” எதையும் ஈர்க்கும் சக்தி கொண்டு எதனையும் தன்னுள் இழுத்து வளர்க்கும் தன்மை என்றும்

2.வெப்பம் “ஆதிபராசக்தி…” அனைத்தையும் உருவாக்கும் தன்மை பெற்றது என்றும்

3.விஷம் “ஆதிசக்தி…” எதனிலும் மோதலாகி அது இயக்க உணர்வுகளை இயக்கும் என்றும்

4.நமது சாஸ்திரங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

அதாவது பெண்பால் ஆகித்தான் ஆண்பால் ஆகின்றது. பெண்பால் என்னும் பொழுது அது தாயாகின்றது. பெண்பால் தான் தாய் என்னும் நிலையில் தன் குழந்தைகளையோ மற்ற நிலைகளையோ சீர்படுத்தி வளர்க்கும் நிலையில் செயல்படுகின்றது.

1.ஆகவே நாம் பெண்களைத் தாயாகவும் நம்மை ஒரு சேயாகவும் மதித்துப் பழகுதல் வேண்டும்.

2.இது போன்று பெண்கள் ஒவ்வொருவரும் தான் ஒரு தாயாகவும் தான் ஒரு சேயாகவும் இருந்து பழகுதல் வேண்டும்.

இதைத்தான் இராமாயணமும் மற்ற காவியங்களும் நமக்கு உணர்த்துகின்றன. நம்முடைய எண்ணங்களை (கணவன் மனைவி) ஒன்று சேர்த்து இணைத்த உணர்வின் தன்மை கொண்டுதான் நாம் விண் செல்ல வேண்டும்.

நாம் தினமும் அதிகாலையில் சிறிது நேரமாவது துருவ நட்சத்திரத்தின் உணர்வை நமக்குள் சேர்த்துக் கொண்டு வருவோமேயானால் நமக்குள் அருள் உணர்வுகள் பெருகும்.

நம்மையறியாது சேர்ந்த இருளை நீக்கி இல்லத்தில் ஒன்று சேர்ந்து வாழும் தன்மை உருவாகும். அங்கே மகிழ்ந்து வாழச் செய்யும் உணர்வுகள் படரும்.

ஒரு இல்லத்தில் பெண்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் பொழுது “அந்த இல்லம் சொர்க்கலோகமாக மாறுகின்றது…”

அந்த இல்லத்தில் உள்ள பெண்களில் யாரேனும் வாட நேர்ந்தாலும் அந்த இல்லமே குடும்பமே நரக லோகமாக மாறிவிடும். ஆகவே நாம் பெண்களைத் துன்புறுத்தும் நிலைகளிலிருந்து விடுபட்டு பெண்களை உயர்வாக எண்ணிப் பழகுதல் வேண்டும்.

1.இல்லத்தில் பெண்களை எந்தளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கச் செய்கின்றோமோ

2.பெண்களிடத்தில் அன்பு கலந்த உணர்வுகளைச் செலுத்துகின்றோமோ

3.இதனின் உணர்வுகள் கொண்டு அங்கே ஒன்று சேர்ந்து வாழும் தன்மையும் இருளை அகற்றும் சக்தியும்

4.அருள் ஞானத்தைப் பெருக்கும் நிலையும் குடும்பத்தைச் சீர்படச் செய்யும் பண்புகள் வளரவும்

5.அன்பான உணர்வுகள் நமக்குள் பெருகவும் மகிழ்ந்து வாழச் செய்யும் உணர்ச்சிகள் வளரவும்

6.பிறவியில்லா நிலை என்ற நிலைக்கு அழைத்து செல்லும் சக்தியும், பெண்களுக்கு உண்டு.

பெண்களை மதித்து நடங்கள்… ஆதிசக்தி அதுதான்…!

இந்தச் சக்தியின் தன்மை வரும் பொழுது தான் உடல் சிவமாகின்றது. நுகர்ந்த உணர்வுகள் பிரம்மமாகின்றது. பிரம்மத்தின் தன்மை உடலாகின்றது.

எந்தக் குணத்தின் தன்மை உடலானதோ அதனின் உணர்ச்சியாக ஞானமான சரஸ்வதி நம்மை வழிநடத்திச் செல்லும் என்பதை நமது சாஸ்திரங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

ஒரு குடும்பத்தில் தாய்மார்கள் வெறுப்படைந்து விட்டால் அந்த இல்லத்தில் இருக்கும் முதியவர்கள் குறைகளின் உணர்வுகளை வளர்த்துக் கொள்கின்றனர்.

வீட்டிற்கு ஒரு மருமகள் வருகிறாள் என்றால் அந்த வீட்டிலிருக்கும் முதியவர்கள் மருமகளாக வந்த பெண்ணிடத்தில் குறைகளைக் கண்டு குறை கூறும் நிலையில் அங்கே குறையின் உணர்வுகளே வந்து விடுகின்றது.

முதியவர்களாக இருப்பவர்கள் அனைவரும், இந்த உடலை விட்டுச் செல்லும் பொழுது, எதைக் கொண்டு செல்கின்றோம்...? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

முதுமை நிலையில் இருக்கும் நாம்... தெளிந்துணர்ந்து வளர்ந்த நாம் காலை துருவ தியானத்தில்

1.தன் மகன் மருமகளுடன் இரு மனமும் ஒரு மனமாக ஒன்றுபட்டு வாழ வேண்டும்

2.தெளிந்த மனம் பெற வேண்டும்... தெளிவான வாழ்க்கை வாழ வேண்டும் என்று

3.இதனின் உணர்வுகளைப் பாய்ச்சிப் பழகுதல் வேண்டும்.

ஏனெனில் ஒரு குடும்பத்தில் பெண்கள் வாடிய நிலைகளிலிருந்தால், அவர்கள் எத்தகைய பயிர் செய்தாலும் அது வாடியே போகும். நல்ல பலன் இருக்காது. பெண்கள் வாடிய முகத்துடன் இருக்கும் பொழுது செய்யும் தொழிலும் சிறப்பாக இருக்காது, அந்தத் தொழிலும் குன்றிவிடும்.

ஆகவே அருள் ஞானிகளின் அருள் உணர்வுகளை நமக்குள் சேர்த்து நமக்குள் ஒன்றுபட்டு வாழும் நிலையும் வீட்டில் மகிழ்ச்சியான உணர்வுகள் பெற வேண்டும் என்ற உணர்வுகளையும் நமக்குள் எடுத்துப் பழகுதல் வேண்டும்.

இது போன்று செய்து வரும் பொழுது

1.நமது இல்லத்தில் செய்வினைகள் இருந்தாலும் சரி தோஷங்கள் ஆகிவிட்டது என்றாலும் சரி

2.அல்லது நம்மை அறியாமலேயே சாப வினைகள் வந்தாலும் சரி

3.அருள் மகரிஷிகளின் அருள் துணை கொண்டு அந்தத் தீய நிலைகளிலிருந்து நாம் விடுபட முடியும்.

குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் என்ற உணர்வினைத் தினமும் எடுத்து பழகுதல் வேண்டும். இது உங்களிடத்தில் எத்தனையோ நற்பயன்களை விளைவிக்கும்.

## உண்மையான யாகம் எது...?

குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் "துருவ நட்சத்திரத்தின் அருள் உணர்வைப் பெற வேண்டும்" என்ற உணர்வை

1.உயிரான நெருப்பினுள் போட்டு இதனின் உணர்வின் அலைகளை நமது வீடு முழுவதும் பரப்பினால்

2.வீட்டினுள் எத்தகைய சாப நிலைகள் இருந்தாலும் எத்தகைய கொடிய நிலைகள் இருந்தாலும் அவையனைத்தும் அகன்றுவிடும்.

கணவன் மனைவிக்கிடையே எத்தனையோ வேறுபட்ட உணர்வுகளும் மனஸ்தாபங்களும் வரும் போது பெண்கள் நரக வேதனையைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெளியிடும் வேதனையின் உணர்வலைகள் இங்கே புவியில் படர்கின்றது.

இது போன்ற வேதனையின் உணர்வுகளை நாம் நுகர்ந்து அறியும் பொழுது நம்மிடத்தில் இருள் சூழும் நிலைகள் வருகின்றது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நாம் இனியாவது... நமது குடும்பம் நமது குழந்தைகள் நமது ஊர் நமது நாடு என்ற நிலைகளில் ஒருங்கிணைந்த நிலை பெற வேண்டும். அனைவரும் மகரிஷிகளின் அருள் வட்டத்தில் வாழ வேண்டும் என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நமது குடும்பமும், நமது ஊரும் நலம் பெற வேண்டும் என்ற உணர்வைப் பாய்ச்சும் பொழுது இதனின் உணர்வுகள் ஊர் மக்கள் ஒன்றுபட்டு வாழ உதவும்.

நாம் ஒவ்வொரு நாளும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் என் கணவர் பெற வேண்டும் எங்கள் குடும்பத்தில் உள்ளோர் அனைவரும் பெற வேண்டும் எங்கள் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் பெற வேண்டும் எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் பெற வேண்டும். இந்த உலக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்று இதனின் உணர்வுகளை நாம் எல்லோரும் பரப்புவோம்.

இதனின் தொடர் கொண்டு நமது குடும்பத்திலும் நமது ஊரிலும் உள்ள அனைவரும் ஒன்றுபட்டு வாழும் தன்மையும் இருளை அகற்றும் வல்லமையும் மகிழ்ந்து வாழும் தன்மையும் உருவாகும்.

குடும்பமும் ஊரும் நலமாகும் பொழுது நமது உணர்வுகள் அடுத்திருக்கும் ஊரிலும் படர்ந்து அவர்களையும் பண்படச் செய்து மகிழ்ச்சியுடன் வாழச் செய்கின்றது.

மனிதர்களான நாம்

1.கோடிக்கரை (மனித உடல்) எனும் கடைசி நிலையிலிருக்கிறோம் என்று உணர்ந்து

2.தனுசுகோடி என்னும் கடைசி எண்ணத்தின் நிலைகளாக அனைவரும் ஒன்றுபட்டு வாழும் தன்மை கொண்டு

3.தம் உயிருடன் ஒன்றிய உணர்வினை ஒளியாக்கி இனி பிறவியில்லை என்ற நிலை அடைதல் வேண்டும்.

இதனின் உணர்வு கொண்டு மகரிஷிகள் காண்பித்த அருள் வழியில் செயல்படும் அனைவரும் அருள் மகரிஷிகளின் அருள் சக்தி பெற்று இருளை வென்று மெய்ப்பொருள் காணும் திறன் பெற்று ஒன்றுபட்டு வாழும் நிலை பெற்று மகிழ்ந்து வாழும் சக்தி பெற்றுப் பிறவியில்லா நிலை என்னும் அருள் சக்தி பெற்றுப் பெரு வீடு பெரு நிலை எனும் நிலையைப் பெறும் நிலையாக பேரின்பப் பெரு வாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட எமது அருளாசிகள்.

வீட்டில் கணவன் மனைவி வாழுகின்றார்கள். கணவனுக்கு அலுவலகத்தில் யாராவது இடைஞ்சல் செய்யும் நிலைகள் அதிகமாகி விட்டால் வீட்டில் மனைவி என்ன செய்ய வேண்டும்...?




## சத்தியவான் சாவித்திரி

வீட்டில் கணவன் மனைவி வாழுகின்றார்கள். கணவனுக்கு அலுவலகத்தில் யாராவது இடைஞ்சல் செய்யும் நிலைகள் அதிகமாகி விட்டால் வீட்டில் மனைவி என்ன செய்ய வேண்டும்...?

மனைவி அந்த மாதிரி நேரங்களில் "ஈஸ்வரா..." என்று உயிரை எண்ணித் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் என் இரத்தத்தில் கலந்து என் உடல் முழுவதும் படர்ந்து ஜீவான்மா ஜீவ அணுக்கள் பெற வேண்டுமென்று எண்ண வேண்டும்.

பின் துருவ மகரிஷிகளின் அருள் சக்தி என் கணவர் பெற வேண்டும். அவர் உடல் முழுவதும் படர வேண்டும். அவரைப் பார்ப்பவர்கள் எல்லோருக்கும் நல்ல எண்ணங்கள் வரவேண்டும் என்று இதை உடலுக்குள் சமைத்துக் கணவரிடம் "நல்லது நடக்கும்..." என்று சொல்லிப் பாருங்கள்.

1.அவரால் இதை எண்ண முடியவில்லை... மனைவி இதைச் செய்ய வேண்டும்.

2.இரண்டு உயிரும் ஒன்றானால் இரு மனமும் ஒன்றி இரு உணர்வும் ஒன்றாகின்றது.

3.உணர்வு ஒன்றியபின் கணவரைப் பாதுகாக்கும் உணர்வை மனைவி செய்யவேண்டும்.

4.இது தான் "எமனிடமிருந்து சாவித்திரி தன் கணவனை மீட்டினாள்..." என்பது.

சங்கடம் வேதனை, என்ற உணர்வுகள் வரும் பொழுது அது நோயாக மாறி மனிதனை முடித்துவிடும் எமனாக மாறுகின்றது. இதை மாற்ற வேண்டும்.

எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் வசிஷ்டரும் அருந்ததியும் போல் வாழ வேண்டும். அப்படியென்றால் கணவனும் மனைவியும், "துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைக் கவர வேண்டும். .."

நளாயினி போன்று என்கிற போது கணவருக்கு ஒரு சங்கடம் வரும் பொழுது "அதை நிவர்த்திக்கக் கூடிய சக்தியாக..." அவர் உயர்ந்த ஞானம் பெற வேண்டும் என்ற உணர்வை மனைவி எடுக்க வேண்டும்.

சாவித்திரி போன்று இரு மனமும் ஒன்றி இரு உயிரும் ஒன்ற வேண்டும்.

1.கணவர் அருள் உணர்வு பெற வேண்டு  என்றும் அவருக்கு நல்ல எண்னம் வரவேண்டும் என்றும்

2.அவர் பார்ப்பது எல்லாம் நலமும் வளமும் பெற வேண்டும் என்றும்

3.அவர் சொல்லைக் கேட்போரெல்லாம் இனிமை பெற வேண்டும் என்றும் பெண்கள் எண்ண வேண்டும்.

அப்பொழுது அவருக்கு உற்சாகத்தை ஊட்டிக் கொண்டே இருக்கும். நல்ல சிந்திக்கும் தன்மை வரும்.

கணவன் மனைவி வேதனைப்படும் பொழுது, அந்த வேதனை என்ற உணர்வுகள் இருவரையும் சிந்திக்க முடியாமல் செய்யும். அந்த மாதிரியான நேரங்களில் எல்லாம் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாம் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று எண்ண வேண்டும்.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர்ந்து உடல் உறுப்புகளை உருவாக்கிய அணுக்கள் பெற வேண்டும் என்று எண்ண வேண்டும். இவ்வாறு எண்ணி உடலுக்குள் சேர்த்தவுடன் கணவருக்கு, அதைப் பாய்ச்ச வேண்டும்.

1.அந்த மகரிஷிகளின் அருளால் அவர் சொல்வதெல்லாம் நலம் பெற வேண்டும்,

2.அவர் பிறர் போற்றும் நிலைகள் பெற வேண்டும் என்று மனைவி எண்ண வேண்டும்.

அந்தப் பழக்கத்திற்கு வரவேண்டும்.

தியானம் என்பது… இதுதான் தியானம்.

1.உட்கார்ந்து சதா எண்ணுவது, தியானமல்ல.

2.அந்த அருள் சக்தி பெறுவதும் அதை இயக்குவதும்தான் தியானம்.

நமக்குள் வேதனை என்ற உணர்வுகள் ஆனபின் சிக்கலென்ற உணர்வு வருகின்றது. நுகரும் உணர்வுதான் நம்மை இயக்குகின்றது. அந்த உணர்வின் தன்மைதான் கூடும். எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்ற நிலைகளில் விஞ்ஞானம் இதை நிரூபிக்கின்றது.

மெய் ஞானிகள் காட்டியது…

1.பிறரின் உணர்வுகள் வேகமாக இருக்கும் பொழுது நம் நல்ல உணர்வுகளை உடைத்து, உள்ளுக்குள் சென்று விடுகின்றது

2.அந்த வேகமான உணர்வுகள், நமக்குள் வராதபடித் தடுக்க வேண்டுமென்றால்

3.அருள் உணர்வை நாம் அடிக்கடி சேர்த்து இணைக்க வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும், நாம் பெற வேண்டும் என்று செருகேற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்குப் பாதுகாப்பான நிலைகள் வரும்.

நமக்குள் தீமை வராது, தடுத்து  பழகுவதுதான் தியானம். துருவ நட்சத்திரத்தின் உணர்வை நமக்குள் எல்லா அணுக்களுக்குள்ளும் சேர்த்துவிட வேண்டும்.

நாம் புழுவிலிருந்து மனிதனாக வரப்படும் பொழுது தீமையிலிருந்து விடுபடும் உணர்வை சேர்த்துச் சேர்த்து வந்தோம். தீமையை நீக்கிய, துருவ நட்சத்திரத்தின் உணர்வை இப்பொழுது உங்களிடம் பதிவு செய்கின்றோம்.

1.இந்தப் பதிவு கொண்டு துருவ நட்சத்திரத்தை எண்ணி

2.காற்றில் கலந்துள்ள துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்துப் பயன்படுத்தும் பொழுது

3.நாம் துருவ நட்சத்திரத்தின் ஆயுள் மெம்பராகச் சேருகின்றோம்.

ஆயுள் கால மெம்பர் குடும்பத்தில் யாம் சொன்ன மாதிரி கடைப்பிடிக்க வேண்டும். குழந்தை சுட்டித்தனமாக இருந்தால் உடனே துருவ நட்சத்திரத்தை எண்ணி மாற்ற வேண்டும்.

தொழிலில் நஷ்டம் ஏற்பட்டாலும் உடனே துருவ நட்சத்திரத்தை எண்ணினால் அதை எப்படிச் சரி செய்ய வேண்டுமென்ற நல்ல சிந்தனை வரும்.

கணவனும் மனைவியும் இந்தத் தியானத்தை எடுத்துக் கணவருக்கு உயர்ந்த ஞானம் கிடைக்க வேண்டும், சிந்திக்கும் ஆற்றல் கிடைக்க வேண்டும், தொழிலில் நல்ல வீரிய சக்தி பெறக்கூடிய உணர்வு வரவேண்டும் என்ற உணர்வைப் பாய்ச்சுங்கள்.

அவர் மனம் வலிமையாக இருக்க வேண்டும், எண்ணங்கள் சீராக இருக்க வேண்டும், அவர் செயல்களை அனைவரும் போற்றும் நிலைகள் வரவேண்டுமென்று எண்ணிப் பாருங்கள். எந்த வியாபாரமானாலும்

அவரிடத்தில் பொருள் வாங்குவோர் எல்லாம் நன்றாக இருக்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள்.

மனைவி இப்படி எண்ணினால்…

1.வேறு யாரிடத்திலும் யோசனை கேட்க வேண்டியதில்லை.

2.இந்த உணர்வுடன் கணவர் எங்கு சென்றாலும் எல்லாக் காரியத்திலும் வெற்றி பெறலாம்.

3.நாம் இந்த மாதிரி வாழ்ந்து காட்டவேண்டும்… அதைச் செயலாக்கிப் பார்க்க வேண்டும்… வாழ்க்கையில் மகிழ்ச்சி வரும்.

மற்றவரிடத்தில் இதைச் சொல்லும் பொழுது இந்த உணர்வு அங்கேயும் விளைய வேண்டும். அவர்கள் குடும்பமும் நன்றாக இருக்க வேண்டும், அவர்கள் வெளிப்படுத்தும் மூச்சு நல் உணர்வாகப் படர வேண்டும்.

நம் தெருவிற்குள் நல்ல உணர்வலைகள் பரவ வேண்டும். அப்பொழுது ஒன்றுபட்டு வாழும் நிலை வரும். ஆயுள் கால மெம்பர்கள் அனைவரும் துருவ நட்சத்திரத்துடன் ஒன்றியே வாழ வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் துருவ நட்சத்திரத்தை எண்ணி எடுத்துப் பழக வேண்டும்.

நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் நமக்கு அருளினார்.

1.அவர் வழியில் அவர் காட்டிய நெறிப்படி அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நாம் எடுக்க வேண்டும்.

2.அவர் துருவ நட்சத்திரத்தின் அங்கத்தினர்… அவர் வழியில் துருவ நட்சத்திரத்தின் ஒளி பட இருள் நீங்கும்.

3.அந்த அருளைப் பெற இருளை அகற்றும் சக்தியை நாமும் பெறலாம்.




# வசிஷ்டரும் அருந்ததியும்

அகஸ்தியன் அவன் வளர்ச்சியில் பதினாறு வருடங்கள் வளர்ச்சி பெறுகின்றான். பதினாறாவது வயதில் அக்கால மக்கள் அவனுக்குப் திருமணத்தைச் செய்து வைக்கின்றார்கள். திருமணத்தைச் செய்து வைக்கும் பொழுது கணவனும் மனைவியும் இரு மனமும் ஒன்றாகி அதன் வழியில் அவர்கள் வாழ்கின்றார்கள்.

துருவன் தான் கண்ட உண்மைகளைத் தன் மனைவி பெற வேண்டும் என்று உணர்வுப் பூர்வமாகச் சொல்லுகின்றான்.

அவனுடைய மனைவி கேட்கின்றது. தனக்குள் பதிவு கொண்ட உணர்வின் துணை கொண்டு "விண்ணை நோக்கி ஏங்குகின்றது..." இவன்

கண்ட பேருண்மைகளை அவளும் காணுகின்றாள்… அறிவுபூர்வமாக அறிகின்றாள்.

தன் கணவனால் பெற்ற சக்தியால் பேரின்பப் பேரானந்த நிலைகள் அடைகின்றாள்.

1.இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தை உணரும் பருவமும்
2.அதை நுகர்ந்தறிந்து தனக்குள் மகிழ்வுறும் உணர்வாக வெளிப்படுத்துவதையும்
3.நஞ்சினை ஒடுக்கும் ஆற்றலாக… "தான் நுகரும் உணர்வு ஒளிக் கற்றைகளாகத் தன் உடலில் இருந்து வெளிப்படுவதையும்…" உணர்கின்றாள்.

இவ்வாறு தன் கணவனால் பெற்ற சக்தியால் இந்தப் பிரபஞ்சத்தை அறிந்திடும் உணர்வுகள் தனக்குள் வளரும் தன்மை பெற்று…
1.கணவன் அந்த உயர்ந்த நிலைகளை மேலும் மேலும் பெற வேண்டும் என்ற
2.ஏக்க உணர்வுகளைத் தனக்குள் வளர்த்துக் கொள்கின்றாள்.

துருவனோ தான் உபதேசித்த உணர்வுகளைத் தனக்குள் விளையச் செய்து அதன்வழி தனக்குள் வளர்த்துக் கொண்ட உணர்வுகளைக் கண்டு அவனும் பேரானந்தப் படுகின்றான். அப்பொழுது இரு மனமும் ஒன்றாகி "ஒருவரை ஒருவர் உயர்த்தி எண்ணும் நிலை வருகின்றது…"

ஒருவர் சொல்லை ஒருவர் உயர்த்தும் நிலை வரும் பொழுது தான் அதற்கு நளாயினி என்று காரணப் பெயரை வைக்கின்றார்கள். தன் கணவன் சொல்லைச் சிரமேல் கொண்டு அதன் வழி நடப்பதை நாமெல்லாம் புரிந்து கொள்வதற்காக நளாயினி என்று காரணப்பெயரை வைக்கின்றார்கள்.

தன் கணவன் சொன்ன சொல்லைத் தனக்குள் உயர்த்தி அந்த உணர்வின் சத்தைத் தனக்குள் வளர்த்து இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தை உணர்வதோடு மட்டுமல்லாது அகண்ட உலகில் நட்சத்திரங்கள் எவ்வாறு உணவை உட்கொள்கின்றது…? என்பதை அறியும் பருவம் வருகின்றது.

அந்த நட்சத்திரங்கள் உணவாக உட்கொண்ட உணர்வுகள் நமது பிரபஞ்சத்தில் பரவும் பொழுது சூரியன் அதை உணவாக உட்கொள்வதையும் அதன்வழி அது வளர்ச்சி பெற்று வெளிப்படும்

உணர்வுகளால் கோள்களும் அணுக்களும் எப்படி உருப்பெறுகின்றது...? என்ற நிலையையும் அவள் அறிகின்றாள்.

1.தான் கண்ட உண்மையைத் தன் கணவருடன் ஒன்றி அந்த உண்மையின் தன்மைகளைச் சொல்வதும்

2.இருவருமே ஒன்றிய நிலைகள் கொண்டு அதன்ன் வழியில்

3.அகஸ்தியன் தன் மனைவியை உயர்த்தி எண்ணுவதும்... மனைவி உயர்ந்த சக்தி பெறுகிறதென்றும் உணர்கின்றான்.

அந்த உணர்வுகள் அனைத்தும் அவர்கள் உடல்களில் விளையப்பட்டு இரு உயிரும் ஒன்றி வாழும் நிலை பெறுகின்றது. இரு உயிரும் எதைக் கவர்ந்ததோ அதைக் கருவாக உருவாக்கும் திறன் பெறுகின்றார்கள்.

துருவனின் உடலில் விளையும் உணர்வுகள் துருவ மகரிஷியின் மனைவியின் உடலிலும் விளைகின்றது.

அதற்கு அருந்ததி என்று, காரணப் பெயரை வைக்கின்றார்கள். தனக்குள் கவர்ந்து கொண்ட சக்தி அதனுடன் இணைந்து வாழ்ந்திடும் நிலையை அருந்ததி என்று பெயரை வைக்கின்றார்கள்.

வசிஸ்டரும் அருந்ததியும் என்றால் வசிஸ்டர் ஆண்பால் அருந்ததி தனக்குள் கவர்ந்து கொண்ட உணர்வுகள்.

1.இருவரும் ஒன்றாக இணைந்து அந்த உணர்வின் தன்மையை இரண்டறக் கலந்து ஒன்றாக

2.உயிருடன் இணைக்கும் பருவம் பெறுகின்றார்கள்.

உயிருக்குள் வெப்பம் என்ற நிலைகள் இருப்பினும் ஈர்க்கும் காந்தம் பெண்பால் அருந்ததி என்றும் தன்னுடன் இயக்கும் உணர்வுகளை வசிஸ்டர் என்றும் காரணப் பெயரை வைக்கின்றார்கள்.

இவ்வாறு வளர்ந்த உணர்வுகள் "சத்தியவான் சாவித்திரி..." உயிருடன் ஒன்றிய உணர்வாக மரணமில்லாப் பெரு வாழ்வு வாழும் தகுதி பெறுகின்றார்கள்.

இதைத்தான் நமது ஞானிகள் நாமெல்லாம் கண்டுணர்வதற்குச்

1.சந்தர்ப்பத்தால் ஏற்படும் இணைப்பும் அதனால் உருப்பெறும் சக்தியும்

2.அவைகளுக்குக் காரணப் பெயர்களை வைத்து அழைத்து அகஸ்தியன் தொடர்களை நாமும் கண்டுணரும்படிச் செய்கின்றார்கள்.

அவ்வழியில் வளர்ந்தவர்கள்தான் எதைக் கூர்மையாக எண்ணி அந்த உணர்வினை இருவரும் ஒன்றாக இணைந்துப் பெற்றனரோ... இணைந்து இன்று துருவ நட்சத்திரமாக வாழ்கின்றார்கள்.

துருவ நட்சத்திரமாக வாழ்ந்தாலும் அகண்ட உலகின் தன்மையைத் தன் உணர்வுக்குள் பெறும் தகுதியும் பெறுகின்றனர்.

நட்சத்திரங்கள் பிற மண்டலங்களிலிருந்து தனக்குள் வரும் நிலையைக் கவர்ந்து அது உமிழ்த்தும் உணர்வலைகள் பால்வெளி மண்டலங்களாகப் படர்கின்றது. அணுக்களின் தன்மைகள் சுழற்சியில் வரப்படும் பொழுது தூசிகளாக மாறுகின்றது.

இப்பொழுது விஞ்ஞான அறிவு கொண்டு ஒரு பொருளைக் காற்று அழுத்ததால் அழுத்தப்படும் பொழுது அதை மிகவும் நுண்ணிய தூசிகளாக (பவுடர்) மாற்றுகின்றார்கள்.

அகஸ்தியரும் அவர் மனைவியும், துருவ நட்சத்திரமாகும் பொழுது

1.பிற மண்டலங்கள் அகண்ட உலகில் அது பெறும் உணர்வுகள் தூசுகளாக வருவதையும்... பிரபஞ்சத்தில் அது பரவுவதையும்

2.பிரபஞ்சத்தில் பரவுவதை நமது பூமி துருவப் பகுதியில் ஈர்க்கப்படும் பொழுது இடைமறித்து அந்த உணர்வின் தன்மையை

3.எப்படி, நமது பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு கோளும் துருவப் பகுதியில் இடைமறித்து அதைத் தனக்குள் எடுத்து வளர்க்கின்றதோ

4.அதைப் போன்றுநமது பூமியில் விளைந்த இவர்கள் இருவரும் ஒன்றானபின்

5.அதைக் கருவாக்கும் நிலைகள் பெற்று ஒளியின் சுடராக இன்றும் மாற்றிக் கொண்டே உள்ளார்கள்.

அகஸ்தியரும் அவர் மனைவியும் இருவரும் இந்தப் பிரபஞ்சத்தின் உணர்வை ஒளியின் அணுவாக மாற்றியது போன்று அக்காலங்களில் பெற்ற மற்ற மக்கள் ஆறாவது அறிவு ஏழாவது நிலைகள் பெற்றுத் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் இன்றும் சப்தரிஷி மண்டலங்களாக வாழ்ந்து கொண்டுள்ளார்கள். “என்றும் பதினாறு” என்ற நிலையை அடைந்து விட்டார்கள்.

ஆகவே நாம் அனவரும்

1.இதே வழியில் அதை உற்று நோக்கி அந்த உணர்வினைக் கூர்மையாகப் பதிவு செய்து கொண்டால்

2.நாமும் அந்த துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் இணைந்து ஒளியின் சரீரமாவது திண்ணம். எமது அருளாசிகள்.




## தியானம் செய்பவரின் கடமைகள்

நாம் எதைச் சொந்தமாக்க வேண்டும்...?

1.நமது உயிருடன் ஒன்றி வாழ்ந்து

2.இந்த உயிருடன் ஒன்றி வாழும் அந்த ஒளியின் சரீரத்தை நாம் நமக்கு சொந்தமாக்க வேண்டும்.

ஆகையால் தியான வழி அன்பர்கள் ஒவ்வொருவரும் "உலகுக்கு எடுத்துக்காட்டாக..." இருக்க வேண்டும். நமது கடமைகளிலிருந்து தவறக் கூடாது.

அருள் ஒளி என்ற உணர்வுகளை நமது உடலிலுள்ள அணுக்களுக்குக் கொடுத்து

1.துருவ நட்சத்திரத்தின் உணர்வைக் குரு வழியில் பாய்ச்சி அதைக் கடமையாக அமைத்து

2.அந்த அருள் வழியில் ஒளியாக மாற்றும் உணர்வைப் பெற வேண்டும்.

இந்த உடல் நமக்குச் சொந்தமல்ல... உயிர்தான் நமக்குச் சொந்தம். உணர்வை எல்லாமே ஒளியாக மாற்றி விட்டால் "தனுஷ்கோடி..."

இதை நமக்குள் எடுத்து லட்சம் என்கிற பொழுது அந்த லட்சம் இந்த லட்சம் என்றும் ஒன்று இரண்டு மூன்று என்ற நிலைகள் வரும்போது, பல லட்சம் ஆகிறது.

அப்பொழுது எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாக்கும் போது "கோடி என்ற நிலைகளில் தனுஷ்கோடி ஆகின்றது..." எவ்வளவு அழகாக இராமாயாணத்தில் கொடுத்திருக்கின்றார்கள்.

ஆகையால் நாம் அனைவரும் இதனுடைய உணர்வுகளை வளர்த்து அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பில் ஆயுள் மெம்பராகச் சேர்ந்து... அதனுடன் சேர்த்த உணர்வின் தன்மை ஒன்றாக இணைத்துக் காற்றில் வரும் விஷ உணர்வுகளை நீங்கள் விடும் மூச்சலைகளால் மாற்றியமைத்து நாளை வரும் விஞ்ஞான அழிவிலிருந்து எல்லோரையும் காக்க வேண்டும்.

1.நியூட்ரான் என்ற நிலைகள் வரப்படும் பொழுது அது எப்படி எல்லாவற்றையும் விரட்டுகின்றதோ இதே போல்

2.துருவ நட்சத்திரத்தின் அருள் உணர்வை நீங்கள் அனைவரும் பரப்பித் தீமைகளை எல்லாம் விரட்ட வேண்டும்.

ஒரு கிராமத்தில் இருக்கின்றோம் என்றால் அங்கே நோயோ, கலவரங்களோ இதைப் போன்ற சில நிலைகள் இருந்தால் அனைவரும் கூட்டுத் தியானமிருந்து அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஆற்றல் மிக்க சக்திகளைக் கவர்ந்து அந்த மூச்சலைகளை அங்கே பரப்புங்கள். அப்பொழுது அந்தக் கிராமத்தில் உள்ள தீமை செய்யும் உணர்வின் அணுக்கள் மாறுகின்றது.

சில ஊர்களில் விவசாயம் மிக மோசமாக இருக்கிறது என்று தெரிந்தால் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து

1.துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று கூட்டுத் தியானமிருந்து

2.பயிரினங்களில் அந்தச் சக்தி படர வேண்டும் என்றும்

3.இதில் உருவாகும் அணுக்கள் தாவர இனத்தை வளர்க்கும் அணுவாக வளர வேண்டும் என்று

4.அந்த அருள் உணர்வுகளைப் பரப்ப வேண்டும்.

எனென்றால் காற்றிலிருந்து விஷத்தின் தன்மையை நுகர்ந்து அது அணுவாகி அதைச் சாப்பிடுகிறது. அதே சமயத்தில் நாம் எடுக்கும் உணர்வு கொண்டு அந்த விஷத்தன்மையை எடுத்தாலும் இது காற்றிலிருந்து வெளிப்படும் செடியின் சத்தை நுகர்ந்து அந்த உணர்வின் மலத்தை இடும்போது அது உரச் சத்தாக மாறும். அந்த அணுவும் வளரும்…! சொல்வது அர்த்தமாகிறதல்லவா.

நீங்கள் விடும் மூச்சலைகள் நல்ல அணுக்களாகின்றது. எனவே இதைப் போன்ற நிலைகளில் நாம்

1.நம்மைக் காக்க வேண்டும்.

2.நம் குடும்பத்தைக் காக்க வேண்டும்

3.நம் ஊரைக் காக்க வேண்டும்

இதைப் போல் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

“உலகுக்கு எடுத்துக் காட்டும் நிலைகளில்…” நமது குருநாதர் காட்டிய அருள் நெறிகளைப் பெறச் செய்து இதற்கு முன்னால் அறியாமல் சேர்ந்த நிலைகள் நம்மை இயக்கினாலும் அதையெல்லாம் தடுத்துப் பழக வேண்டும்.

ஏனென்றால் ஒரு பொருள் கெட்டுப் போய்விட்டது என்றால் மறுபடியும் அதை திருப்பிச் செய்கிறோம். ஒரு கட்டத்தில் குறையானால் அதை நிறுத்தி நாம் செயல்பட வேண்டும்.

ஒரு செடியின் வளர்ச்சி குன்றினால் அதற்கு என்ன பக்குவம் வேண்டும்…? என்று மீண்டும் வளர்க்கச் செய்கின்றோம். இதைப் போல நாம் ஒவ்வொன்றிலும் பக்குவப்பட வேண்டும்.

வாழ்க்கையில் இப்படிச் செய்தேனே… இப்படி இருந்தேனே…! என்பதையெல்லாம் மறந்து விடுங்கள்.

நாம் எப்படி இருக்க வேண்டும்…?

1.நல்ல உணர்வுகளை வளர்க்க வேண்டும்

2.இருளை அகற்றும் அருள் சக்தி பெற வேண்டும்.

3.நம் குரு அருளால் அந்த மெய்ப்பொருளைக் காணும் நிலை நமக்குள் வரவேண்டும்.

4.அனைவரும் அந்த மெய்ப்பொருள் கண்டு அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ந்திடும் சக்தி பெற வேண்டும்.

இதை உங்களுக்குச் சொந்தமாக்குங்கள்.

இன்றைய விஞ்ஞான உலகில் எத்தனையோ விஷத் தன்மையான நிலைகளை நாம் காண… சுவாசிக்க நேருகின்றது. விஞ்ஞான அறிவால் உலகைக் காக்க வேண்டும் என்ற நிலை இல்லாமல் தன்னைக் காக்கத் தன் நாட்டைக் காக்க என்று பிழை கொண்ட உணர்வுகளைத்தான் இன்று செய்கின்றார்கள்.

ஆகவே இப்போது நாம் உலக மக்களின் உணர்வுகளை எடுத்துக் கொண்டாலும் நமக்குள் வீரிய உணர்வின் தன்மை இருந்தாலும் நாம் நல்லதை எண்ணும் போது இதனுடைய (விஷதன்மைகளின்) அழுத்தம் நல்ல குணங்களைச் சிந்திக்கும்படி செய்வதோ… நல்ல குணங்களைச் செயல்படுத்தும் நிலையோ இல்லாது போகும்.

அப்போது நமக்குள் இந்த எதிர்மறையான உணர்வுகளால் நல்ல உணர்வுகளைத் தூண்டும் நல்ல அணுக்களின் செயலைத் தடைப்படுத்தும்.

இதை மாற்ற வேண்டுமென்றால்

1.திசை திருப்புவது போல...

2.சக்தி வாய்ந்த நிலைகளில் குருநாதர் எமக்குக் கொடுத்த அரும்பெரும் அருள் சக்தியை

3.அப்படியே உங்களுக்கு கொடுத்திருக்கிறோம்.

ஒவ்வொரு நொடியிலும் நீங்கள் அதை வளர்க்க வேண்டும்,..! எமது அருளாசிகள்.




## “உங்கள் மூச்சலைகளால்...” விஷக் கதிரியக்கங்கள் மாய வேண்டும்

இன்று கெமிக்கல் கலந்த அணுக்களை... “செல்கள்... அதாவது சிலிகன்களைப் போன்று...” நமக்குள் உணர்வின் எண்ணங்களைப் பதியச் செய்து விட்டனர்.

1.விஞ்ஞான அறிவு கொண்ட கெமிக்கல் கலந்த உணர்வின் ஆற்றல்
2.நமக்குள் இருக்கும் ஒவ்வொரு உணர்வுக்குள்ளும் இன்று அதிகமாகப் பதிந்து விட்டது.
3.அதிலிருந்து நாம் திசை திரும்பவே இல்லை.
4.மனிதன் என்ற எண்ணமே இங்கே போய்விட்டது,
5.இயந்திர வாழ்க்கை வாழும் நிலைக்கு இன்று நாம் வந்து விட்டோம்.

சிலிகனைப் போன்று நமக்குள் பதிவு செய்த நிலைகளில் “இருந்த இடத்திலே இருந்து கொண்டே… ஆட்டிப்படைக்கும் தன்மைக்கு வந்து விட்டது இன்றைய விஞ்ஞானம்…! (இதை யாரும் மறுக்க முடியாது)

மனிதனுடைய சிந்தனைகள் சிதறுண்டு போகும் நிலைகளும் சூரியனே சுக்குநூறாகிக் கரையும் நிலைக்கும் இந்தப் பூமியினுடைய நிலைகளும் பொசுங்கிப் போகும் நிலைக்கு வருகின்றது அல்லது இருள் சூழ்ந்த நிலைக்கு வருகின்றது.

பூமியில் அணுகுண்டுகள் வெடித்தால் இவன் நீருக்குள்ளும் நீர் நிலைகளுக்குள்ளும் பதித்து வைத்திருக்கின்ற லேசர் கதிரியக்கங்கள் அணுக்கள் வெடிக்கும். அதை அப்புறப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கின்றனர்.

அவ்வாறு எடுத்தாலும் அணு நீர் மூழ்கியின் தன்மையில் அந்த இயந்திரத்திற்குள் பாய்ச்சி இருந்தாலும் ஒவ்வொரு இயக்கத்திற்குள்ளும் அந்த அணுக் கதிரியக்கங்கள் தாக்கிடாதபடி அதை நீர் நிலைகளில்தான் மறைக்க வேண்டும்.

அல்லது வேறொரு மண்ணுக்குள் பதிய வைத்தாலும் பூமியின் வெப்ப அலைகள் கலக்கப்பட்டு இந்த அணுக்கள் மண்ணுக்குள் பூமிக்குள் வெகுதூரம் ஊடுருவி வரும் நிலைகள் வருகின்றது.

அணு உலைகள்… அது போன்ற மற்ற இடங்களிலிருந்து வருவதை
1.அந்தக் கசிவுகளை… கழிவுகளை எல்லாம் மண்ணுக்குள்ளே மறைக்க வேண்டுமென்று இவன் எண்ணுவான்.
2.ஆனால் இந்த அணுக்கதிரியக்கங்கள் பூமிக்குள் சென்றவுடன்

3.இயற்கையின் துடிப்பு கொண்டு கதிரியக்கச் சக்தியை அதிகமாகக் காட்டும்.

4.எதிர்நிலையான நிலை வரப்படும்போது பூமியில் நிலநடுக்கம் ஏற்படும்... எல்லாமே போய்விடும்.

இந்த அளவுக்குத்தான் இன்றைய உலகின் நிலை இருக்கின்றது.

இயற்கையின் நிலைகளை அசுத்தப்படுத்திக் கொண்டு... மனித உணர்வுக்குள்ளும் அதைப் பதியச் செய்து... இன்று மனிதன் என்ற நிலையே கூண்டுடன் அற்றுப்போகும் நிலை வருகின்றது.

ஏகக் காலத்தில் குண்டுகள் வெடித்தாலும்... வெடித்த நிலையில் புகை மண்டலங்களாகக் குவியப்பட்டுச் சூரியனுடைய ஆற்றல்மிக்க சக்தி வாய்ந்த கதிரியக்கங்கள் படாதபடி

1.பூமியில் இருக்கக்கூடிய நீர் வளங்கள் அனைத்துமே உறையும் தன்மை பெறும்.

2.இங்கே நாம் இருக்ககூடிய நிலைகள் அனைத்துமே உறையும் தன்மை வருகின்றது.

இதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கச் சக்திகள் சூரியனுடைய கதிர் வெப்பங்கள் கலந்தவுடன் இதிலிருந்து ஆவியாக வெளிப்படுத்தி இதே உணர்வின் தன்மைகள் சூரியனே மாறுபடும் காலம் வருகிறது. மனிதனாலே இந்தப் பிரபஞ்சமே சூனியமாகும் காலம் வந்துவிட்டது.

1.யாம் சொல்வது உங்களுக்குப் புதிராக இருக்கலாம்.

2.ஆனால் விஞ்ஞானிகள் கணக்குப் போட்டு நாளைக்கு இப்படி வரப்போகிறது என்று சொல்வார்கள்.

3.எழுதி வைத்துக் கொள்ளுங்கள்... யாம் சொல்வது (1989 ஆம் வருடம்) உங்களுக்குச் சாதாரணமாகத் தெரியலாம்.

நமது குருநாதர் ஒவ்வொரு அணுவிற்குள்ளும் ஊடுருவி மனிதனுடைய நிலைகள் எவ்வாறு இருக்கின்றது...? அதிலே நீ எவ்வாறு செயல்பட வேண்டும்...? என்று எமக்கு உபதேசித்தார்.

ஆகையினாலே இன்று மனித வாழ்க்கையினுடைய நிலைகளை விடுத்து "இது சரி... இது தப்பு...!" என்று வரவேண்டாம். குறைகளைக் காண வேண்டாம்.

நாம் அனைவரும் மெய் ஒளியைக் காண வேண்டும். மெய்யைக் காண்போம். மெய்யுணர்வின் தன்மையை நாம் பெறுவோம். இதிலே நாம் அனைவரும் "ஓரே குடும்பம்... ஓரே நிலை தான்..."

எத்தகைய இருள் வந்தாலும் உடனடியாக அதை மாற்ற வேண்டும். அதாவது மகரிஷிகளின் அருளாலே அந்த இருள் நீங்க வேண்டும்... நாம் அனைவரும் ஒளி நிலை பெற வேண்டும் என்ற உணர்ச்சிகளைக் கூட்டுவதற்குத் தான் குருநாதர் ஆணையை யாம் செயல்படுத்துகிறோம்.

நாம் எடுக்கும் எண்ணங்கள் அனைத்தும் ஒன்றாக இருக்க வேண்டும். இந்த உணர்வின் ஒளிகள் நமக்குள் ஒன்றாக இருக்க வேண்டும்.

1.நாம் இடும் மூச்சலைகள் மழை நீராகக் கொட்ட வேண்டும்.
2.அப்படிப் பெய்யும் மழை நீரால் விஷக் கதிரியக்கங்கள் மாய வேண்டும்.
3.அத்தகைய விஷத் தன்மைகளை நீக்கும் ஆற்றல்களை ஒவ்வொருவரும் பெற வேண்டும்
4.அந்த மெய் உணர்வைத் தூண்டும் நிலைகளுக்குத் தான் இதை உபதேசிக்கின்றோம்.




# குரு காட்டிய வழியில் "மெய் உலகைப் படைப்போம்..."

இன்றைய நிலையில் பூமியில் வாழும் உயிரினங்கள்... மிருகங்களிலிருந்து மனிதன் வரை மிகவும் சிரமமான நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். காற்று மண்டலமோ நச்சுத்தன்மையாக மாறிக் கொண்டு வருகின்றது.

அதே சமயம்

1.மனிதனுடைய எண்ண அலைகள் அனைத்தும் சிந்தனையற்றதாகி

2.மனித உடலில் விளைய வைத்த அந்தச் சிந்தனையற்ற உணர்வுகள் இங்கே படர்ந்து கொண்டிருக்கின்றது.

3.அத்தகைய உணர்விலிருந்து நாம் மீள வேண்டும்.

"நாம் அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் வட்டத்தில் இணைந்து" நம்மையறியாது சேர்ந்த தீமைகள் நீங்கி நம்முடைய மூச்சும் பேச்சும் உலக நன்மை பயக்கும் சக்தியாக நாம் எண்ணிய உணர்வுகள் நமக்குள் தீமையை அடக்கும் சக்தியாகவும்... நன்மை பயக்கும் சொல்லாகவும்... செயலாகவும்... நமக்குள் வளர வேண்டும்.

நம்முடைய உணர்வுகள் எண்ணங்கள் அனைத்தும் உலக மக்களைக் காத்திடும் நிலையாகவும் சகோதர உணர்வை வளர்த்திடும் நிலையாகவும் அது வளர்ந்திட வேண்டும்.

1.அன்றைய மெய்ஞானிகள் எல்லோரும் எவ்வாறு ஒன்று கலந்து உறவாடினார்களோ

2.அதைப் போன்று நம் உணர்வுகள் அனைத்தும் ஒன்றுபட்ட உணர்வாகச் செயல்பட வேண்டும்.

ஆகாத உணர்வுகள் வந்தாலும் சகோதர உணர்ச்சியுடன் ஒன்றுபட்டுச் சேர்த்துத் தீமையற்ற நிலையாக வளரும் நிலைக்கு வர வேண்டும்.

நாம் தனித்த சரீரங்களாக இருந்தாலும்

1.சகோதர உணர்வுடன் வாழ்ந்திடும் உணர்வாக நாம் இடும் மூச்சலைகள் இங்கே படர்ந்து

2.அதன் வழிகளில் நம் பூமியான பரமாத்மாவும் பரிசுத்தப்படும் நிலை ஏற்படும்.

3.இந்தப் பரமாத்மாவில் இருந்து நுகர்ந்து எடுக்கும் அனைத்து உயிரான்மாக்களுக்கும் மெய்வழி பெறும் நிலை ஏற்படும்.

நாம் எந்தத் தாவர இனச்சத்தை நுகர்ந்து உணவாக உட்கொண்டு உடலாக ஆனோமோ... இந்த மனித உடலுக்குள் எண்ணிய உயர்ந்த எண்ணங்கள் சூரியனின் காந்த சக்தியால் கவரப்பட்டுப் படர்ந்து... அதாவது

1.நாம் எந்த உணர்வின் தன்மை உணவாக எடுத்துக் கொண்டோமோ அதை உணவாக்கிய நம் உணர்வின் எண்ண அலைகள் படர்ந்து

2.நாம் செல்லும் இடங்களில் பரவியுள்ள நஞ்சு கொண்ட உணர்வுகளைத் தாக்கி

3.நஞ்சு கொண்ட தாவர இனமே வளராது மனிதனை வீழ்த்திடும் நிலையைத் தடுக்கும்.

அதன் மூலம் தாவர இனங்களும் சத்தான நிலைகளில் வளர்ந்து அதை உணவாகப் புசிக்கும் மக்கள் அனைவரும் மெய் உணர்வினைப் பெறும் தகுதியாக உங்களுடைய மூச்சுகள் அமைய வேண்டும்.

ஆகவே… "மெய் உலகைப் படைக்கும் உணர்வாக" உங்களுக்குள் விளைந்து நீங்கள் இடும் மூச்சலைகள் உலகில் உள்ள தீமைகளை நீக்கிடும் சக்தியாக மலர வேண்டும்.

எல்லாம் வல்ல குருநாதர் அருள் வழியில் அந்த மெய் ஞானியின் அருள் வட்டத்திற்குள் நம் எண்ணங்கள் சென்று அதன் வழிகளிலே நல் வினைகளைச் சேர்த்து அது வினைக்கு நாயகனாக ஆகி

1.அந்த மெய் ஞானியின் அருள் வட்டத்தில் நாம் அனைவரும் இணைந்து

2.என்றும் நிலையான "பெருவீடு பெருநிலை" என்ற நிலையடைந்து மங்காத ஒளிச்சரீரத்தைப் பெறுவோம்.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எமக்கு உணர்த்தியருளிய அருள் வழியை நீங்களும் பெற வேண்டுமென்ற இந்த ஆசையில்தான் இதை உணர்த்துகின்றோம்.

நீங்கள் எண்ணும் பொழுதெல்லாம் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி உங்களுக்குக் கிடைத்து… உங்களை அறியாது புகுந்த தீமைகளை நீக்கி நல்லுணர்வின் தன்மையாக நீங்கள் வளர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

1.நமது குருநாதர் வழியில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.

2.மெய் உலகைப் படைப்போம்…!




# “பத்து மைல் சுற்றளவிற்கு…” துருவ நட்சத்திரத்தின் சக்தியை ஒவ்வொருவரும் பரவச் செய்ய முடியும்

விஷத்தன்மைகள் பரவி புவியின் காற்று மண்டலத்தில் கலக்கப்படும் பொழுது அது நமது சுவாசத்திலும் கலந்து உடலுக்குள் செல்வதால்… உயிரின் இயக்கத்தால் நமது சுவாசம் பலவீமடைகின்றது.

ஒரு விஷத்தை நாம் உட்கொண்டால் நமது உடல் எப்படிப் பலவீனமடைகின்றதோ அதைப் போன்ற உணர்வுகளை நமக்குள் தோற்றுவிக்கின்றது.

இது இயற்கையின் செயல்களில் ஒன்று..

ஆனால்...

1.விண்ணில் வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் துருவ நட்சத்திரம் சப்தரிஷி மண்டலங்களாக உள்ளவர்கள்

2.இத்தகைய நஞ்சுகளை அடக்கி ஒளியின் சுடராக அதை மாற்றிக் கொண்டே உள்ளார்கள்.

தியான வழியில் உள்ளவர்கள் அனைவரும் அடிக்கடி துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைக் கவருவதனால் அவர்களை இந்த விஷத் தன்மைகள் பாதிப்பதில்லை.

ஆகவே... நம் குருநாதர் காட்டிய அருள் வழியில் "நாம் அனைவருமே ஒருங்கிணைந்து..." அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஆற்றலை நமக்குள் பெருக்குவது நல்லது.

ஏனென்றால்

1.ஏற்கனவே நமக்குள் பதிவாகி இருக்கும் இருண்ட உணர்வுகளைக் கரைப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

2.நாம் விடும் மூச்சலைகளால் இந்தப் பூமியில் படர்ந்துள்ள விஷத்தன்மைகள் முறியடிக்கப்படுகின்றன.

இந்தப் பூமியில் மனிதர்கள் சங்கடத்தாலும் வேதனையாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள உணர்வலைகள் பரவிப் படர்ந்துள்ளன.

நாம் கூட்டமைப்பாக இருந்து நல்லுணர்வின் அலைகளை வலுவாக வெளிப்படுத்தினோம் என்றால் நமது மூச்சலைகள் காற்று மண்டலத்தில் சிறுகச் சிறுகப் பெருகுகின்றது.

ஒரு முறை செய்துவிட்டு அடுத்த முறை தொடராமல் விட்டு விட்டால் கடலில் பெருங்காயத்தைக் கரைத்தது போல் ஆகிவிடும்.

அதாவது கடலில் கரைத்த பெருங்காயத்தின் மணம் சிறிது நேரம் கரைத்த இடத்தில் இருக்கும். பிறகு அதனின் மணம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.

இதைப் போன்று அல்லாது “நமது மூச்சலைகளைத் தொடர்ந்து வெளிப்படுத்தி…” இந்தக் காற்று மண்டலத்தில் மகரிஷிகளின் அருளாற்றல் மிக்க சக்தியைப் பெருகச் செய்வதன் மூலம் இதனின் வலு அதிகமாகின்றது. இதனால் புறத்தில் பரவிக் கொண்டிருக்கும் நஞ்சின் வலுவினை இழக்கச் செய்கின்றோம்.

1.நாம் அனைவரும் கூட்டுத் தியானத்தின் மூலம் துருவ நட்சத்திரத்தின் சக்தியை இழுத்துக் கவர்ந்து

2.மூச்சலைகளாக நாம் வெளிப்படுத்தும் பொழுது அந்த அலைகள்

3.நமது காற்று மண்டலத்தில் குறைந்த பட்சம் “10 மைல்” சுற்றளவிற்கு மேலேயும் அகலமாகவும் பரவுகின்றது.

4.அந்த மூச்சலைகள் காற்று மண்டலத்தில் உள்ள நச்சுத் தன்மையினைக் குறைப்பதற்கு உதவும்.

ஏனென்றால் ஒரு நூலால் கனமான பொருளைத் தூக்க முடியாது. பல நூலை ஒன்றாகச் சேர்த்துக் கயிறாகத் திரித்து ஒரு கனமான பொருளைத் தூக்குவது போன்று

1.நம்முடைய எண்ணங்கள் அனைத்தையும் துருவ நட்சத்திரத்துடன் இணைத்து

2.அதனின் உணர்வினை நமக்குள் சுவாசித்து மூச்சலைகளாக நாம் வெளிப்படுத்தும் பொழுது அது இந்தக் காற்று மண்டலத்தில் பரவும்.

சூரியனுடைய கதிரியக்கங்களில் அதிகமாக நச்சுத் தன்மை தாங்கியிருந்தாலும் நாம் வெளியிடும் மூச்சலைகள்

1.அந்த நச்சுத் தன்மையை முறியடிக்கும் உணர்வலைகளாக “10 மைல்” அளவுக்காவது இது பரவும்.

2.அப்போது இந்த “10 மைல்” சுற்றளவில் உள்ளவர்களுக்குத் தீங்குகள் இல்லாத நிலைகளும்

3.அவர்கள் சுவாசத்தில் நல்ல தன்மையினைப் பெறும் நிலையும் ஏற்படுகின்றன… நம்மிடத்திலும் இந்த நிலையைப் பெறுகின்றோம்.

ஆகவே நாம் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகளை நம் உயிர் வழி கவர்ந்து உடலுக்குள் பரவச் செய்து நம்

உடலை உருவாக்கிய அணுக்கள் அனைத்திற்கும் அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகளை உணவாகக் கொடுப்போம்.

அவ்வாறு அந்தச் சக்தி வாய்ந்த உணர்வின் ஒளி அலைகளை மூச்சலைகளை நாம் வாழும் ஊர் முழுவதும் படரச் செய்வோம்.

1.நம் ஊர் மக்கள் அனைவரையும் அவர்கள் வாழ்க்கையில் எல்லா நலமும் வளமும் பெறச் செய்து

2.இனி வரும் எல்லாத் தீமைகளில் இருந்து விடுபடச் செய்து மகிழ்ந்து வாழச் செய்து

3.அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் அனைவரையும் நாம் இணைந்து வாழச் செய்வோம்.

எல்லா மகரிஷிகளின் அருள் சக்தியும் நம் அனைவருக்கும் உறுதுணையாக இருக்கும்.

ஓம் ஈஸ்வரா குருதேவா...!




## நாம் அனைவரும் “ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்…”

நமது பூமியே நமக்குத் தாய். நாம் மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுது அதனைக் காணும் தாய் மனமும் மகிழ்ச்சி அடைகின்றது. அது போன்று நாம் மகிழ்ச்சியடையும் பொழுது வெளிப்படும் மூச்சலைகள் நமது தாய் பூமியில் படர்கின்றது.

1.இந்த மகிழ்ச்சியான உணர்வுகள் பரவும் பொழுது நமது தாய் நாடு மகிழ்ந்திருக்கும்.

2.இதில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் மகிழ்ச்சியின் உணர்வுகளைப் பெறுவர்.

பூமியில் ஒரு வெடிகுண்டை வீசினால் அதனின் நச்சுத் தன்மை காற்றில் பரவி அதனைச் சுவாசிக்க நேர்பவர்கள் மடிகின்றனர். ஆனால் மகிழ்ச்சியான உணர்வுகள் காற்றில் பரவும் பொழுது அதனை நுகர்பவர்கள் மகிழும் நிலை வருகின்றது.

நமது பூமியே நமக்குத் தாய் என்கின்ற பொழுது அந்தத் தாய்க்கு நாம் சேவை செய்வது எவ்வாறு இருக்க வேண்டும்...? என்ற நிலையில் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

இந்தப் பூமியில் பிறந்த நாம்... "தாயின் பிள்ளைகள்..." என்று ஒருங்கிணைந்து தாயுடன் நாம் எவ்வாறு அரவணைத்துச் செல்கிறோமோ... தாய் எவ்வாறு நம்மை அரவணைத்து வாழ்த்துகின்றதோ... இது போன்று தாயுடன் அணுகிய நிலைகள் கொண்டு "நாம் அனைவரும் சகோதரர்..." என்றும் இன பேதமின்றி மத பேதமின்றி மொழி பேதமின்றி மன பேதமின்றி நாம் வாழ்நிடுவதே நலம்.

1.நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று எண்ண வேண்டும்.

2.இந்த எண்ணம் நம் பூமியைக் காக்கும்.

பூமித்தாயைக் காப்பது போன்று நம்மை ஈன்ற தாயும் மகிழ்ந்திடும் நிலையாக நாம் செயலாற்றிட வேண்டும்.

நமது தாய் தந்தையர் எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் நம்மிடத்தில் அன்பைக் காட்டி நல்லறிவை ஊட்டி நம்மை வளர்த்தனர். உணவும் உடையும் கொடுத்துக் கல்விக்கு வேண்டிய வசதிகளும் நமக்குச் செய்து கொடுத்தனர்.

ஆகவே நாம் நம் தாய் தந்தையை மகிழ்ந்திடச் செய்யும் நிலை பெற வேண்டும்.

1.தீய உணர்வுகளை அடக்க வேண்டுமென்றால் தாயின் பேரன்பைப் பெற வேண்டும்.


2.தாயின் பேரன்பைப் பெற்றால் மகரிஷிகளின் அருள் சக்தியை எளிதில் பெற முடியும்.

அதைப் பெற்று உங்கள் வாழ்க்கையில் அறியாது சேர்ந்த தீய உணர்வுகளை அடக்கி மெய் ஞானிகளின் உணர்வை உங்களில் வளர்த்து அன்னை தந்தையைப் பேரின்பப் பெருநிலை பெறச் செய்ய வேண்டும்.

அன்னை தந்தை அவர்கள் பெறுகின்ற மகிழ்ச்சியினால் வெளிப்படும் மூச்சலைகள் இந்தப் பூமியில் படர்கின்றன.

1.நாம் அனைவரும் மகிழ்ந்திடும் உணர்வை வெளிப்படுத்தினால்

2.தாய் பூமியும் மகிழ்ந்திடும் நிலை உருவாகும்.




# வேகா நிலை

நிறையப் பேர் சொல்வார்கள். நாங்கள் சாகாக் கலையைக் கற்றுக் கொண்டிருக்கின்றோம். உங்களுக்கு சாகாக் கலை தெரியுமா…? என்று எம்மிடமே கேட்டார்கள்.

போகர் சொன்னாராம் சாகாக் கலையைப்பற்றி…! சில பேர் காயகல்பத்தைப் போட்டுச் சாப்பிட்டு அதையெல்லாம் நான் வைத்திய ரீதியில் சாகாக் கலையைக் கற்று இருக்கின்றேன். ஆகையால்

1.அந்த மருந்தெல்லாம் போட்டு மந்திரங்களைச் சொல்லி

2.போகர் காட்டிய வழியில் நான் சாகாக்கலை கற்றிருக்கின்றேன்.

உங்களுக்கு என்ன தெரியும்…? என்றார்கள்.

இவ்வாறு நான் சாகமாட்டேன் என்று சொன்னவர் மருந்திலே எதிர்நிலை ஆகிவிட்டால் "என்னமோ எதிலோ குறையாகி விட்டது,.. எனக்கு இப்படி வந்து விட்டது…!" என்பார்கள். இது சாகாக் கலை.

யார் இதை உணர்த்தினாரோ அவர் இறந்த பிற்பாடு இன்னொரு உடலில் பிடித்துக் கொண்டு இதே ஆசையில் இருப்பார். இதே உணர்வை எண்ணி அந்த மந்திரம் எல்லாம் கற்றுக் கொண்டு அடுத்தவரும்` போவார்.

அங்கு போனவுடன் சாகாக் கலையில் அவரும் இதே கதியாக அதைச் செய்தேன்… இப்படியாகி விட்டதே…! என்று பைத்தியம் பிடித்த மாதிரி ஆகி… இரண்டு உணர்வும் சேர்ந்தவுடனே இருக்கின்றவனை எல்லாம் பைத்தியமாக்கி விடும்.

அவர்களிடம் மருந்து வாங்கிச் சாப்பிடுபவர்களெல்லாம் கடைசியில் என்ன ஆவார்கள்…?

இதைக் கண்டுபிடித்தேன் என்று கடைசியில்

1.நெகடிவ் பாசிட்டிவ் என்ற நிலையில் மருந்து சாப்பிடுபவர்களையும் சாகாக் கலையாக

2.நீயும் வாயேன் என்று இழுத்துக் கொண்டு போகும்… இது சாகாக் கலை.

யாம் இப்பொழுது உபதேசிப்பது "விஜய தசமி…!" பத்தாவது நிலை.. அடுத்து ஒளியாகி விட்டால் பிறவி இல்லை. இது வேகாக்கலை…!

ஒரு மனிதன் எவ்வளவு முழுமையாக இருக்கட்டும். தீயில் குதித்து விட்டால் என்ன ஆகின்றது…? சரீரம் கருகுகிறது… ஆனால் உயிர் அழிகிறதா…? இல்லை. உயிர் வேகா நிலை பெற்றது.

அணு குண்டு போட்டுக் கூட வெடிக்கச் செய்கின்றான். ஒரு அணுவின் ஆற்றல் கதிரியக்கம்.

பாறைக்குள்ளிருக்கும் கதிரியக்கத்தினால்தான் தன் சக்தி அதாவது… தன் இனமான சத்து எதனுடன் கலந்து இருக்கின்றதோ அந்த உணர்வைத் தனக்குள் எடுத்து அது பாறையாக விளைகின்றது.

அதற்குள் அதன் இயக்கத்தின் வலுக்கொண்டு… அதனுடன் எது விளைந்து உருவானதோ அதே கதிரியக்கச் சக்தியால்தான் இரும்பு உலோகமும் உருவாகின்றது.

இதுவே நட்சத்திரங்களில் இருந்து வரக்கூடிய மற்ற பொருட்களுடன் கலந்து… மற்ற பொருள் உருவாக்கப்படும் பொழுது அந்த அணுவின் தன்மையைப் பிளந்து… அந்தக் கதிரியக்கத்தைத் தனக்குள் எடுத்துக் கொண்டவன் விஞ்ஞானி.

அந்தக் கதிரியக்கத்தை எடுத்துச் சேமித்து மீண்டும் அணுகுண்டாக வெடிக்கச் செய்யப்படும் பொழுது சூரியனின் காந்த சக்தி கவர்ந்து தன் இனமான நிலைகள் எதுவோ அதிலெல்லாம் மோதும்.

அது மோதியபின் புயலைப் போன்று தான் எதனை உருவாக்கியதோ அதனுள் இருக்கும் உணர்வைக் கரியாக்கிவிட்டுத் தன் கதிரியக்கச் சக்தியுடன் இணைந்து சத்தை ஒளியாக எடுத்துக் கொள்ளும். ஆக இது கதிரியக்கச் சக்தி.

1.விஞ்ஞானிகள் அணுவைப் பிளந்து அணுவின் தன்மை கொண்டு வந்தாலும்
2.அதைப் போலத்தான் மெய்ஞானிகள் உணர்வுக்குள் இருக்கும் அணுவைப் பிளந்துவிட்டு ஒளியாக மாற்றி
3.எத்தகைய உணர்வு வந்தாலும் அதைப் பிளந்து உயிருடன் ஒன்றிய ஒளியாக நிற்பது
4.அதுவே "வேகாக் கலை…!" - வேகா நிலை.

இப்பொழுது தீயிலே ஒரு மனிதன் இறந்து விட்டால் தீயிலே கருகி விட்டாலும் அணுகுண்டு ஒன்றை வெடிக்கச் செய்து அதனின் உணர்வு தசைகளைக் கருகச் செய்தாலும் அந்த உடலில் இருக்கும் உயிரை ஒன்றும் செய்ய முடியாது. "உயிர்" வேகாக் கலை பெற்றது.

அணுவைப் பிளந்து அதனை வெடிக்கச் செய்யும் பொழுது அது தன் இனத்தைப் பெருக்குவது போல அந்த மெய் ஞானி தன் உணர்வினை ஒளியாக மாற்றி

1.உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு வேகாக் கலையாக

2.எத்தகைய நஞ்சுகள் வந்தாலும் அதனைப் பிளந்து அதனை ஒளியாக மாற்றி

3.என்றும் பதினாறு என்ற நிலையில் (வேகாநிலை அடைந்து) சப்தரிஷி மண்டலமாக வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளார்கள்.

அணு குண்டை வெடித்தபின் எந்த உலோகமாக இருந்தாலும் அதைப் பிளக்கச் செய்து தன் இனத்தின் தன்மையை அது வளர்த்துக் கொள்கிறது.

இதைப் போலத்தான் அந்த மெய் ஞானிகள் தன் உணர்வின் ஆற்றலை உணர்வுக்குள் இருக்கும் நஞ்சினைப் பிளந்து அணுவின் தன்மையை ஒளியாக மாற்றியவர்கள்.

1.எத்தகைய அணுகுண்டும் அவர்களை அசைக்காது

2.எத்தகைய நஞ்சு கொண்ட நிலைகள் வந்தாலும்... தீயில் இட்டாலும் அவர்களைப் பாதிக்காது.

அவ்வாறு ஒளிச் சரீரமாக என்றும் நிலைத்து இருக்கும் அவர்கள் துணை கொண்டு நாம் அனைவரும் அந்த வேகாக்கலை என்ற உணர்வின் சக்தியைப் பெற நினைவு கூறும் நன்னாள்தான் விஜயதசமி... பத்தாவது நிலை பெறுவதை நினைவுபடுத்தும் நன்னாள்.

ஒவ்வொருவரும் இந்த மனித உடலில் இருந்துதான் பத்தாவது நிலை அடைய முடியும்.

மாமகரிஷி ஈஸ்வரப்பட்டாய குருதேவர் எமக்கு உபதேசித்து அருளியதை யாம் உங்களுக்கும் உபதேசிக்கின்றோம். இதைக் கேட்டறிந்த அனைவரும் கூட்டுத் தியானங்கள் இருந்து இந்த துருவ மகரிஷியின் அருள் சக்தியைப் பெறுங்கள்.

அனைவரும் உயிருடன் ஒன்றி வேகா நிலை பெறுங்கள்...!




# போகாப்புனல்

நாம் எண்ணிய எண்ணங்கள் கூர்மையாக விண்ணை நோக்கி ஏகி அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை உடலுக்குள் நாம் அடிக்கடி சேர்க்கப்படும் பொழுது அது நன்கு வலுப்பெறுகின்றது.

இவ்வாறு நமக்குள் வலுப்பெறச் செய்வதைத்தான் விண்ணை நோக்கி ஏகுவதைக் கூர்மை என்றும் “கூர்மை அவதாரம்… வராக அவதாரம்…” என்பது.

அந்த வலுப்பெற்ற சக்தியின் துணை கொண்டு அந்த ஞானிகள் எவ்வாறு ஒளிச் சரீரம் பெற்றார்களோ அதே போல நமக்குள் வலுப்பெறச் செய்து வராக அவதாரமாக நாம் எதைக் கூர்மையாக எண்ணி அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று எண்ணுகின்றோமோ அதன் நிலையாக நாம் கல்கியின் பத்தாவது அவதாரமாக ஒளிச்சரீரம் பெற முடியும்.

இதை நமது வாழ்க்கையில் கடைப்பிடித்து விண் சென்ற அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் பருகினால்தான் விண் செல்ல முடியும்.

இல்லையென்றால்

1.இன்று நாம் நமது வாழ்க்கையில் பக்தி மார்க்கங்களில் எண்ணியபடி

2.இந்தத் தெய்வம் செய்யும் அந்தத் தெய்வம் செய்யும் இந்த மனிதர் செய்வார் அந்தச் சாமியார் செய்வார் என்ற நிலையை

3.நம் எண்ணத்தில் வளர்த்துக் கொண்டால் உடலுக்குள் இது சாகாகக் கலையாக இந்தப் பூமியிலேதான் நாம் சுழல முடியும்.

ஆனால் வேகாக்கலை என்றும் “போகாப்புனல்…” என்ற நிலையை அடைய வேண்டுமென்று வள்ளலார் பாடல்களிலே பாடியுள்ளார்.

1.அந்த மகரிஷிகள் பெற்ற உணர்வினை நமக்குள் செலுத்தினால் “வேகாக்கலை” அடைந்து

2.இனிப் பிறவியில்லா “போகாப்புனல்…” அதாவது இன்னொரு பிறவியில் நாம் பிறக்காத நிலையை அடைய முடியும்.

“ஓ…ம் ஈஸ்வரா…” என்று நம் உயிரைப் புருவ மத்தியில் எண்ணி விண்ணிலே நினைவைச் செலுத்தி “துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும்” என்று ஏங்கி அதை உயிர் வழி கவர்ந்து அவ்வாறு கவர்ந்த உணர்வுகளை நம் உடல் முழுவதற்கும் செலுத்தும் பொழுது இதற்கு “ஆத்ம சுத்தி” என்று பெயர். அந்த எல்லா மகரிஷிகளின் அருள் சக்தியை நம் உடலுக்குள் சேர்ப்பிக்கும் நிலை.

உங்கள் வாழ்க்கையில் துயரங்களோ வேதனையோ சலிப்போ சஞ்சலமோ சங்கடமோ வெறுப்போ பயமோ ஆத்திரமோ அவசரமோ இதைப் போன்ற நிலைகள் ஏற்படும் பொழுதெல்லாம் நம் குருநாதர் காட்டிய அருள் வழிப்படி முதலில் சொன்ன மாதிரி விண்ணை நோக்கி ஏகி அந்த மகரிஷிகளின் அருள் சக்திகளைப் பெற வேண்டும் என்ற ஏக்கத்துடன் நம் உடலில் உள்ள ஒவ்வொரு குணங்களிலும் உணர்வுகளிலும் அந்த மகரிஷிகளின் அருள் சக்திகளை நாம் அடிக்கடி சேர்த்து வரவேண்டும்.

அப்படி அடிக்கடி சேர்த்து வந்தோமென்றால்

1.வாடிய பயிருக்குள் உரம் சேர்த்தால் அது எவ்வாறு காற்றிலிருந்து தன் சக்தியைச் சேர்த்து மணி முத்துக்களை விளையச் செய்கின்றதோ

2.அதைப் போன்று ஒவ்வொரு நிமிடமும் நமக்குள் அறியாது சேரும் தீமைகள் அனைத்தையும் நீக்கி

3.மகரிஷிகளின் அருள் சக்திகளை எண்ணத்தால் எடுத்துச் சேர்த்து ஒளியான அணுக்களாக நமக்குள் வளர்த்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு நீங்கள் அந்த நல்ல எண்ணங்ககளுக்கு மகரிஷிகளின் அருள் சக்திகளை உரமாகச் சேர்த்தீர்கள் என்றால் அது வலுப் பெற்று "ஒளியின் முத்தாக உங்கள் உணர்வுகள் விளைந்து..." உயிருடன் ஒன்றிய ஒளிச் சரீரமாகப் "பெருவீடு பெருநிலை" என்ற நிலையடைவீர்கள். கல்கி அவதாரமான பத்தாவது நிலையை அடைவது திண்ணம்.

"வேகாக்கலை போகாப்புனல்..." என்று வள்ளலார் பாடியது போல நீங்கள் அனைவரும் அந்த நிலை அடைய முடியும். உங்களை நீங்கள் நம்ப வேண்டும்.

இதைக் கேட்டுணர்ந்தோர் அனைவருமே உங்களுக்குள் எத்தகைய குறைகள் நேரினும் இதற்கு முன் உங்கள் உடலிலே வளர்த்துக் கொண்ட கடும் நோயோ மனக்கவலையோ மன வேதனையோ இதைப் போன்ற நிலைகளிலிருப்போர் ஆத்ம சுத்தி செய்ய வேண்டும்.

அந்த மகரிஷிகளின் அருள் சக்தி எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும். "எங்கள் உடலில் உள்ள அனைத்து உயிரணுக்களிலும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர வேண்டும்" என்ற இந்த உரத்தினை நீங்கள் செலுத்துங்கள்.

இது வலுப் பெற்றதாகி இதைப் போல உங்கள் வீட்டிலும் நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். அந்த அருள் ஒளியின் உணர்வுகள் உங்களுக்குள்

விளைய உங்கள் வாழ்க்கையில் உங்களை அறியாது சேர்ந்த இருள்கள் அனைத்தும் உங்களை விட்டு விலகிவிடும்.

நீங்கள் மெய்ப் பொருள் கண்டுணர்ந்து உங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தும் வலுவான எண்ணங்கள் உங்களுக்குள் தோன்றி உங்கள் எண்ணமே நற்செயலாகச் செயல்படும் நிலையும் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும் நிலையாக அடைய முடியும்.

அந்த நிலையை உலக மக்கள் அனைவரையும் அடையச் செய்வதற்குத்தான் ஞாபகப்படுத்துகின்றோம்.

1.நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் காட்டிய அருள் வழியில்
2.அவர் இத்தகைய நிலைகளை உருவாக்கும்படி எமக்கிட்ட அந்த ஆணைப்படித்தான் இதைச் செய்திருக்கின்றோம்.
3.அவர் எமக்கு உபதேசித்த அருள் வழிப்படித்தான் உங்களுக்குள் உபதேசிக்கின்றோம்.

கூட்டமைப்பாக இருந்து கூட்டுத் தியானங்கள் செய்யும் பொழுது அதன் வழியாகத்தான் அனைத்து மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெறுகின்றீர்கள்.

ஆகையினால்... எல்லா மகரிஷிகளின் அருள் சக்தி உங்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக யாம் சதா தவம் இருந்து கொண்டிருக்கின்றோம்.




# தாய் தந்தையரை விண் செலுத்திய பின் தான் விண்ணின் ஆற்றலைப் பெற முடிந்தது

யாம் குருநாதர் காண்பித்த அருள் வழி கொண்டு பல ஊர்களுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த சமயம் எமது தாய் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருந்து கொண்டிருந்தார். குருநாதர் அதை எமக்கு உணர்த்தினார்.

1.உனது அம்மாவைப் பழைய நிலைகளுக்குச் செல்லும்படி விட்டுவிடாதே...!

2.அவர்களை முதலில் விண் செலுத்த வேண்டும்.

3.அதன் பிறகு தான் நீ விண்ணுக்குப் போக முடியும் என்று நினைவுபடுத்தினார்.

ஆகையால் எமது தாயைச் சந்திக்கச் சென்றோம். அங்கு அவர்களைப் பார்க்கும் பொழுது அவர்களால் சாப்பிட முடியவில்லை. கண் பார்வை முழுவதும் மங்கி விட்டது, உடல் வீங்கியிருந்தது, எழுந்திருப்பதற்கும் மிகவும் சிரமப்பட்டார்கள்.

யாம் அது சமயம் சாமியம்மா அவர்களையும் உடன் அழைத்துச் சென்றிருந்தோம். ஆகையால் எமது தாய் சாமியம்மாவை வீரம்மா... என்று பெயர் சொல்லி அழைத்து "ஒரு முட்டையை எடுத்து வேக வைத்து இரண்டு மிளகு சிறிது உப்பு வைத்து என் நாக்கில் வை... வீரம்மா" என்றார்கள்.

ஏனென்றால் எமது தாய் முட்டை கோழிக்கறி போன்றவைகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். யாமும் முன்பு முட்டை கோழி என்றெல்லாம் சாப்பிட்டோம்.

எமது தாயால் அந்த இறுதிக் கட்டத்தில் சாப்பிடவே முடியாது. ஆனால் வேக வைத்த கோழி முட்டையில் இரண்டு மிளகும் சிறிது உப்பும் வைத்துக் கொண்டுவா என்றால்

1.எமது தாயின் நினைவு எங்கிருக்கிறது...?

2.கோழியின் மேல்தான் இருக்கின்றது.

உனது அம்மா முட்டையும் கோழிக் கறியும் நிறையச் சாப்பிட்டிருப்பார்கள், அதனின் அணுக்கள் அவர்கள் உடலில் விளைந்திருக்கின்றது என்று குருநாதர் கூறினார்.

எமது தாய்க்கு உதவியாக சாமியம்மாவை இருக்கச் செய்துவிட்டு யாம் தாரமங்கலம் வந்து விட்டோம். ஏனென்றால், யாம் தாரமங்கலம் வருவதாக உரைத்து ஊர் முழுவதும் விளம்பரமும் செய்து விட்டார்கள்.

இதனால் தாரமங்கலத்திற்குத் தவிர்க்க முடியாமல் வர வேண்டியதாகி விட்டது. சேலத்தில் உள்ள அன்பர்களிடம் இந்தச் சூழ்நிலையைச் சொல்லிவிட்டுத் தாரமங்கலம் வந்து விட்டோம்.

சேலத்து அன்பர்கள் தாரமங்கலம் அன்பர்களிடம் ஞானகுரு அவர்களின் தாயின் உடல்நிலை மிகவும் குன்றியிருக்கிறது. ஆகவே ஏதேனும் தகவல் வந்தால் ஞானகுரு அவர்களை உடனே வழியனுப்பி வையுங்கள்" என்று கூறியிருந்தார்கள்.

தாரமங்கலத்தில் யாம் கூட்டத்தில் உபதேசம் கொடுத்து முடித்து தியானத்தில் இருந்து கொண்டிருந்தோம். அப்போது எமது தாயின் ஆன்மா வெளி வருகின்றது.

அது சமயம் எமது குருநாதர் சொன்னது போன்று எமது தாயை மனதில் நினைத்துத் தியானம் செய்தோம். அப்பொழுது அதனின் உணர்வின் நிலைகள் அங்கே தெரிந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ ஒரு பெரியம்மா போகின்றார்கள் என்றார்கள்.

இது தாரமங்கலத்தில் நடந்த சம்பவம்.

அம்மாவின் உருவம் அதனின் உடைகள் அதனின் உணர்வுகள் அங்கே தெரிந்தது. அப்பொழுது எமது தாயின் உயிரான்மாவைச் சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்தோம்.

1.எமது தாயின் உயிரான்மாவைச் சப்தரிஷி மண்டலத்துடன் இணைத்து உடல் பெறும் உணர்வுகளைக் கரைத்தபின் தான்
2.அந்த உணர்வின் சக்தியின் துணை கொண்டு சப்தரிஷி மண்டலங்களின் ஒளிகாந்த சக்தியினை யாம் பெற முடிந்தது.
3.அதற்கு முன்பு வரையிலும் எம்மால் பெற முடியவில்லை.
4.அது வரையிலும் எந்த ஒரு உயிரான்மாவையும் விண்ணிற்கு ஏற்ற முடியவில்லை.

அன்னை தந்தையின் உணர்வுகள் உனது உடலில் இருப்பதனால் அவர்களின் உயிரான்மாக்களை முதலில் விண்ணிற்கு ஏற்ற வேண்டும் என்பதை எமது குருநாதர் எமக்கு உரைத்தார்.

நான் உனக்குக் குருவாக இருக்கலாம்… அருள் ஞான உணர்வின் தன்மையை வளர்க்கலாம். இருந்தாலும்

1.உன் அன்னை தந்தையை நீ விண்ணிற்குச் செலுத்த வேண்டும்.

2.அதன் உணர்வின் தன்மை கொண்டு தான் என்னையும் அங்கே அழைத்துச் செல்ல முடியும் என்று குருநாதர் உபதேசித்தார்.

“குரு வாக்கு” தப்புவதில்லை. நாம் சாதாரண மனிதராக இருக்கின்றோம் என்று நினைக்கின்றோம். அது சமயம் தான் எமது தாயின் உயிரான்மாவை விண்ணிற்கு ஏற்றினோம்.

எமது தந்தையின் இறப்பின் பொழுது கூட யாம் அவர் அருகில் இல்லை. அப்போது கரூரில் கால் நடையாகச் சுற்றிக் கொண்டிருந்தோம். இராஜபாளையத்திலிருந்து கரூருக்குக் கால் நடையாக வந்திருந்தோம்.

அது சமயம் தான் எமது தந்தையின் உயிரான்மா உடலை விட்டுப் பிரிகின்றது. அப்போது அதனின் உணர்வுகள் காட்சிகளாகத் தெரிந்தது. அருகே ஒரு இடத்தில் போய் அமர்ந்தோம்.

அங்கே ஏற்கனவே அறிமுகமான ஒருவர் இருந்தார். அந்த நேரத்தில், அவருக்கும் காட்சி தெரிந்தது. “ஐயோ.. உங்கள் அப்பா போகிறாரே…!” என்றார்,

அருகிலிருந்த இன்னொருவர் “யாரோ ஒரு பெரியவர் போகிறார்…” என்று சொன்னார். யாம் அங்கேயே அமர்ந்து எமது தந்தையின் உயிரான்மாவை விண்ணிற்கு அனுப்பினோம்.

எம்மை ஈன்றெடுத்த தாய் தந்தைதான் எமக்கு கடவுள். எம்மை மனிதனாக உருவாக்கியவர்கள் அவர்கள் தான். குருநாதர் காண்பித்த அருள் வழியில் அவர்களை விண் செலுத்தினோம்.

1.முதலில் எமது தந்தை விண் சென்றார்… அடுத்து எமது தாயையும் விண் செலுத்தினோம்

2.இருவரையும் சேர்த்துச் சிவசக்தியின் உணர்வுகளாக அங்கே வளர்க்கச் செய்ய வேண்டும்.

3.அப்பொழுது தான் ஒளியின் சரீரமாக வளர்க்க முடியும் என்று குருநாதர் உணர்த்தினார்.

அதன் பிறகு

1.இதன் உணர்வின் ஒளி கொண்டு உன் உணர்வுடனே வருகின்றேன்... உணர்வின் ஒளியை உணர்த்துகின்றேன்.

2.என்னை விண்ணில் செலுத்திவிடு... உணர்வின் ஒளியாக இயக்கிவிடு...! என்று குரு சொன்னார்.

எம் அன்னை தந்தையர் விண் சென்றபின்தான் குருவின் உணர்வின் ஒலிகளை அவர் காண்பித்த அறநெறிகள் கொண்டு அவர்களையும் விண்ணிற்குச் செலுத்தினோம்.

உடலை விட்டு பிரிந்த ஆன்மாக்களை விண் செலுத்துவதற்காக விண்ணின் ஆற்றலைப் பெறுவதற்கு... கேதார்நாத் பத்ரிநாத் போன்ற இடங்களுக்கு எம்மைப் போகுமாறு செய்தார் குருநாதர்.

அங்கே கடும் தவம் இருந்த ஆன்மாக்கள் உணர்வின் தன்மை எடுத்துத் தம் உணர்வுக்குள் ஒளியாக மாற்றியது எப்படி...? என்பதை எம் அன்னை தந்தையை விண்ணிற்கு உயர்த்தியபின்தான் யாம் அந்தப் பேருண்மைகளை அறிய முடிந்தது.

ஆகவே இன்றைய நிலைகளில் “யாம் உங்களுக்கு உபதேசிப்பது அனைத்தும் பேருண்மையின் உணர்வுகள்...”

அருள் ஒளியின் உணர்வுகளை உங்களுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் முன்னோரின் உயிரான்மாக்கள் இன்னொரு உடலுக்குள் சென்றிருந்தாலும் பரவாயில்லை. நீங்களும் உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக அதிகாலை துருவ தியானத்திலும் பௌர்ணமி நாட்களிலும் தியானத்தில் அமர்ந்து

1.எங்களுடன் வாழ்ந்து வளர்ந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற எங்கள் குலத் தெய்வங்களான முன்னோரின் உயிரான்மாக்கள்

2.சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும்... உடல் பெறும் உணர்வுகள் கரைய வேண்டும்

3.அழியா ஒளிச் சரீரம் பெற வேண்டும்... பேரின்பப் பெரு வாழ்வு பெற வேண்டும் என்று எண்ணி உந்தித் தள்ளுங்கள்.


முன்னோர்கள் பாசத்துடன் உங்களைக் காத்தார்கள். ஆகவே அவர்களை விண் செலுத்தினால் அவர்களுடைய உணர்வின் தொடர், உங்களுக்குள்ளும் வரும்.

அவர்கள் விண்ணில் இருக்கப்படும் பொழுது உங்களுடைய எண்ணத்தை அங்கே செலுத்தினால் சப்தரிஷிகளின் அருள் சக்தியை... ஆறாவது அறிவின் துணை கொண்டு ஏழாவது நிலையை அடைந்தவர்களின் அருள் சக்தியை நீங்கள் எளிதில் பெற முடியும்.

1.உங்களை வளர்த்து வழிகாட்டிய உணர்வுகள் ஒளியாக நிலைக்கின்றது.

2.இதன் உணர்வின் தன்மை கொண்டு உங்கள் உணர்வுகளும் ஒளியாக மாறுகின்றது.

நீங்கள் இதனை எளிதில் பெற முடியும். உங்களை நம்புங்கள்...! இதன் வழி செயல்படும் அனைவருக்கும் எமது அருளாசிகள்.




# நாம் ரிஷியாக வேண்டும் என்றால் முதலில் “நம் முன்னோரை ரிஷியாக்க வேண்டும்”

நாம் சிறு வயதினராக இருக்கும் பொழுது நமது முன்னோர்கள் நாம் அனைத்துத் துறையிலும் சிறந்து இருக்க வேண்டும் என எண்ணி நமக்குப் பல வகைகளிலும் பாசத்தைக் காட்டி நல் அறிவினை ஊட்டி வளர்க்கின்றனர்.

ஆனால் நமது முன்னோர்கள் நமக்கு எடுத்துச் சொல்லும் உயர்ந்த சிறந்த அறிவுரைகளை ஒதுக்கிவிட்டு மாற்றுக் கருத்துக்களில் நாட்டம் செலுத்தி அதன் வழி செல்லும் பொழுது “நமது முன்னோர்கள் வேதனை அடைகின்றனர்…”

1.“நாம் சொன்னபடி செய்யவில்லை… தவறான பாதையில் செல்லுகின்றானே… உருப்படுவானா…?” என்று

2.கோபமும் வேதனையும் கலந்த சொற்கள் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன.

நாம் எல்லா நிலைகளிலும் உயர்ந்து சிறப்புற வேண்டும் என்ற அவர்களுடைய பாச உணர்வுகளும் நம்மிடத்தில் பதிவாகின்றன.

அதே சமயத்தில் அவர்கள் சொல்லை மதிக்காது செயல்பட்ட நிலைகளில் அவர்கள் வெளிப்படுத்திய கோப உணர்வுகளும் நம்மிடத்தில் பதிவாகின்றன.

ஒரு செடி எதிர்மறையான சூழ்நிலையைச் சந்திக்கின்ற பொழுது தன்னுடைய வளர்ச்சியை இழக்கின்றது.

அது போன்றே நமது முன்னோர்கள் நம் மீது பற்று பாசத்துடன் இருந்தாலும் அவர்களுடைய அறிவுரைகளை மறுத்து இயங்குகின்ற பொழுது அவர்கள் கோப உணர்வு கொண்டு நம்மைப் பார்க்கும் பொழுதெல்லாம் சலிப்பு வேதனை வெறுப்பு கோபம் ஆத்திரம் போன்ற உணர்வுகள் அவர்களிடம் உருவாகின்றன.

இவ்வாறு நம் மீது பாசமாக இருக்கும் அவர்களின் உடலில்

1.பாசம் கோபம் ஆத்திரம் என உணர்வுகள் மாறி மாறி இயங்கி

2.உடலில் சீரற்ற நிலைகளை உருவாக்கி நோய்களை அவர்களிடத்தில் உண்டாக்கி விடுகின்றது.

மேலும் நம்மைப் பார்க்கும் பொழுதெல்லாம் கலக்கம் வேதனை சஞ்சலம் என்ற உணர்வுகளை அவர்கள் சுவாசிக்க நேர்ந்து…

1.அவர்களுடைய சரீரத்தில் இத்தகைய எண்ண அலைகளே அதிகமாக விளைகின்றது.

2.நல்ல உணர்வுகள் விளைவதே இல்லை.

உதாரணமாக நல்ல வயலைப் பண்படுத்தி நல்ல விதைகளை ஊன்றினாலும் அதனிடையே களைகள் உருவாகி ஓங்கி வளர்வது போன்றுதான்

1.பாச உணர்வுகள் உள்ள இடத்தில் சிறிதளவு வெறுப்பிற்கு இடமளிக்கும் பொழுது

2.அங்கே வெறுப்பான உணர்வுகளே அதிகமாகிப் பாச உணர்வுகளை மங்கச் செய்துவிடுகின்றன.

இவ்வாறு நம் குடும்ப வாழ்க்கையில் வேதனையுறச் செய்யும் சந்தர்ப்பங்களை அறிந்து அவற்றை விலக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

1.அருள் ஞானிகளின் சக்தி நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா

2.எங்களை அறியாது சேர்ந்த இருள் நீங்க வேண்டும் ஈஸ்வரா

3.நாங்கள் பார்ப்பவரெல்லாம் நலம் பெற வேண்டும் ஈஸ்வரா என்று நாம் எண்ணி

4.இந்த உணர்வின் சக்தியை நம்மிடத்தில் வளர்க்க வேண்டும்.

மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் அன்னை தந்தை காட்டிய நல்வழி அனைத்தையும் நாங்கள் செயலாக்கி... அவர்கள் எண்ணிய நல் உணர்வுகள் எங்களுக்குள் விளைந்து... ஆக்கமான எண்ணங்கள் எங்களுக்குள் விளைந்து...

1.எங்கள் சொல்லிலும் செயலிலும் புனிதம் பெறும் தன்மையாகவும்

2.அவர்கள் காண்பித்த நல்வழியின் நிலைகள் எங்களுக்குள் ஓங்கி வளர வேண்டுமென நாம் தியானிக்க வேண்டும்.

எங்கள் குலதெய்வமான மூதாதையர்களின் உயிரான்மாக்கள் சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்து என்றும் நிலையான ஒளிச்சரீரம் பெற வேண்டும் என்றும் சப்தரிஷிகளின் அருள் சக்தி எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று நமது சரீரத்தில் உயிரில் இந்த உணர்வுகளைச் சேர்க்க வேண்டும்.

"நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகின்றாய்..." என்ற கீதையின் தத்துவப்படி நம் முன்னோர்கள் எதைப் பெற வேண்டும் என்று ஏங்குகின்றோமோ அதனை நாமும் பெறுகின்றோம்.

“நம்முடைய முன்னோர்கள் சப்தரிஷி மண்டலத்தின் ஒளிவட்டத்தில் கலந்து நிலையான ஒளிச்சரீரம் பெற வேண்டும்…” என்று உந்தித் தள்ளும் பொழுது

1.நமது முன்னோர்களும் ஒளிச்சரீரம் பெறுகின்றனர்.

2.அதனின் பயனாக நாமும் அடுத்து அங்கே செல்ல ஏதுவாகும்.

நம் உணர்வின் சக்தியை விண்ணை நோக்கிச் செலுத்தினோமானால்

1.நம் முன்னோர்களின் உயிரான்மாக்களை விண் செலுத்த உதவிய நம்முடைய நினைவுகள் துரித நிலையில் இயங்கி

2.மகா ஞானிகளின் உணர்வைத் துரித நிலையில் நாம் ஈர்க்கவும்

3.நம்மிடத்தில் வருகின்ற தீமைகளை அந்த விநாடியே அகற்றவும்

4.மெய்ஞானிகளின் உணர்வை நம்மிடத்தில் வளர்க்கவும்

5.அந்த உணர்வுகள் ஒளியின் சரீரமாக வளரவும் உதவி செய்கின்றன.

மேலும் ஒளி கண்டு இருள் விலகுவது போன்று… இருளுக்குள் இருக்கக்கூடிய பொருள் தெரிவது போன்று நமது வாழ்வில் “பொருளறிந்து செயல்படும் திறனைப் பெறுகின்றோம்…”

சப்தரிஷி என்பவர் யார்…?

ஆறாவது அறிவின் துணை கொண்டு தீயவுணர்வுகளை மாய்த்து நல் உணர்வுகளை வளர்க்கச் செய்யும் தன்மை வாய்ந்த ஏழாவது அறிவினைத் தன்னிடத்தில் பெற்றவர்களைச் சப்தரிஷி என்று நாம் அறிந்துணர வேண்டும்.

அத்தகைய தன்மை வாய்ந்த சப்தரிஷிகளின் சிறப்பை நம் முன்னோர்கள் பெற வேண்டும் என்று நாம் தியானிக்கும் பொழுது நாமும் அத்தகைய ரிஷியின் தன்மையைப் பெறுகின்றோம்.

சிறிது காலத்திற்காவது நமது முன்னோர்களை எண்ணித் தியானித்திடும் பொழுது

1.அவர்கள் சப்தரிஷித் தன்மை பெற்று விடுகின்றனர்.

2.அதைத் தொடர்ந்து நீங்களும் ரிஷித்தன்மையைப் பெறுகின்றீர்கள்.

3.நீங்கள் ரிஷியாக வேண்டும் என்றால் முதலில் “உங்கள் முன்னோரை ரிஷியாக்க வேண்டும்” என்பதை உணர வேண்டும்.

விஞ்ஞானி ஒரு இராக்கெட் மூலம் செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்புகின்றார். பின் அந்தச் செயற்கைக் கோளின் துணைக் கொண்டு விண்ணின் நிலையைப் பூமியில் பெறுகிறார்.

அது போன்று நாம் நம்முடன் வாழ்ந்து வளர்ந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற முன்னோர்களின் உயிரான்மாக்களை நமது எண்ணத்தின் வலுக்கொண்டு விண்ணிற்கு அனுப்பும் பொழுது அந்த ஆன்மாக்கள் பெறும் ஆற்றலை நாம் பெற முடியும்.

அதே சமயத்தில்…

1.நம்முடைய முன்னோர்களின் நினைவு நாட்களைக் கொண்டாடி விட்டோம்.

2.அவர்களுடைய உயிராத்மாக்களைச் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று தியானித்து விட்டோம்.

3.அதன் மூலம் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றி விட்டோம் என்று கருதுவோமேயானால்

4.அதன் பிறகு நாம் வளர்வதே இல்லை.

பதிலாக…

1.நம்மிடத்தில் முன்னோர்களின் உயிராத்மாக்களை விண் செலுத்திய நினைவுகளும்

2.அவர்கள் சப்தரிஷி மண்டலங்களுடன் இணைய வேண்டும் என்ற ஏக்கமும்

3.நம்மிடம் என்றுமே… இருந்து கொண்டே இருக்க வேண்டும்…!




# ஈரேழு லோகத்தையும் வென்றவன் விண் சென்றான்

அகஸ்தியர் தன் தாய் கருவிலேயே நஞ்சினை வென்றிடும் ஆற்றல் பெற்று அகண்ட அண்டத்தையும் தன்னுள் நுகர்ந்து ஒளியாக மாற்றித் துருவ நட்சத்திரமாக இன்றும் இருக்கின்றார். அதன் அறிவைத்தான் செவி வழி ஓதி உங்கள் நினைவினை அங்கே அழைத்துச் செல்வது.

துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை வரிசைப்படுத்தி

1.அதனுடன் சுழன்று உங்கள் உணர்வுகளைச் சேர்க்கப்படும் பொழுது

2.அகண்ட அண்டத்தில் வருவதையும் உங்கள் உணர்வுக்குள் அது பெறும் உணர்ச்சியின் நிலையை

3.அணுவாக மாற்றும் நிலையாக உருப்பெற்று விட்டால் தன்னிச்சையாக அது நுகரும் சக்தி பெறுகின்றது.

4.உங்களால் நினைத்த நேரத்தில் அகண்ட அண்டத்தினையும் அதன் செயலாக்கங்களையும் காண முடியும்.

5.அருள் ஞானியின் உணர்வைச் சேர்த்துப் பகைமை உணர்வு வராது "பேரின்ப உணர்வினை" உங்களுக்குள் உருவாக்க முடிகின்றது.

எமது அருள் குரு அருளால் கிடைத்தது. குரு அருள் பேரருளைக் கவர்ந்து அவர் உணர்வு என்னைப் பக்குவப்படுத்தியது போல் உங்களைப் பக்குவப்படுத்துகின்றேன்.

இதில் எவர் ஒருவர் தொடர்ந்து வருகின்றாரோ அவர் இவ்வாழ்க்கையைச் சீர்படுத்தி வாழவும்... அடுத்து என்றும் பிறவியில்லா நிலைகளை அடையவும் இது உதவுகின்றது.

1.குறுகிய காலமே இருக்கும் இந்த உடலுக்கு வலுவைச் சேர்ப்பதைக் காட்டிலும்

2.உயிருக்கு அருள் ஒளி என்ற வலுவை உருவாக்குதல் வேண்டும்.

இது தான் வாழ்வின் கடைசி எல்லை.

ஒளியின் உணர்வாக உருவாக்கப்பட்டது உயிர். ஆறாவது அறிவின் துணை கொண்டு "நம் அணுக்களை ஒளியின் உணர்வாக உருவாக்கக் கற்றுக் கொள்வதுதான்" பிரம்மாவைச் சிறை பிடித்தான் என்பது.

உயிர் நுகர்ந்ததை உருவாக்குகின்றது... அதே சமயத்தில்

1.அந்த உணர்வுகள் உடலுக்குள் அணுவாகும் பொழுது

2.உயிரைப் போன்றே ஆக்கப்படும் பொழுது நல்ல ஒளியின் உணர்வை உருவாக்குகின்றது.

3.இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தால் ஒளியின் தன்மை கூடுகின்றது.

சற்றுச் சிந்தனை செய்து பாருங்கள். வாழ்க்கையில் எல்லாவற்றையும் கடந்து இது தவறு இது கெட்டது என்று உணர்வினை நுகர்ந்து நுகர்ந்து இதனைக் கலந்து கலந்து இந்த உடலினை உருவாக்கியது உயிர்.

1.அவனே நம்மை உருவாக்கினான்... ஈசனாக இருந்து உள் நின்று இயக்கிக் கொண்டு உள்ளான்,

2.கடவுள் என்ற நிலையில் நாம் எதனை நுகர்ந்தோமோ அவை நம்முள் நின்று அதனின் துணை கொண்டு அங்கே இயக்குகின்றது.

3.அவனல்லாது உணர்வுகள் இயங்குவதில்லை... அவன் தான் உருவாக்குகின்றான்.

4.ஆகவே அமைதி கொண்டிருக்கும் நேரத்தில் உணர்வின் தன்மையை ஒளியாக்க வேண்டும்.

நம் குருநாதர் என்னை அகண்ட அண்டத்திற்கே அழைத்துச் சென்றார். அவர் காட்டிய அருளின் நினைவைப் பதித்து

1.உங்கள் கண்ணின் நினைவை என்னிடத்தில் செலுத்தினாலும் நீங்களும் அண்டத்தில் மிதக்கின்றீர்கள்.

2.அதனின் உணர்வை நினைவை கொள்ளும் பொழுது அதன் அருளை நீங்களும் பெற முடியும்.

அண்டத்திலுள்ளது இந்த பிண்டத்திலும் உண்டு. அகண்ட அண்டத்தைத் தெளிவு படுத்தியவன் அகஸ்தியன்.

அவன் துருவனாகி துருவ நட்சத்திரமானான். அகண்ட அண்டத்தில் வருவதை ஒளியாக மாற்றுகின்றான். அதன் உணர்வின் தன்மை இந்தப் பிண்டத்திற்குள் (நமக்குள்) சேர்க்கப்படும் பொழுது அகண்ட அண்டத்தில் வருவதையும் ஒளியாக மாற்றிடும் திறன் பெற முடியும்.

நீங்கள் சிறிதளவே இருப்பினும் இந்த உணர்வின் தன்மை உங்களுக்குள்ளும் பரவுகின்றது. இந்தப் பூமியிலும் பரவுகின்றது. அதன் உணர்வின் நினைவு கொண்டு கவருங்கள்.

சூரியனில் இருந்து வரக்கூடிய நிறங்கள் ஆறு... ஏழாவது ஒளி. இதைத்தான் சூரிய பகவான் வருகின்றான் என்று வேக ஓட்டத்தைக் காட்டி, ரதத்தைக் காட்டியது.

அந்த ஏழு கலர் ஓட்டத்தை நமக்குள் எடுத்தால் நம்மை அந்த உலகத்திற்கு இட்டுச் செல்லும். ஆகவே

1.மனிதனான ஆறாவது அறிவின் நிலைகள் வரும் போது ஏழாவது ஒளியின் நிலைகள் அடைதல் வேண்டும்.

2.இதுதான் "ஈரேழு லோகத்தை வென்றவன் விண் சென்றான்" என்பது.

3.அவன் தனி உலகமாக ஒளியின் உணர்வாக மாற்றுகின்றான். அவன் ஏகாந்த நிலைகள் பெறுகின்றான்.

சூரியனில் இருந்து வரக்கூடிய கலர்கள் ஆறு. ஒளி ஏழு. மனிதனின் அறிவு ஆறு. மற்றதைத் தெளிந்து உணர்ந்து ஒளியாக மாற்றுவது ஏழு.

காவியங்களில் ஈரேழு லோகத்தையும் தேடிப் பார்த்தேன் என்று சொல்கின்றனர். மனிதனுக்குள் உணர்வுக்குள் இந்த ஏழு லோகத்திற்குள் தேடி நாம் காணுதல் வேண்டும். மேலே ஏழு என்ற உணர்வுகள் மனிதனுக்குள் உண்டு. ஆக நமக்குள் தேடினால் உண்டு.

அகண்ட அண்டத்தின் நிலைகள் இந்தப் பிண்டத்தில் உண்டு. ஆகவே நாம் விண்ணின் ஒளியாக மாற்றும் உணர்வு பெற்று உயிர் என்ற நிலை பெற்று உணர்வின் ஏழாவது ஒளியாக மாற்றும் திறன் பெற்று இருப்பினும் இருள் சூழும் நிலைகளிலிருந்து மீள்தல் வேண்டும்.

ஒளியாக ஒன்றாக இருக்கின்றது. பல வர்ணங்கள் ஒளியின் நிலையை மறைத்திடும் பொழுது அந்த வர்ணத்தைத்தான் காட்டுகின்றது.

1.நமக்குள் எந்த குணத்தின் தன்மை வருகின்றதோ அந்த வர்ணத்தின் செயலாகத்தான்

2.இருள் சூழ்வதும் சிந்திப்பதும் சிந்தனையற்ற நிலைகளும் வருகின்றது.

3.ஆகவே பேரருள் என்ற உணர்வினை எடுத்து நமக்குள் பேரொளியாக மாற்ற வேண்டும்.

அந்த உணர்வின் தன்மையை உங்களில் உருவாக்கத்தான் இந்த நிலை.

யாரும் குற்றவாளியல்ல. குற்றத்தைச் செய்பவரும் அல்ல. சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வே நம்மை அந்த வழிக்கு அழைத்துச் செல்கின்றது. நுகர்ந்தது நமக்குள் விளையாது அருள் ஒளி என்ற உணர்வைக் கொண்டு இருளை நீக்கப் பழக வேண்டும்.

இதற்குத்தான்

1.அதிகாலை நேரத்தில் துருவ நட்சத்திரத்திலிருந்து வரும் உணர்வலைகளை நீங்கள் நுகர்ந்து

2.இருளை மாய்த்து ஒளி என்ற உணர்வைப் பெற வேண்டும் என்று தியான நிலைகளிலேயே உபதேசத்தைக் கொடுத்து

3.உங்களை அகண்ட அண்டத்திற்கே அழைத்துச் சென்றது.




# மெய் ஞானிகள் மனிதரைத் தேடி வந்ததன் நோக்கம் என்ன…?

அன்று மெய்ஞானிகள் விண்ணின் ஆற்றலைத் தனக்குள் பெற்றபின்

1.அந்த அலையின் தொடரைத் தன்னுடன் கூடிய மக்களின்பால் அந்த உயர்ந்த சக்தியை அங்கேயும் பதியச் செய்து

2.அவர்கள் உடலிலே ஆரோக்கிய நிலைகளை வரச்செய்து அதன்பால் அவர்களிடம் நல்ல எண்ணங்களை வெளியிட்டபின்

3.அந்த உணர்வின் சத்தின் துணை கொண்டு தன்னை வளர்த்துக் கொண்டார்கள்.

எனென்றால் தனக்குக் குழந்தைகள் இல்லையென்றாலும் இந்தப் பூமியிலே இருப்போருடன் இணைந்து பலருடைய எண்ணங்களிலும் விண்ணின் சக்தியைப் பாய்ச்சச் செய்தனர்.

காரணம்… கடந்த கால மகரிஷிகள் எல்லோருமே உடலை விட்டுச் செல்லும்போது அவர்கள் விண் செல்லுவதற்குத்தான் இவ்வாறு செய்தார்கள்.

போகரோ வான்மீகியோ வியாசரோ அகஸ்தியனோ அவர்களைப் போன்று எண்ணிலடங்காத மகரிஷிகள் எல்லோருமே

1.தமக்குள் பெற்ற ஆற்றலைச் சாதாரண மக்களின் மத்தியிலே தன் உணர்வின் சொல்லாலே அங்கே பாய்ச்சப்பட்டு

2.அவர் உடல்களில் துன்பத்தை ஊட்டிக் கொண்டிருக்கும் உணர்வுகளை மாற்றி

3.நல்ல சொல்களை அவர்களிடமிருந்து வெளிப்படச் செய்து

4.அவர்கள்பால் அந்த நல்ல எண்ணங்களை ஈர்த்துக் கொண்டார்கள்.

இப்போது யாம் உங்களுக்கு ஒரு நன்மையைச் செய்கிறோம் என்று எண்ணும்போது அந்த நன்மையின்பால் எம்மைப் பார்க்கின்றீர்கள். இவரால் நல்லது நடந்தது என்று நீங்கள் எண்ணும் எண்ண அலைகள் ஒன்று சேர்த்துக் கலக்கிறது.

1.உங்களது உணர்வின் எண்ணம் எமக்குள் பதிவாகின்றது.

2.எமது எண்ணம் உங்களுக்குள் நல்லதை உருவாக்குகின்றது.

அப்படி நல்லதை உண்டாக்கப்படும் போது அந்த உணர்வு கொண்டு யாம் இந்த உடலை விட்டுச் சென்றாலும் நீங்கள் எல்லோரும் எண்ணும்போது யாம் விண் செல்ல முடிகின்றது.

இப்படித்தான்

1.அன்றைய மெய் ஞானிகள் ஒளிச் சரீரம் பெற்று விண் சென்றார்கள்.

2.ஆகவே நாம் அனைவரும் அவர்கள் சென்ற வழியிலேயே விண் செல்வோம்.




# மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் விண் சென்ற வழி

துருவ மகரிஷி எவ்வாறு... எதன் வழியில் விண்ணுலகம் சென்றார்...? என்பதை "நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வரப்பட்டாய குருதேவர்..." அவருள் அறியும் ஆற்றல் பெற்றபின் அந்த வழியினை... "விண் செல்லும் மார்க்கங்களை..." எமக்கு உபதேசித்தார்.

அவர் உடலை விட்டுப் பிரிந்த பின்... நான் அவரை உற்றுப் பார்க்கப்படும்போது

1.சப்தரிஷி மண்டலத்துடன் அவர் இணையும் ஆற்றலும்

2.அவர் உடலிலிருந்து... இந்த உடல் பெற்ற நிலையை உடல் பெறா நிலைகள் கரைவதையும் காட்டுகின்றார்

இவர் தற்காலத்தில் விண் சென்றவர் தான். அதாவது 1970 என்று எண்ணுகின்றேன். ஆனால் சரியாக நினைவில் இல்லை.

1970ல் உடலை விட்டுச் சென்றபின் அவர் உயிரான்மா எவ்வாறு விண் செல்கிறது...? என்றும்

1.விண் செல்வதற்கு... அவரை விண் செலுத்துவதற்கு என்ன உபாயங்கள் செய்ய வேண்டும்...? என்றும்

2.அவரைப் பின் தொடர்ந்து செல்லும் நிலையினை... எனக்குள் எப்படிப் பெருக்க வேண்டும்...? என்றும்

3.அவர் காட்டிய அருள் வழிப்படித் தான் அதைச் செய்தது.

பின் சப்தரிஷி மண்டலங்களிலிருந்து சக்திகளைப் பெறும் தன்மையையும் எமக்கு உபதேசித்தருளினார்.

அன்று அகஸ்தியன் துருவனாகும் போது பெற்ற "விண்ணுலக ஆற்றல்கள்..." அவனிடமிருந்து வெளிப்பட்ட உணர்வுகள் இங்கே உண்டு.

அதை எப்படிப் பெற வேண்டும்...? என்று குருநாதர் கூறிய அந்த அருள் வழிப்படி அதை நுகர்ந்தறிந்து... எமக்குள் அது விளையச் செய்து... அதன் உணர்வின் எண்ண அலைகளை உங்களுக்குள்ளும் இப்பொழுது பதியச் செய்கின்றேன்.

உங்கள் செவிப்புலனறிவில் அது ஈர்க்கப்பட்டு... அதன் துணையால்

1.உங்களுக்கும் அந்த விண்ணுலக ஆற்றலைப் பெறும் தகுதியை ஏற்படுத்துவது தான் இந்த நிலை.

2.குருநாதர் விண் சென்ற உணர்வுகள் தான் இப்பொழுது உங்களுக்குள் நுகரும் இந்த ஆற்றல் அனைத்தும்...!




# "உயிரைப் போன்றே…" உணர்வுகளை எப்படி ஒளியாக்குவது…?

பாம்பினங்கள் தன் உணவிற்காக மற்றொன்றின் மீது விஷத்தினைப் பாய்ச்சி உணவாக எடுத்தாலும் மற்றதிலுள்ள விஷங்கள் இதனுடன் கலந்து அது பல வித வண்ணங்களாக உறையப்படும் பொழுது நாகரத்தினமாக மாறுகின்றது… அது கல் மயமாக மாறுகின்றது.

1.நமது உயிரின் துடிப்பு மின் மயமாக இருக்கின்றது
2.அதைப் போன்று நம் உடலில் உள்ள அணுக்கள் அனைத்தையும் "உயிரைப் போன்று மின் மயமாக்க வேண்டும்…"

எப்படித் தேனீக்கள் ஒன்றாகச் சேர்த்துத் தேனை உருவாக்கி ஒரு கூட்டினை அமைத்துக் கொள்கின்றதோ இதைப் போன்று நமது உயிரும் இந்த உடலில் வளர்த்துக் கொண்ட உணர்வுகள் தேனைப் போன்று

இணைந்து திடப் பொருளாகி விட்டால் அது கல்லாக மாறிவிடும்… வைரங்களாகிவிடும். கோள்களைப் போன்று பாறைகளாகிவிடும்.

மின் இயக்கத் துடிப்பாக அதன் உணர்வின் இயக்கம் வரும் பொழுது கோள்கள் தன் சுழற்சியில் நடு மையம் வெப்பமாகி அதன் உணர்வினை கவர்ந்து கொண்டு வருகின்றது.

ஆனால் உயிரணு தோன்றி நட்சத்திரமாக்கப்படும் பொழுது தேனீயைப் போன்று தன் உணர்வின் தன்மை ஒளியின் உணர்வுகளை ஒன்றாக எடுத்து ஒளிக்கதிர்களைப் பாய்ச்சிக் கொண்டே உள்ளது.

நாம் தேனை எடுத்து உணவாக உட்கொள்ளும் பொழுது எப்படி அது சுவை மிக்கதாக உள்ளதோ அதைப் போன்று துருவ நட்சத்திரத்தின் உணர்வினை நாம் நுகர்ந்து

1.நம் உடலில் உள்ள அணுக்களுக்கு அதை ஆகாரமாகச் சேர்த்து அதன் உணர்வினை வளர்ச்சி செய்யப்படும் பொழுது

2.இந்த உடலில் உள்ள விஷத்தை மாற்றி “இனிமை…” என்ற உணர்வை ஊட்டும்.

இந்த உணர்வினை வளர்த்துக் கொள்வதுதான் ஆறாவது அறிவின் தன்மை.

நாம் சந்தர்ப்பத்தால் நுகர்ந்தறிந்த உணர்வுகள்தான் பரிணாம வளர்ச்சிக்கே காரணமாக இருந்தது. ஆனால் ஆறாவது அறிவான பின் நாம் தீமைகளை நீக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கி நமக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் ஜீவ அணுக்களை உயிரணுக்களாக மாற்றி… உலக இருளை நீக்கி ஒளி என்ற உணர்வின் அறிவாக ஒருங்கிணைந்து இயக்கும் தன்மை பெற வேண்டும்.

இந்த உயிர் உணர்வின் அறிவாக இந்த உடலை இயக்குகின்றது. ஆனால் இந்த உடலிலே உயிரைப் போலவே ஒளியின் உடலாக மாற்றிச் சென்றவர்கள் மகரிஷிகள்.

1.இந்தப் பிரபஞ்சத்தில் சூரியனே அழிந்தாலும் சூரியனிலிருந்து வெளிப்படும் விஷத்தன்மையைக் கூட

2.ஒளியாக மாற்றிக் கொள்ளும் திறன் பெற்றவர்கள் தான் மகரிஷிகள்.

2000 சூரிய குடும்பத்துடன் இணைந்து வாழ்கின்றது நமது சூரியன். இதைப் போன்று இந்த 2000 சூரிய குடும்பங்களும் அகண்ட அண்டத்தில் மற்ற கோள்களுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்தே வாழ்கின்றது.

ஒன்றில்லையேல் ஒன்று இல்லை… ஒன்று என்றுமே தனித்து இருந்ததே இல்லை.

1.விஷம் தாக்கும் பொழுதுதான் வெப்பம் உருவாகின்றது

2.வெப்பம் உருவாகும் பொழுதுதான் ஈர்க்கும் சக்தியாக இயக்கச் சக்தியாக மாறுகின்றது.

யாம் உபதேசிப்பதை ஒவ்வொரு நொடியும் கூர்ந்து கவனிக்கும் பொழுது நீங்கள் நுகர்ந்த உணர்வுகள் உங்கள் உடல் உறுப்புகளிலுள்ள ஜீவ அணுக்களின் முகப்பில்… உயிரில் மோதுவது போன்று அந்த அணுக்களும் இந்த உணர்வினைப் பெறும் தகுதி பெறுகின்றது.

அப்படி எல்லா அணுக்களிலும் சக்தி பெறச் செய்வதற்குத்தான் இந்த உபதேசம்.

எனக்கு எப்படி குருநாதர்… என் நினைவினை விண்ணுக்கு அழைத்துச் சென்றாரோ…? அதைப் போன்று

1.உங்கள் உடல் உறுப்புகளை உருவாக்கிய அணுக்கள் அனைத்தும் அந்தத் துருவ நட்சத்திரத்துடன் தொடர்பு கொண்டு

2.அதை ஈர்க்கும் அந்த அருள் சக்தியைப் பெறச் செய்கிறோம்.

இதை எல்லாம் ஏன் முன்பே எங்களுக்குச் சொல்லவில்லை…? என்று கேட்பீர்கள்.

விதையைப் போட்டு முளைத்து… அது வளர வளர அதன் நிலை வேறு விதமாக இருக்கும். அது வளர்ந்த பின்பு அதனுடைய வளர்ச்சியில் வரும் பொழுது எந்த வித்தோ அதைப் போன்று… பின்னாடி தான் உருவாகின்றது.

முதலில் ஏன் சொல்லவில்லை…? என்று கேட்டால்

1.செடி ஓரளவிற்கு வளர்ந்தபின் உரம் போட்டால் தாங்கும்.

2.ஆனால் செடி சிறிதாக இருக்கும் பொழுது உரம் போட்டால் கருகிவிடும்.

3.விஷத்தை ஒளியாக மாற்றும் இந்த உணர்வுகள் சரியான பருவம் வரவில்லை என்றால்

4.நீங்கள் வளரும் பருவத்தை மாற்றிக் கருக்கிவிடும்... செயலற்றதாக்கி விடும்.

ஆகவே... குருநாதர் எமக்கு எந்தெந்தப் பருவத்தில் எதெனெதன் சந்தர்ப்பங்களில் எப்படிக் கொடுத்தாரோ அதைப் போன்று உங்களுக்குள் மனப்பக்குவம் பெறும் நிலையும்... அந்த வளர்ச்சிக்குத் தகுந்தவாறு இந்த உணர்வினை வெளிப்படுத்துவது.

மனப்பக்குவமான பின் இந்த உணர்வுகள் உங்களுக்குள் விளைந்தால் உங்களுடன் பழகும் நண்பர்களுக்கும் "உங்களில் விளைந்த உணர்வுகள்..." நன்மை பயக்கும் சக்தியாக மாறும்.


"இனி வருவோர்க்கு..." உங்கள் மூலமாக அவர்களுக்கும் கிடைக்கும். ஏனென்றால் வளர்ச்சி பெற்ற பருவம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு, அது விளைகின்றது என்பதனை நாம் அறிதல் வேண்டும்.

நாம் இவ்வளவு காலம் 15 - 20 வருட காலமாகச் சாமியிடம் தொடர்பு கொண்டு இருந்தோமே நமக்கு இதெல்லாம் தெரியாமல் போயிற்றே...! என்று இருக்கலாம்.

1.உங்களில் விளைந்ததுதான் இனி வருவோர்க்கு அதன் உணர்வின் சக்தி கொண்டு அவர்கள் உடலில் விளையச் செய்கின்றோம்.

2.நீங்கள் குருவுடன் தொடர்பு கொண்ட... உங்களில் விளைந்த உணர்வுகள்தான்

3.பிந்தி வருவோர்க்கு இந்த உரமான சத்தும் கிடைக்கப் பெறுகின்றது என்பதனை உணர்தல் வேண்டும்.




# வைகுண்ட ஏகாதசி - சொர்க்க வாசல் திறப்பு

"வைகுண்ட ஏகாதசி" என்ற நிலைகளைக் கொடுத்த ஞானிகள் பெருமாள் விஷ்ணு ஆலயங்களில் "சொர்க்கவாசல்" என்ற நிலைகளை

உருவாக்கி மனிதர்கள் தம்மிடத்தில் உள்ள நல்ல குணங்களைக் காக்கும் நிலையைத் தெளிவாக்கினார்கள்.

அதாவது நமது மூக்கு நமக்கு முதல் வழி… நேர்வழி. நாம் நமது கண் கொண்டு பார்க்கும் உணர்வுகளைச் சுவாசிக்கின்றோம். நமது உயிர் நாம் சுவாசித்த உணர்வுகளை அதனின் உணர்வின் சக்தியாக நமது உடலில் அமைத்து விடுகின்றது.

1.நாம் எந்த குணத்தை எண்ணுகின்றோமோ அந்தக் குணத்தின் அணுவாக நமது உடலில் விளைந்து

2.பின் அந்த அணு அதனின் குணத்தின் சத்தைக் காற்றில் கலந்திருப்பதை

3.நம் சுவாசத்தின் வழிக்கூடி நுகர்ந்து… தன்னுள் கவர்ந்து தன்னை வளர்த்துக் கொள்கின்றது.

நாம் எந்த குணத்தை எடுத்தோமோ அந்தக் குணத்தை நாம் சுவாசிக்கும் பொழுது “அது உயிரில் மோதி…” அதனின் உணர்வின் சத்தை அறியச் செய்கின்றது… உணரச் செய்கின்றது.

ஆனால் அதனின் உணர்ச்சிகள் நமது உடலில் இயங்கி அதற்குத் தக்கவாறு நமது உடலை இயக்கிக் கொண்டுள்ளது என்ற நிலையை நமக்கு உணர்த்துவதற்காக ஞானிகள் “சொர்க்கவாசல்…” என்ற நிலைகளை ஆலயங்களில் ஏற்படுத்தினார்கள்.

நாம் வைகுண்ட ஏகாதசியன்று என்ன செய்கின்றோம்…?

இரவு முழுவதும் கண் முழித்திருந்து காலை 4.00 மணிக்கெல்லாம் சொர்க்கவாசல் திறப்பார்கள் என்று கோவிலுக்குச் செல்கிறோம்.

சொர்க்கவாசல் வழி சென்றால் சொர்க்கத்தை அடைவோம்…! என்ற எண்ணத்துடன்தான் நாம் செல்கின்றோம்.

1.இது எப்படி இருக்கிறது…? என்றால் ஏட்டில் சுரைக்காயை வரைந்து

2.அதைக் குழம்பில் போட்டுச் சமைத்துச் சாப்பிடுவது போன்று இருக்கின்றது.

இரவு உணவு உட்கொள்ளாது விடிய விடிய விழித்திருந்து 4.00 மணிக்கெல்லாம் ஆலயத்திற்குச் சென்று அங்கே சொர்க்கவாசலைத்

திறந்ததும் கூட்டத்துடன் முண்டியடித்து மோதிக் கொண்டு சென்று அங்கே வைத்திருக்கும் சிலைக்கு அபிஷேகம் ஆராதனை அர்ச்சனைகள் செய்தால் அந்தத் தெய்வம் நமக்கு நல்லது செய்யும்... நம்மைச் சொர்க்கத்திற்கே அழைத்துச் செல்லும்...! என்று "சாங்கிய சாஸ்திரங்களை வைத்துத்தான்" நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாம் பேருண்மையின் தன்மைகளைக் காண முடியாத நிலைகளில்தான் இருக்கின்றோம்.

1.பேருண்மைகளை யாம் உங்களுக்கு வெளிப்படையாக இப்பொழுது உபதேசித்தாலும்

2."இது என்ன புதிதாக இருக்கின்றது...?" என்று புதிர் போட்டுக் கேள்வி கேட்டு

3.கேள்விக் குறியாகத்தான் யாம் உபதேசிக்கும் உணர்வுகளை உங்களுக்குள் பதிவு செய்து கொள்கின்றீர்கள்.

யாம் உபதேசிப்பதைக் கேட்டாலும் புதிதாக இருக்கின்றது புதிராக இருக்கின்றது என்றும் இதனின் உணமையை உணர்ந்து கொண்டாலும்,

1.மற்றவர்கள் இதைப் பெற முடியுமா...? இதன்வழி பின்பற்றி நடப்பார்களா...? என்று

2.நாம் மற்றவர்களைப் பற்றித்தான் எண்ணத் தோன்றுகின்றதே தவிர

3.நாமும் பெறுவோம் நம்மைச் சார்ந்தவர்களையும் பெறச் செய்வோம் மற்ற அனைவரையும் பெறச் செய்வோம் என்ற

4.இந்த உணர்வுகள் நம்மிடத்தில் இன்னும் வளரவில்லை.

ஞானிகள் உருவாக்கிக் கொடுத்த பேருண்மையின் தன்மைகள் நம் மனதில் இருந்து மறைந்தே போய்விட்டது.

ஆனால் மகரிஷிகள் தமது உடல்களில் விளைவித்து வெளிப்படுத்திய உணர்வுகளைச் சூரியனின் காந்தப் புலனறிவு கவர்ந்து நமது பூமியில் படரச் செய்துள்ளது... அது அழியவில்லை.

அவர்கள் சப்தரிஷி மண்டலமாகவும் துருவ நட்சத்திரமாகவும் இருந்து ஒளிச்சரீரமாக வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

அவர்கள் இந்துப் பூமியில் மனிதர்களாக வாழ்ந்த காலங்களில் மனித வாழ்க்கையில் வரும் தீமைகளை அகற்றி தீமைகள் தம்மைச் சாராத நிலைகள் கொண்டு உணர்வுகளை ஒளியாக மாற்றியவர்கள்.

அவ்வாறு மாற்றிய உணர்வுகளை அவர்கள் தம் உடலில் விளைய வைத்து வெளிப்படுத்திய உணர்வைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்து அலைகளாக இந்தப் பூமியில் படரச் செய்துள்ளது.

அவர்கள் மனிதச் சரீரத்தில் வாழ்ந்த காலத்தில் பிறவியில்லா நிலை பெறும் நிலையாகத் தமது உணர்வினை ஒளியாக மாற்றி உயிருடன் ஒன்றச் செய்து "வேகா நிலை" என்ற நிலையை அடைந்தார்கள்.

1.இந்தப் பேரண்டத்தில் எத்தகைய மாற்றங்கள் நடைபெற்றாலும் இவர்கள் உயிர் அழிவதில்லை
2.உடலில் இருந்து ஒளியாக மாற்றிய உணர்வுகளும் மாறுவதில்லை.
3.ஒளியின் சரீரமாக உயிருடன் ஒன்றி இன்றும் விண்ணின் ஆற்றலை தம்முள் ஒளியாக மாற்றிக் கொண்டேயுள்ளார்கள்.

இதன் நிலைகளை நாமும் பெற வேண்டும் எனும் நிலைக்காகத்தான் அன்று ஞானிகள் நமது உடலுக்குள் இருக்கும் நல்ல குணங்களைச் சீராக பயன்படுத்தச் செய்து நமது வாழ்க்கையில் சொர்க்கத்தைப் பெறும் நிலையாகவும்... "சொர்க்கவாசலை எதன் வழி கொண்டு திறக்க வேண்டும்...?" என்பதையும் ஞானிகள் நமக்கு உணர்த்தினார்கள்.

ஆனால் யாரும் அதை பின்பற்றவில்லை. அபிஷேகம் ஆராதனை செய்தாலே போதும்...! என்ற நிலைக்குச் சென்று விட்டோம்.

மெய்யுணர்வை நமக்குள் நுகர்ந்து நம் உயிருக்குள் இந்த உணர்வினை அபிஷேகம் செய்து மகரிஷிகளின் அருள் உணர்வை நம் உடலுக்குள் பரவச் செய்து அதனை ஆராதனையாக்கி நம் உடலில் இருக்கும் நல்ல அணுக்களுக்கு அருள் ஞானிகளின் உணர்வை உணவாகக் கொடுத்து அதனின் நிலையை வளரச் செய்வதற்குத்தான் ஆலயங்களில் சொர்க்கவாசல் என்ற நிலைகளை உருவாக்கிக் கொடுத்தார்கள்.

நாம் ஒவ்வொரு ஆலயங்களுக்குச் செல்லும் பொழுதும் நேர் வாசல் மூலம் தான் செல்கின்றோம். ஆனால்
1.வைகுண்ட ஏகாதசி அன்று "சொர்க்கவாசல்" என்று மற்றொரு வாசல் (வடக்கு வாசல்) மூலம் உள்ளே வரும்படிச் செய்கின்றார்கள்.
2.நாம் ஏற்கனவே சுவாசித்த பாதையை விட்டு விட்டு

3.நம்மை இயக்கும் உயிரான ஈசனை மதிக்கும் நிலையாக... ஆலயங்களில் செல்லும்படிச் செய்கின்றார்கள்.

4.அந்த வாசல் (உயிர்) வழியாகச் சென்று துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை நாம் பெற வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும். துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் எங்கள் உடல் முழுவதும் படர்ந்து எங்கள் உடலில் உள்ள ஜீவான்மா ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற வேண்டும் என்று இதனின் உணர்வை நமக்குள் செலுத்த வேண்டும்.

பின் இந்த ஆலயம் வருவோர் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும். துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் அவர்கள் உடல் முழுவதும் படர்ந்து அவர்களது உடலில் உள்ள ஜீவான்மா ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற வேண்டும் என்று ஆலயம் வருவோர் அனைவரையும் எண்ணும்படிச் செய்தார்கள் ஞானிகள்.

அவர்கள் உணர்த்திய உணர்வின்படி

1.மூக்கு வழி சுவாசிப்பதைக் காட்டிலும்

2.புருவ மத்தியில் நல்லுணர்வை ஈர்த்துப் பருகும் நிலையை நாம் பெற வேண்டும்

3.நமக்கு சொர்க்கவாசல் - புருவ மத்தி வழி... உயிர் வழி.

இப்படி நாம் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று நமக்குள் உயிர் வழி சேர்த்துப் பழக வேண்டும்.

வைகுண்ட ஏகாதசி அன்று ஆலயங்களுக்குச் செல்லும் பொழுது இந்த ஆலயம் வருவோர் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் தெய்வ குணங்கள் பெற வேண்டும் தெய்வ நிலைகள் பெற வேண்டும் அவர்கள் குடும்பங்களில் அமைதி பெற வேண்டும் அருள் ஒளி படர வேண்டும் என்று நாமும் மற்றும் அனைவரும் எண்ணும் பொழுது நம்முள்ளும் மற்றும் ஆலயம் வருவோர் அனைவரிடத்திலும் நல்ல உணர்வுகள் விளைகின்றன.

1.அந்த உணர்வுகள் நம்முள் விளைந்து ஒளியின் சரீரம் பெறும் தகுதி நாம் அனைவரும் பெறுகின்றோம்

2.ஞானிகள் மகரிஷிகள் சென்ற சப்தரிஷி மண்டல எல்லையை நாம் அனைவரும் அடைகின்றோம்.

இது தான் வைகுண்ட ஏகாதசி...!

https://omeswara.blogspot.com/
https://eswarabattar.blogspot.com/
https://omeswaragurudeva.blogspot.com/
https://youtu.be/gtttKHEOXhI
https://eswarayagurudevar.com/